



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:276 | 21-04-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# ஜம்மு காஷ்மீரில் பேருந்து கவிழ்ந்து விபத்து: 22 பேர் உயிரிழப்பு



**உதம்பூர், ஏப்.21:**

ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் இன்று காலை பயணிகள் பேருந்து ஒன்று சாலையில் இருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் 22 பேர் உயிரிழந்தனர். 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

ராம்நகரிலிருந்து உதம்பூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து, காலை சுமார் 10 மணியளவில், வளைவு ஒன்றில் திருப்பும்போது கட்டுப்பாட்டை இழந்து, மலையோரப் பள்ளத்தாக்கில் விழுந்தது. இவ்விபத்தைத் தொடர்ந்து, ராணுவம், காவல்துறை மற்றும் உள்ளூர் மக்கள் அடங்கிய மீட்புக் குழுவினர் இணைந்து, காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்விபத்தில் காயமடைந்த பல பயணிகள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்; இவர்களில் பலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் விபத்து குறித்து இரங்கல் தெரிவித்த குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, “ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் பலர் உயிரிழந்தது குறித்து அறிந்து நான் ஆழ்ந்த துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் தங்கள் உயிரை இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துயர சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, “ஜம்மு காஷ்மீரின் உதம்பூரில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் பலர் உயிரிழந்தது குறித்து அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன்” என்று தெரிவித்தார். இந்த விபத்து குறித்துப் பேசிய ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, “துயரம் நிறைந்த இந்த நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அரசு உறுதுணையாக நிற்கும். அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது,” என்றார்.

## இன்றைய பஞ்சாங்கம்

21.04.2026 சித்திரை 8
செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் 6.01

**திதி:**
இன்று காலை 8.47 வரை சதுர்த்தி பின்பு பஞ்சமி.

**நட்சத்திரம்:**
இன்று காலை 6.15 வரை ரோகிணி பின்பு மிருகசீரிடம்.

**யோகம் :**
இன்று மாலை 4.33 வரை சோபனம் பின்பு அதிகண்டம்.

**கரணம்**
இன்று காலை 8.47 வரை பத்திரை பின்பு இரவு 7.35 வரை பவம் பின்பு பாலவம்

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.15 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

**சந்திராஷ்டமம் :**
இன்று காலை 6.15 வரை சுவாதி பின்பு விசாகம்.

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
பிற்பகல் 3.00 – 4.30.

**எமகண்டம்**
காலை 9.00 – 10.30.

**குளிகை**
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# இலங்கை சுற்றுப்பயணம் நிறைவு; இந்தியா புறப்பட்டார் சி.பி.ராதாகிருஷ்ணன்



**கொழும்பு, ஏப்.21:**

இந்திய துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் 2 நாள் அரசு முறை பயணமாக நேற்று இலங்கை சென்றார். 49 பேர் அடங்கிய தூதரக அதிகாரிகள் குழுவுடன் இலங்கை சென்ற சி.பி.ராதாகிருஷ்ணனை, விமான நிலையத்தில் அந்நாட்டின் விளையாட்டுத்துறை மந்திரி சுனில் குமார கமகே மற்றும் பல்வேறு முக்கிய அதிகாரிகள் நேரில் சென்று வரவேற்றனர்.

இந்தியாவின் துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் இலங்கைக்கு சி.பி. ராதாகிருஷ்ணன் மேற்கொண்ட முதல் பயணம் இதுவாகும். தொடர்ந்து இலங்கை அதிபர் அனுர குமார திசநாயகேவை சி.பி.ராதாகிருஷ்ணன் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது இருநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

குறிப்பாக இந்திய அரசின் உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வீட்டுவசதித் திட்டம் மற்றும் இலங்கையில் டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக இந்தியா வழங்கிய 450 மில்லியன் டாலர் நிதியுதவியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், இலங்கையில் உள்ள தமிழர்களுக்கான மறுவாழ்வு திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்புகள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக கலந்துரையாடினர். பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, முல்லைத்தீவில் ஒரு மருத்துவ வார்டு கட்டுதல், தெகியட்டகண்டியா பகுதியில் குறைமாதக் குழந்தை நலப் பிரிவு நிறுவுதல், முத்தூரில் கண், காது, மூக்கு, தொண்டை மற்றும் மனநலப் பிரிவுகளைக் கட்டுதல் உள்ளிட்ட 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர்.

தொடர்ந்து இலங்கை பிரதமரும், கல்வி மந்திரியுமான ஹரினி அமரசூரியாவை துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இலங்கை கல்வித்துறையில் இருநாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடினார்.

மேலும், இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் கல்வி அறக்கட்டளையின் கல்வி உதவித்தொகை திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதோடு, இந்திய வீட்டுவசதித் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ், இலங்கையில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதையும் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.

இதையடுத்து, இலங்கையில் தனது சுற்றுப்பயணத்தை நிறைவு செய்த துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் டெல்லி புறப்பட்டார்.

# ‘பயணிகளின் வசதி, கண்ணியத்தை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுங்கள்’



**புதுடெல்லி, ஏப்.21:**

இந்திய ரெயில்வே துறையின் பயிற்சி அதிகாரிகள் குழுவினர் டெல்லி ஜனாதிபதி மாளிகையில் இன்று ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்தித்து பேசினர். அவர்களிடம் பேசியபோது ஜனாதிபதி திரவுபதி முர்மு கூறியதாவது;-

“இந்திய ரெயில்வே, உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான வலையமைப்புகளில் ஒன்றாகும். அது பயணிகளையும், பொருட்களையும் மட்டுமல்லாமல், கோடிக்கணக்கான மக்களின் லட்சியங்களையும் சுமந்து செல்கிறது. இந்த அமைப்பை நிர்வகிக்க உங்களுக்கு தொழில்நுட்பத் திறன் மட்டுமல்ல, நேர்மை, இரக்கம் மற்றும் ஆழ்ந்த பொறுப்புணர்வும் தேவைப்படும். பயணிகளின் பாதுகாப்பு, வசதி மற்றும் கண்ணியத்தை மையமாகக் கொண்டு நீங்கள் எப்போதும் முடிவுகளை எடுக்க வேண்டும்.

ரெயில் பாதைகளும், நெடுஞ்சாலைகளும் வெறும் போக்குவரத்து அமைப்புகள் மட்டுமல்ல; அவை பொருளாதார விரிவாக்கம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கான கருவிகளாகும். ஒரு ரெயில் தொலைதூர கிராமத்தை அடையும்போதோ அல்லது ஒரு நெடுஞ்சாலை தொலைதூரப் பகுதியை இணைக்கும்போதோ, அது அப்பகுதிகளின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு மகத்தான வாய்ப்புகளைத் திறக்கிறது. உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவது, மின்மயமாக்கலை விரிவுபடுத்துவது, மேம்பட்ட பாதுகாப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்துவது மற்றும் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவது என, எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ரெயில்வே தன்னை மாற்றியமைத்து வருகிறது. இந்த மாற்றத்திற்கு நீங்கள் திறம்பட பங்களிக்கலாம். ஒரு செயல்திறன் மிக்க அமைப்பு, அனைவரையும் உள்ளடக்கியதாகவும், விளிம்புநிலை மக்கள் அணுகக்கூடியதாகவும் இருக்க வேண்டும். யாரும் பின்தங்கிவிடாத வளர்ச்சியே உண்மையான வளர்ச்சியாகும். வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் இவை இன்றியமையாத அடித்தளக் கற்கள் ஆகும். மேலும் இந்த மாற்றத்தில் இளம் அதிகாரிகளான

# பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலி எண்ணிக்கை 25 ஆக உயர்வு



**விருதுநகர், ஏப்.21:**

விருதுநகர் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் காயம் அடைந்து தீவிர சிகிச்சை பெற்று வந்த மேலும் 2 பெண்கள் சிகிச்சை பலனின்றி இன்று (திங்கள் கிழமை) காலை உயிரிழந்தனர். இதையடுத்து பலி எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

விருதுநகர் அருகே உள்ள கட்டனார்பட்டியல் பட்டாசு ஆலையில் நேற்று மாலை ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 23 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். இவர்களில் 19 பேர் நேற்று இரவு அடையாளம் காணப்பட்டனர். 4 பேர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில் இந்த விபத்தில் பலத்த தீக்காயம் அடைந்து விருதுநகர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த சேர்வைக்காரன் பட்டியைச் சேர்ந்த பேச்சியம்மாள் (51), திருத்தங்கலைச் சேர்ந்த பஞ்சவர்ணம் (56) ஆகியோர் உயிரிழந்தனர். இதையடுத்து இந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

# விஜய் வேட்புமனுவில் சொத்து மதிப்பை குறைத்துக் காட்டியது முறைகேடானது: உயர் நீதிமன்றம்



**சென்னை, ஏப்.21:**

இரு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்த தவெக தலைவர் விஜய், ஒரு தொகுதியில் 100 கோடி ரூபாய் சொத்து மதிப்பை குறைத்து காட்டியது முறைகேடானது என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தவெக தலைவர் விஜய் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இரு தொகுதிகளிலும் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் இடம் பெற்றுள்ளதாகவும், பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில் சொத்துக் கணக்கை மறைத்துள்ளதாகவும் கூறி, வியாசர்பாடியைச் சேர்ந்த பெரம்பூர் வாக்காளரான விக்னேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், ‘பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்பு மனுவில், தனது சொத்து மதிப்பு, 115 கோடியே 13 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் எனக் குறிப்பிட்டிருந்த விஜய், திருச்சி கிழக்கு தொகுதிக்கான வேட்புமனுவில், 220 கோடியே 15 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி கிழக்கு தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறிப்பிட்ட சொத்து மதிப்பை விட, பெரம்பூரில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறைவாக காட்டியது உண்மைத் தகவலை மறைத்ததற்கு சமம் என்பதால், விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் தெரிவித்துள்ள சொத்து விவரங்கள் முழுமையானவையா, உண்மையானவையா என விசாரிக்க, வருமான வரித் துறைக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் உத்தரவிட வேண்டும்’ என மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஜே.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இரு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தவர், ஒரு தொகுதியில் 100 கோடி ரூபாய் வரை குறைத்து காட்டியது முறைகேடானது என நீதிபதிகள் தெரிவித்தனர்.

பின்னர் இந்த வழக்கு தொடர்பாக பதில் அளிக்கும்படி வருமான வரித் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.






## திருக்குறள் குறள்-596

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து



எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ் வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

## சிந்திக்க ஒரு நொடி



கிடைக்காததை
துரத்துவதும் ....

கிடைத்ததை
மதிக்காததும் தான்
வாழ்க்கை..,,

**உஷா முத்துராமன்**

## அட்ஷய திருதியை கருட ஸேவை



**தஞ்சாவூர்,ஏப்.21:**
தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் முதல் திருவிவான இன்று (20.04.2026) திங்கட்கிழமை அட்ஷய திருதியை முன்னிட்டு காலை சுவாமி கருட ஸேவையில் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், அட்ஷய திருதியை கருட ஸேவை குழு, ஸ்ரீ ராமானுஜர் ஸேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.
செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## குமிளங்காடு ஆதிநாக அதர்வன பத்ரகாளிக்கு அமாவாசை பூஜை



**சீர்காழி , ஏப் , 21:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா புத்தூர் பாலிடெக்னிக் அருகில் புண்ணிய பூமியாம் குமிளங்காடு ஆதிநாகலோகத்தில் அருள் புரியும் ஸ்ரீ சுயம்பு ஆதிநாகாத்தம்மன் சக்தி ஆலயத்தில் வடக்கு நோக்கி காட்சி தரும் அருள்மிகு ஆதிநாக அதர்வனபத்ரகாளி தேவிக்கு சித்திரை மாத அமாவாசை அர்த்தஜாம பூஜை வெள்ளிக்கிழமை இரவு சிறப்பாக நடைபெற்று பின்பு அனைவருக்கும் அருள்வாக்கு வழங்கி ஆசி வழங்கப்பட்டது. கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# ராசிபுரத்தில் ரூ.3 கோடி மதிப்பில் மினி ஸ்டேடியம் இளைஞர்களின் விளையாட்டு கனவுக்கு புதிய தளம்



**இராசிபுரம், ஏப்.21:**
ராசிபுரம் நகர மையப்பகுதியில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மினி ஸ்டேடியம் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

தமிழக முதலவர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசிலும், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலிலும், ராசிபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் அமைச்சருமான டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களின் முயற்சியில் இந்த மினி ஸ்டேடியம் அமைக்கப்படுகிறது.

ராசிபுரம் அண்ணா சாலை அரசினர் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள விளையாட்டு திடலில் அமைக்கப்படும் இந்த மினி ஸ்டேடியம், கால்பந்து மற்றும் கிரிக்கெட் விளையாடுவதற்கான பெரிய அளவிலான டர்ஃப் மைதானம், சிந்தடிக் பேஸ்கெட் பால் கிரவுண்ட், ஷட்டில் கோர்ட், ஹைடெக் ஜிம், மின்விளக்குகள் மற்றும் கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் உருவாக்கப்படுகிறது.

இந்த திட்டம் மூலம் திறமை இருந்தும் சரியான வசதிகள் இல்லாததால் முன்னேற முடியாத சாமானிய மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு புதிய வாய்ப்பு உருவாகியுள்ளது. இம்மினி ஸ்டேடியம், அவர்களை விளையாட்டுத்துறையில் அடுத்த கட்டத்துக்கு முன்னேறச் செய்யும் முக்கிய தளமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய சிறப்பான திட்டத்தை ராசிபுரம் தொகுதி இளைஞர்களுக்காக செயல்படுத்திய அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களுக்கு இளைஞர்கள் நன்றியும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

## சித்திரை மாதம் கிருத்திகை வழிபாடு



**கடலூர், ஏப்.21:**
கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி அருள்மிகு மீனாட்சி உடனரை வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் சித்திரை மாத கிருத்திகை முன்னிட்டு அருள்மிகு வள்ளி தேவசேனை சமேத ஆறுமுகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளருக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிப்பு





**திருவண்ணாமலை, ஏப்.21:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் கு. பிச்சாண்டி அவர்களுக்கு ஆதரவாக திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எ. வ. வேலு அவர்கள் கீழ்பென்னாத்தூர் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி







சென்னை திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் கோடை வெயில் தாகம் தனிவதற்கு பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில்






**கரூர், ஏப்.21:**
கரூர் வாசவி கன்யகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தில் வாசவி ஜெயந்தி விழாவை முன்னிட்டு 5-ஆம் நாள் மூலவர் வெள்ளி கவசத்துடன் வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன், உற்சவர் ஸ்ரீ அம்பாள் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## அட்சய திருதியை நாளில் சிறப்பு அலங்காரம்..!



**வந்தவாசி, ஏப் 21:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் நேற்று அட்சய திருதியை முன்னிட்டு மூல மூர்த்திகள் சொர்ண அலங்காரத்தில் பட்டாடை அணிந்து பக்தர்களுக்கு நின்ற கோலத்தில் அருள் பாலித்தனர்.

மேலும் விசேஷ பூஜைகள் நடைபெற்றன. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது. **பா. சீனிவாசன், வந்தவாசி.**

# அ.தி.மு.க.வேட்பாளர் கி.மாணிக்கத்தை வெற்றி உறுதி என்று மலர் தூவி வாழ்த்திய மூதாட்டி



**வாடிப்பட்டி, ஏப்.21:**
மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கி.மாணிக்கம் வாடிப்பட்டி பகுதியில் இரட்டைஇலை சின்னத்தில் வாக்களிக்கவேண்டி தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பொதுமக்களிடம் கூறியதாவது.- வாடிப்பட்டியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை முறையாக தினம்தோறும் திறந்து பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று சோழவந்தான் தொகுதியில் பொது மக்களின் தேவையறிந்து அடிப்படைபணிகளை செய்து முடித்தேன். 70கண்மாய்கள் குடிமராமத்து பணிசெய்து சீரமைக்கப்பட்டது.

7ஆயிரம்பயனாளிகளுக்கு வீட்டுமனைபட்டா, 15ஆயிரம் முதியோர்;, விதவை, மாற்றுதிறனாளிகளுக்கு உதவித்தொகைபெற்று தந்தது. வாடிப்பட்டி பஸ்நிலையத்தை சீரமைத்து புதியதாக வணிகவளாகங்கள் கட்டினேன். சோழவந்தான் வாடிப்பட்டி அரசுமருத்துவமனைகளிலும் கூடுதல் கட்டிடங்கள், ரத்தசுத்திகரிப்பு இயந்திரம், சுகாதாரகுடிநீர் இயந்திரங்கள் அமைத்துகொடுத்தேன். தாதம்பட்டி-நீரேத்தான் மயான, மந்தை மேம்பாடு பணி, ஒட்டான்குளம்சீரமைப்பு, ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டிடம், பத்திரபதிவு கட்டிடம், ரேசன்கடைகட்டிடம், பேரூராட்சியில் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து 21ஃ2 ஏக்கர் கையகப்படுத்தி திடக்கழிவு மேலாண்மை கிடங்கி மேம்பாடுசெய்தேன்.

வாடிப்பட்டி நகர்பகுதியில் விடுபட்டசாலை, புதுக் கண்மாய் சாலை விரிவாக்க மேம்பாடு, துணைமின்நிலையம், விவசாயிகளின் நலனில் அக்கரைகொண்டு ஆதான்ஓடை துhர்வாரிகரை அமைத்து சீரிபடுத்தியது. சோழவந்தான் பகுதியில் பஸ்நிலையம், தினசரிசந்தைசீரமைப்புபணிகள், ரயில்வேமேம்பாலம் பணி, சாலை, குடிநீர்;, வாடிகால் பணிகள்,மண்ணாடிமங்கலம் இரும்பாடி பாலம் பணிகள் செய்தேன். அலங்காநல்லுhரில் தீயணைப்புநிலையம், சார்பதிவாளர்அலுவலகம், துணைமின்நிலையம் கொண்டுவந்தேன். பாலமேடு சாத்தையாறு அணை துhர்வாரிபுணரமைப்பு செய்து மீன்பண்ணை அமைத்தது, பாலமேடு சந்தைபுதியகட்டிடம், தொகுதி முழுவதும் பிரதான சாலைகள் அமைத்தது அலங்காநல்லூர் குமாரம், அலங்காநல்லூர் சத்திர வெள்ளாளப்பட்டி, தனிச்சியம் சத்திரப்பட்டி. சோழவந்தான் கரட்டுப்பட்டி, சோழவந்தான் சமயநல்லுhர், வாடிப்பட்டி கரட்டுப்பட்டி வரை சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டது.

அய்யங்கோட்டை, வெள்ளையம் பட்டி, முடுவார்பட்டி, சத்திர வெள்ளாளபட்டி கால்நடை மருத்துவமனைகட்டிடம், வாடிப்பட்டிஅரசுபெண்கள்மேல்நிலைப்பள்ளி தடுப்புசுவர், தேனுhர் வைகையில்தடுப்பனைகட்டியது உள்ளிட்டபல பணிகள் செய்தேன். இனி வரும் காலங்களில் காலத்தின்தேவையறிந்து விரிவாக்கத்துடன் தொடர்பணிசெய்திட இரட்டைஇலைசின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றிபெற செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறுஅவர் கூறினார்.

முன்னதாக அதிமுக வேட்பாளர் மாணிக்கத்திடம் மூதாட்டி ஒருவர் மலர் தூவி தேர்தலில் வெற்றி உறுதி என்று வாழ்த்து கூறினார்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜனை ஆதரித்து அமித்ஷா பிரசாரம்



தமிழக சட்டசபை தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் அதிமுக கூட்டணியில் மயிலாப்பூர் தொகுதியில் பாஜக வேட்பாளராக தமிழிசை சவுந்தரராஜன் களமிறங்கியுள்ளார். இந்நிலையில், பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜனை ஆதரித்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா மயிலாப்பூரில் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

### தமிழகத்தில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் - அண்ணாமலை



தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:-

கடந்த 5 ஆண்டுகளாக, தமிழக மக்கள் அனுபவித்து வரும் தீயசக்தி திமுகவின் காட்டாட்சியில், பெண்களுக்கு பாதுகாப்பில்லை, மக்களுக்கு நிம்மதியில்லை, தமிழகத்தில் வளர்ச்சியில்லை. இந்நிலையை மாற்றி தமிழகத்தில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும், மக்களுக்கான நல்லாட்சி வழங்க வேண்டும் என்ற உறுதியோடு தேர்தல் களத்தில் வெற்றி நடைப்போட்டு வரும் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் நமது அதிமுக வெற்றி வேட்பாளர் ஆர். மனோகரனை ஆதரித்து நடைபெற்ற பிரசார கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினேன்.

ஸ்ரீரங்கத்தின் திமுக சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, அதிகளவில் கனிம வளங்களை கொள்ளையடித்தது தொடர்பாக செய்தி சேகரிக்க சென்ற தனியார் தொலைக்காட்சி நிருபரை கொலைவெறியோடு தாக்கினார். திண்டுக்கல்லில் காணாமல் போன கருப்பசாமி என்பவரின் சடலம் இவரது குவாரியில் இருந்து மீட்கப்பட்டதையும் நாம் பார்த்தோம். மேலும், திமுக மூத்த தலைவர் திருச்சி சிவாவின் வீட்டில் தாக்குதல் நடத்தியதும் இவர் தான். இவருக்கு மீண்டும் வாய்ப்பளித்தால் திமுகவால் டெபாசிட் கூட வாங்க முடியாது என்பதை அறிந்து இவருக்கு வாய்ப்பளிக்கவில்லை. ஆனால், ஸ்ரீரங்கம் மக்கள் திமுகவில் யார் நின்றாலும் அவர்களுக்கு படுதோல்வியை நிச்சயம் பரிசளிக்க காத்திருக்கிறார்கள். பெண்களுக்கு பாராளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் 33% இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்பதற்காக மத்திய பாஜக அரசு கொண்டு வந்த சட்டத்திருத்தத்தை திமுகவும், காங்கிரஸ் கட்சியும் கூட்டுச்சதி செய்து தோற்கடித்திருக்கிறார்கள். பெண்களின் முன்னேற்றத்திற்கு எதிரான திமுக, காங்கிரஸ் கட்சிகளை தமிழக சகோதரிகளும், தாய்மார்களும் விரட்டியடிக்க வேண்டும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திமுக கூட்டணி சுயநலம் பிடித்தது: மத்திய மந்திரி பியூஸ் கோயல் தாக்கு

தமிழக பா.ஜனதா தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஸ் கோயல் சென்னை கிண்டியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிரதமர் மோடியின் சீரிய முயற்சியால் 2023-ல் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்டது. மக்களவை இடங்களை அதிகரித்து, அதில் மூன்றில் ஒரு பங்கு அதாவது 272 இடங்களை பெண்களுக்கு ஒதுக்கீடுசெய்ய அவர் முயற்சிமேற்கொண்டார். ஆனால், தி.மு.க. மற்றும் காங்கிரஸின் சுயநல அரசியலால் இந்தத் திருத்தங்களை எங்களால் நிறைவேற்ற முடியவில்லை. தி.மு.க., காங்கிரஸ் எப்போதும், வடக்கு-தெற்கு, கிழக்கு-மேற்கு என நாட்டைப் பிரிக்கவே நினைக்கிறார்கள். ஸ்டாலின் ஒரு பொய்யர். பொய்யான தகவல்களைப் பரப்பும் உங்களை தமிழகப் பெண்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். ஸ்டாலின் தனது மகன் உதயநிதியை முதல்வராக்க மட்டுமே இந்தத் தேர்தலைச் சந்திக்கிறார் என்பது ராகுல்காந்திக்கும் தெரியும். நான், மு.க.ஸ்டாலினுக்கு ஒரு சவால் விடுகிறேன். ‘உதயநிதியை ஒருபோதும் முதல்-அமைச்சராக்க மாட்டேன்’ என்று ஸ்டாலினால் தமிழக மக்களிடம் அறிவிக்க முடியுமா?” என்றார்.

## மகளிர் இடஒதுக்கீட்டை தடுப்பதாக அபாண்டப் பழி: முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

மகளிர் இடஒதுக்கீட்டை தடுப்பதாக திமுக காங்கிரஸ் மீது பாஜகவினர் அபாண்டமாக பழி சுமத்துகின்றனர். ஏப்ரல் 17-ம் தேதியோடு என்டிஏ கூட்டணி காலியாகிவிட்டது என ஒசூர் தேர்தல் பிரச்சாரத்தில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் பேசினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அந்திவாடியில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் பிரச்சாரம் மேற்கொண்டனர். இதில், முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தமிழகத்தின் உரிமையை திமுகவால் காப்பாற்ற முடியும் என்பதை நிரூபித்துவிட்டு கெத்தாக வந்து இங்கு நிற்கிறேன். ராகுல் காந்தி தமிழகத்திற்கு பிரச்சாரம் செய்ய வந்தார்.



அப்போது அவர் பேசும் போது, “மோடியால் ஸ்டாலினை கண்ட்ரோல் செய்ய முடியாது, அடிமை அதிமுக ஆட்சியை தமிழகத்தில் நிறுவ பார்க்கிறார்” என பேசினார். டெல்டா மாவட்டத்துக்கு ராகுல் வந்திருந்தார். தென்கோடியில் பிரச்சாரத்தில் இருந்தார். நான் சென்னையில் பிரச்சாரம் செய்தேன். ராகுல் காந்தியும் நானும் சுற்றிச் சுற்றி பிரச்சாரம் செய்து வெற்றியை உறுப்படுத்தி வருகிறோம்.

தமிழகத்தில் 40 ஆயிரம் தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் மத்திய அரசு தமிழகத்தின் வளர்ச்சித் திட்டப் பணிகளை தடுக்கிறது. இதனை தட்டிக்கேட்க முடியாமல் பழனிசாமி உள்ளார். வாக்கு கேட்டு வரும் பழனிசாமியிடம் கேள்வி கேளுங்கள். காரில் நான் கிரிக்கெட் பார்த்தது தவறு என பழனிசாமி கூறுகிறார். முதல்வர் கிரிக்கெட் பார்ப்பது தவறு இல்லை. ஆனால், தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூட்டை டிவியில் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என கூறினாரே அது தான் தவறு. தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பேச வேண்டிய அனைத்தும் அரசு நிகழ்வில் மோடி பேசியது, தேர்தல் விதிமுறை மீறியதாக உள்ளது.

மகளிர் இடஒதுக்கீட்டை தடுப்பதாக திமுக- காங்கிரஸ் மீது பாஜகவினர் அபாண்டமாக பழி சுமத்துகின்றனர். பிரதமர் மோடி அவர்களே, ஏப்ரல் 17-ம் தேதியோடு என்டிஏ கூட்டணி காலியாகிவிட்டது.

தொகுதி மறுவரையறையை நாடாளுமன்றத்தில் நிலைகுலைய வைத்துள்ளோம். திராவிட மாடல் திட்டங்கள் மக்கள் மத்தியில் நன்கு ‘ரீச்’சாகியுள்ளது.

குழந்தைகள் முதல் பெரியவர் வரை திட்டம் சென்றுள்ளது. பிறந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து திட்டம், காலை உணவுத் திட்டம், அரசுப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறை திட்டம், பள்ளிக் கல்வி முடித்த பின்னர் நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணினி வழங்கி உள்ளோம். மீண்டும் திமுக ஆட்சி அமைந்தால், மேலும், 35 லட்சம் பேருக்கு மடிக்கணினி வழங்க உள்ளோம்.

எனது சக்தியை மீறி பிரச்சாரம் செய்கிறேன். 200 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும். திமுக தவிர மற்றவர்களுக்கு போடுகிற வாக்கு பாஜகவிற்கு போடுகிற வாக்காகும்.

தமிழகத்தில் திமுகவிற்கும் என்டிஏ கூட்டணிக்கும் ஜனநாயகப் போர் நடக்கிறது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து தாய் தமிழ் நாட்டை காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## தொகுதி மறுவரையறையை ஸ்டாலின் எதிர்த்தது ஏன்? - கார்கே விளக்கம்

தொகுதி மறுவரையறையை ஸ்டாலின் எதிர்த்தபோது நாடு எச்சரிக்கை அடைந்தது. நாடு காப்பாற்றப்படவே ஸ்டாலின் இதைச் செய்தார் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

ஒசூரில் நடந்த திமுக கூட்டணி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கன்னடத்தில் பேசினார். அவர் பேசியதாவது: முதல்வர் மு.க. ஸ்டாலின் தன்மானத்திற்காகப் போராடக் கூடியவர். காங்கிரஸ், திமுக மகளிருக்கு எதிரான கட்சிகள் இல்லை, சமூகநீதி, ஜனநாயகத்தைப் பின்பற்றக் கூடியவர்கள் நாங்கள். தொகுதி மறுவரையறையைத்தான் நாங்கள் எதிர்த்தோம், மகளிர் இடஒதுக்கீட்டை அல்ல. இவர்களின் நோக்கம் தமிழகம், மேற்கு வங்கத்தில் எதிர்க்கட்சிகளை வெல்ல பெண்களுக்கான இடஒதுக்கீட்டை கொண்டு வந்தனர். மணிப்பூரில் நடந்த கலவரங்களின் போது எங்கே சென்றீர்கள்? விமானத்தில் சுற்றி வந்தீர்கள். பிரதமர் மோடி நாட்டை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்பவர் அல்ல.

ராகுல் காந்தி குமரி முதல் காஷ்மீர் வரை நடைபயணம் மேற்கொண்டார். ஆனால், மோடி தியானம், பூஜை உள்ளிட்டவற்றை செய்து வருகிறார். இவற்றால் பலன் இல்லை. ஸ்டாலின் தொகுதி மறுவரையறையை எதிர்த்தபோது நாடு எச்சரிக்கை அடைந்தது. நாடு காப்பாற்றப்பட ஸ்டாலின் இதைச் செய்தார். வேறு எந்த காரணமும் இல்லை.

நாடு இன்று வளர்ந்துள்ளது என்றால் தென்னிந்தியாவின் மூலமாகவே இருக்க முடியும் என்பதை மறந்துவிடக்கூடாது. வாக்குறுதிகள் அளிப்பது மட்டுமல்ல; அவற்றை நிறைவேற்றியும் காட்டியுள்ளது திமுக. அனைவரும் ஒற்றுமையுடன் திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் கொண்ட கூட்டணியாக ஸ்டாலின் தலைமையில் போராடி வருகிறோம்.

ஸ்டாலின் தனி ஒருவராக போராடவில்லை. அவருக்குப் பின்னால் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. ஸ்டாலினுக்கு நாடே ஆதரவு அளித்து வருகிறது. 12 ஆண்டுகளில் மோடிக்கு இது முதல் தோல்வி; இனி அனைத்திலும் தோல்வியை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் வாக்கு சேகரிப்பு

திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் தவெக தலைவர் விஜய் வேட்பாளராக போட்டியிடுகிறார். திருச்சி கிழக்கு தொகுதிக்குட்பட்ட விமானநிலையம் வயர்லெஸ் சாலை, கே.கே.நகர், காஜாமலை, கொட்டப்பட்டு பகுதிகளில் ரோடு ஷோவில் பங்கேற்று நேற்று வாக்குசேகரித்தார்.

விமான நிலையத்திலிருந்து தனது பிரத்யேக பிரச்சார வேனில் ஏறி வெளியே வந்த விஜய், வேன் மீது நின்றபடி விசில்அடித்து, கையசைத்து வாக்கு சேகரித்தார். வயர்லெஸ் சாலையில் சாலை வலம் சென்றபோது, அங்குள்ள புனித அந்தோணியார் ஆலயத்துக்குச் சென்று தரையில் மண்டியிட்டு சிறிது தொலைவு சென்று ஜெபம் செய்தார். பின்னர், வேனில் ஏறி சாலை வலம் சென்ற விஜய், வேனில் முன்னாள் அமைச்சரும் லால்குடி தொகுதி தவெக வேட்பாளருமான கு.ப.கிருஷ்ணனை ஏற்றிக் கொண்டு வாக்கு சேகரித்தார். கே.கே. நகர் பகுதியில் உள்ள நூருல் ஹுதா பள்ளிவாசலுக்குச் சென்று அதன் தலைவர் மோத்தி ஹாஜியாரை சந்தித்து, திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடும் தனக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.



திருச்சி- புதுக்கோட்டை தேசியநெடுஞ்சாலையில் கொட்டப்பட்டு அருகே உள்ள பச்சநாச்சியம்மன் கோயிலில் தரையில் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டார். அவருக்கு கோயில் நிர்வாகம் சார்பில் விபூதி, குங்குமம் உள்ளிட்டவை வழங்கப்பட்டன. திருச்சி கிழக்கு தொகுதியில் ஒன்றரை மணிநேரம் சாலை வலம் வந்த விஜய் எங்கும் பேசவில்லை.

## வருமானவரித் துறை அதிகாரிகள் தன்னை சிறை பிடித்துள்ளனர்: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு



சோதனை என்ற பெயரில் வருமான வரித்துறை அதிகாரிகள் தன்னை சிறை பிடித்துள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகையின் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள வீடு, மற்றும் மணிமங்கலத்தில் உள்ள வீட்டில் திங்கள் காலை முதல் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கீழ்ப்பாக்கம் வீட்டில் சோதனையிட்டு வந்த வருமானவரித் துறை அதிகாரிகள் தற்போது திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், சோதனை என்ற பெயரில் இந்தி பேசும் அதிகாரிகளுடன் சேர்ந்து வருமானவரித் துறை அதிகாரிகள் என்னை எங்கேயும் போகவிடாமல் சிறை பிடித்துள்ளனர்.

அரசியல் கடமை, மக்கள் சந்திப்பை தடுக்கும் வகையில் சோதனை. அரசியல் உள்நோக்கம் கொண்ட இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ராகுல் காந்தி (திங்கள்கிழமை) பிரசாத்திற்கு தமிழகம் வரும் நிலையில், ராகுல் காந்தியுடன் பிரசாரம் செய்ய செல்வதை தடுக்க முயற்சிப்பதுடன் சோதனை மூலம் அச்சுறுத்த நினைக்கின்றனர் என குற்றச்சாட்டிய செல்வப்பெருந்தகை, என்னை முடக்குவது எந்தவிதத்தில் நியாயம்... எங்களை கட்டிப்போட முடியாது என அவர் கூறினார்.

## தமிழகத்தில் 5-ல் 1 வேட்பாளர் மீது கிரிமினல் குற்ற வழக்கு பதிவாகியுள்ளது!

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றி ஜனநாயக சீர்திருத்த சங்கம் மற்றும் தமிழ்நாடு தேர்தல் கண்காணிப்பு அமைப்பு ஆகியோர் ஆய்வு நடத்தியுள்ளனர்.

2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 5-ல் 1 வேட்பாளர் மீது குற்ற வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மேலும், மொத்த வேட்பாளர்களில் கால் பங்கு கோடீஸ்வரர்கள் என ஜனநாயக சீர்திருத்த சங்கம் மற்றும் தமிழ்நாடு தேர்தல் கண்காணிப்பு அமைப்பு ஆகியோர் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களுடன் பேசிய தமிழ்நாடு தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜோசப் விக்டர் ராஜ் மற்றும் அறப்போர் இயக்கத்தைச் சேர்ந்த ஜெயராம் ஆகியோர் தமிழகத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய ஆய்வை வெளியிட்டனர்.

மொத்தமுள்ள 4,023 வேட்பு மனுக்களில் 3,992 பேரின் வேட்பு மனுக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில், 722 வேட்பாளர்கள் மீது கிரிமினல் குற்றவழக்குகள் பதிவாகியுள்ளன. இது மொத்த வேட்பாளர்களில் 18%. கடந்த 2021 தேர்தலில் 466 (13%) பேர் மீது கிரிமினல் குற்ற வழக்குகள் இருந்த நிலையில் இந்த முறை எண்ணிக்கை உயர்ந்துள்ளது. அதேபோன்று, கடுமையான



குற்றவியல் வழக்குகள் 404 (10%) பேர் மீது பதியப்பட்டுள்ளன. இது, 2021-ல் 207 (6%) ஆக இருந்தது.

கோடீஸ்வர வேட்பாளர்கள் மொத்தம் 981 பேர் இந்த முறை போட்டியிடுகின்றனர். இது 2021-ஐ விட 7% அதிகம். இதில், திமுகவில் அதிகபட்சமாக 170 பேரும், அதிமுக-வில் 160 பேரும், தவெக-வில் 156 பேரும் உள்ளனர். அடுத்ததாக, பாஜக 31, காங்கிரஸ் 27, பாமக 16, தேமுதிக 10, சிபிஐ 3 என்ற எண்ணிக்கையில் கோடீஸ்வர வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தேர்தலில் இந்தமுறை போட்டியிடும் 3,992 வேட்பாளர்களின் மொத்த சொத்துமதிப்பு ரூ. 20,678 கோடி. இதில், அதிக சொத்துக்களுடன் லீமாரோஸ் மார்ட்டின், ஜோசப் விஜய் மற்றும் ஆதவ் அர்ஜுனா ஆகியோய் முதல் 3 இடங்களில் உள்ளனர்.

கல்வி ரீதியாக பார்க்கையில் 1,711 (43%) வேட்பாளர்கள் 5-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளனர். 1,822 (46%) பேர் பட்டதாரிகள் அல்லது அதற்கு மேற்பட்ட படிப்பை படித்துள்ளனர். 301 பேர் டிப்ளமோ, 95 பேர் படிக்காதவர்கள், 56 பேர் எழுத்தறிவு உள்ளவர்கள் மற்றும் 7 பேர் படிப்பு விவரங்களைத் தெரிவிக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

வயதுவாரியாக 1,424 (36%) பேர் 25-40 வயதுக்குள்பட்டவர்கள், 2,034 (51%) பேர் 41-60 வயதுக்குள்பட்டவர்கள், 526 (13%) பேர் 61-80 வயதுக்குள்பட்டவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் 442 (11%) பேர் போட்டியிடுகின்றனர். இது 2021 தேர்தலில் இருந்த 378 (11%) அதே சதவீதத்துடன் உள்ளது.

## திருமலையில் 78,586 பக்தர்கள் தரிசனம்!

திருப்பதி, ஏப்.21:

திருமலையில் சனிக்கிழமை முழுவதும் 78,586 பக்தர்கள் தரிசனம் செய்தனர். 29,232 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

கோடை விடுமுறையையொட்டி பக்தர்கள் வருகை அதிகரித்துள்ள நிலையில், ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி தர்ம தரிசனத்துக்கு 8 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணிநேரமும், ரூ.300 விரைவு தரிசனம், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கும் 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணிவரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர் இரவு 10 மணிவரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

மேலும், சனிக்கிழமை முழுவதும் 78,586 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; 29,232 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் காணிக்கையை கணக்கிட்டதில் ரூ.3.59 கோடி வசூலானது என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## திருச்சானூரில் கோயில் ஆழ்வார் திருமஞ்சனம்!



வரும் ஏப். 28-இல் பத்மாவதி தாயார் கோயிலில் கோயில் ஆழ்வார் திருமாஞ்சனம் நடைபெற உள்ளதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

இக்கோயிலில் ஏப். 30 முதல் மே 2 வரை வருடாந்திர வசந்தோற்சவம் நடைபெற உள்ளது. வசந்தோற்சவம் முன்பு கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடத்துவது வழக்கமாகும்.

இதன் ஒரு பகுதியாக, அன்று காலை தாயாரை சுப்ரபாதத்துடன் துயில் எழுப்பப்பட்டு, காலை 6 மணி முதல் 9 மணி வரை கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெறும்.

இதில், கோயில் வளாகம், சுவர்கள், மேற்கூரை, பூஜை பொருட்கள் மற்றும் பிற பொருட்கள் நீரால் சுத்தப்படுத்தப்படும். நாமகட்டி, ஸ்ரீசூர்ணம், கஸ்தூரி மஞ்சள், பச்சிலை, பூங்கற்பூரம், பச்சை கற்பூரம் சந்தனத்தூள், குங்குமம், கிச்சிலிகிழங்கு மற்றும் பிற நறுமணப் பொருட்கள் கலந்த புனித நீர் கொண்டு கோயில் முழுவதும் சுத்தப்படுத்தபடுகிறது. காலை 9.30 மணி முதல் பக்தர்கள் தாயாரை தரிசிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

இதன் காரணமாக, ஏப்ரல் 28 அன்று கல்யாணோற்சவம் மற்றும் சகஸ்ரதீபாலங்கர ஆராதனைகளை ஆகிய சேவைகளை திருமலை திருப்பதி தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது.

# கிருத்திகை சிறப்பு வழிபாடு... திருத்தணியில் திரளான பக்தர்கள் தரிசனம்



திருத்தணி, ஏப்.21:

திருத்தணி முருகன் கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கின்றனர். ஆடிக்கிருத்திகை, தைப்பூசம், மற்றும் கிருத்திகை நாட்களில் முருகன் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படுவது வழக்கம். விடுமுறை நாட்களிலும் பக்தர்கள் வருகை வழக்கத்தை விட அதிகமாக இருக்கும்.

இந்நிலையில் சித்திரை மாத கிருத்திகை மற்றும் ஞாயிறு விடுமுறை தினமான இன்று திருத்தணியில் இன்று காலை முதலே பக்தர்கள் வருகை அதிகமாக இருந்தது. அண்டை மாநிலம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்தும், அலகு குத்தியும் வந்து சாமி தரிசனம் செய்தனர்.

பொது தரிசன வழியில் பக்தர்கள் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து மூலவரை தரிசனம் செய்தனர். அதே போல் 100 ரூபாய் சிறப்பு தரிசன கட்டண டிக்கெட் பெற்ற பக்தர்கள் 2 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

கிருத்திகையை முன்னிட்டு மூலவர் முருகப்பெருமானுக்கு பால், தயிர், பழம், பஞ்சாமிர்தம், சந்தனம், மஞ்சள், இளநீர் போன்ற திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. சிறப்பு ஆராதனைக்குப் பிறகு தங்க கவச அலங்காரத்தில் மூலவர் முருகப் பெருமான் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.


# அரியலூர்: பசுபதீஸ்வரர் கோவிலில் லிங்கத்தின் மீது சூரிய ஒளி விழும் அபூர்வ காட்சி

அரியலூர், ஏப்.21:

அரியலூர் மாவட்டம், தா.பழூர் அருகே காரைக்குறிச்சியில் சவுந்தரநாயகி தாயார் உடனுறை பசுபதீஸ்வரர் கோவில் உள்ளது. சோழர் காலத்தில் கட்டப்பட்ட இந்த கோவிலில் ஆண்டுக்கு 2 முறை கோவில் கருவறையில் உள்ள லிங்கத்தின் மீது சூரியனின் ஒளிக்கதிர்கள் விழுவது சிறப்பு அம்சமாகும்.

இதில் சித்திரை மாதத்தில் ஒரு முறையும், பின்னர் ஆவணி மாதத்தில் ஒரு முறையும் கருவறையில் உள்ள லிங்கத்திருமேனி மீது சூரிய கதிர்கள் விழும். தொடர்ந்து 5 நாட்கள் ஐதீகம். இந்த நிலையில் சித்திரை மாத சூரிய வழிபாடு நேற்று முதல் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் காலை 6 மணி 5 நிமிடத்திற்கு சூரிய பகவான் தனது ஆயிரம் கரங்களை நீட்டி காரைக்குறிச்சி பசுபதீஸ்வரர் பாதங்களை சரணாகதி அடைந்த நிகழ்வு நடந்தேறியது. அடுத்த 5 நிமிடங்களில் சிறிது சிறிதாக லிங்கத்தின் மீது சூரிய கதிர்கள் படர்ந்தது. அப்போது லிங்கத் திருமேனி தங்கத்தை உருக்கி ஊற்றியது போல் தகதகவென மின்னியது. இந்த காட்சியை கண்ட பக்தர்கள் மெய்சிலிர்த்து சரண கோஷங்களை எழுப்பி வழிபாடு செய்தனர்.



லிங்கத்தின் மீது சூரிய கதிர்கள் விழும். சூரிய பகவான் தனது கதிர்களை பாய்ச்சி லிங்கத்தை வழிபடுவதாக


# கிருத்திகை வழிபாடு.. பரமத்திவேலூர் சுற்றுவட்டார பகுதி முருகன் கோவில்களில் சிறப்பு வழிபாடு

பரமத்தி வேலூர், ஏப்.21:

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா கோப்பணம்பாளையம் பரமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள பாலமுருகனுக்கு சித்திரை மாத கிருத்திகையை முன்னிட்டு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 18 வகையான திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த பாலமுருகனை, பரமத்திவேலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.





பொத்தனூர் பச்சமலை பாலதண்டாயுதபாணி சுவாமி

அதேபோல் கபிலர்மலை பாலசுப்பிரமணிய சுவாமி கோவில், பிராந்தியத்தில் உள்ள 34.5 அடி உயரமுள்ள ஆறுமுகம் கடவுள், பொத்தனூரில் உள்ள பச்சமலை முருகன் கோவில் உள்ள பால தண்டாயுதபாணி சுவாமி, பாண்டமங்கலம் புதிய காசி விஸ்வநாதர் கோவிலில் உள்ள சுப்பிரமணியர், அனிச்சம்பாளையத்தில் உள்ள வேல் வடிவம் கொண்ட சுப்பிரமணியர், பிலிக்கல்பாளையம், கரட்டூரில் உள்ள விஜயகிரி வடபழனி ஆண்டவர்,

பரமத்தி வேலூர் பேட்டை பகவதி அம்மன் கோவிலில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான், பாலப்பட்டி கதிர்மலை கந்தசாமி கோவில், கந்தம்பாளையம் அருணகிரிநாதர் மலையில் உள்ள வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் நன்செய் இடையாறு காவேரி ஆற்றங்கரையில் அருகே உள்ள மூங்கில் வனத்து சங்கிலி கருப்பண்ணசாமி கோவிலில் உள்ள வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் கோவில், நன்செய்இடையார் திருவேலீஸ்வரர் கோயிலில் உள்ள சுப்ரமணியர், மற்றும் ராஜா சுவாமி திருக்கோவில் உள்ள ராஜாசுவாமி, பொத்தனூர் சக்தி விநாயகர் கோவிலில் உள்ள பாலமுருகன் மற்றும் பரமத்தி வேலூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள முருகன் கோவில்களில் உள்ள முருகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அலங்காரமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### நீரிழிவு நோயாளிகள் சர்க்கரைக்குப் பதில் இவற்றை சாப்பிடலாமே...

நீரிழிவு நோயாளிகள் தங்கள் இரத்த சர்க்கரை அளவு அதிகரிக்காமலிருக்க, இனிப்பு வகைகளை அதிகம் உட்கொள்ளாமலிருக்க அறிவுறுத்தப்படுவார்கள். இதற்காக அவர்கள் ஸ்வீட் சாப்பிட தயங்குவார்கள். சிலர் இனிப்புகள் விற்கப்படும் கடைகளுக்குச் சென்றால், அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இனிப்பு வகைகளை ஏற இறங்கப் பார்த்து விட்டு, கால் கிலோ பாகற்காய் சிப்ஸை வாங்கிக் கொண்டு வீடு திரும்புவதும் உண்டு.

இவர்கள் சாப்பிடும் உணவுகளில் சர்க்கரைக்குப் பதிலாக எந்தப் பொருட்களை சேர்த்துக் கொண்டால் அதிக பாதிப்பில்லாமல் ஆரோக்கியத்தைக் காக்கலாம் என்பதை இப்பதிவில் காணலாம்.

1. மாங்க் ஃபுரூட் (Monk Fruit): சீனாவில் காணப்படும், இனிப்பு சுவை கொண்ட பூஜ்ஜிய கலோரி (Zero calorie) பழம் இது. இதிலிருந்து தயாரிக்கப்படும் திக்கான திரவம் (concentrated sweetener), நீரிழிவு நோயாளிகள் காப்பி, டீ போன்றவற்றில் உபயோகிப்பதற்கு ஏற்றதாக உள்ளது. நோயாளிகளின் இரத்த சர்க்கரை அளவை அதிகரிக்கச் செய்யாத இயற்கையான பழம் என்பதால், பவுடர் வடிவிலும் கிடைக்கக் கூடிய இதை, இனிப்பு வகைகளிலும் சேர்த்து தயாரித்து டயாபெட்டிக் பேஷண்ட்களுக்கு உண்ணக் கொடுக்கலாம்.

2. ஆப்பிள் சாஸ்: இனிப்பு சேர்க்காமல் தயாரிக்கப்படும் ஆப்பிள் சாஸை பிரெளனி மற்றும் மஃபின்களின் மீது ஊற்றி நீரிழிவு நோயாளிகளுக்கு உண்ணக் கொடுக்கலாம். இது அவர்களுக்கு ஆப்பிளில் உள்ள வைட்டமின்கள் மற்றும் நார்ச்சத்தைக் கொடுப்பதுடன் கலோரி அளவு குறையவும் உதவும்.

3. பேரீச்சம்பழ பசை (Date Paste): கொட்டை நீக்கிய பேரீச்சம் பழங்களிலிருந்து தயாரிக்கப்படுவது இது. இதில் அதிகளவு பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்துகள் உள்ளன. இதன் கேரமல் சுவையானது நீர்ச்சத்தும், ஆன்டி ஆக்ஸிடன்ட்களும் அளிக்கக் கூடியது.

4. ரா ஹனி (Raw Honey): இனிப்பூட்டிகளில் மிக ஆரோக்கியமானது இந்த சுத்தமான தேன். தனித்துவமான பூ வாசனை கொண்ட சுவையுடன் சில கனிமச் சத்துகளும் இதில் அடங்கியுள்ளன. சர்க்கரையில் உள்ளதை விட அதிக இனிப்பு சுவை தேனில் இருப்பதால், தேனை குறைந்த அளவில் பயன்படுத்துவதே ஆரோக்கியம்.

5. கோகனட் சுகர் (Coconut Sugar): இது குறைந்த க்ளைசெமிக் இன்டெக்ஸ் கொண்டது. இதில் குறைந்த அளவில் இரும்புச் சத்து மற்றும் சிங்க் சத்தும் உள்ளன. பிரௌன் சுகரில் உள்ள சுவையும், வறுத்த மணமும் கொண்ட இந்த கோகனட் சுகரை நேரடியாக வெள்ளை சர்க்கரைக்குப் பதிலாக பயன்படுத்தலாம். நீரிழிவு நோயாளிகள் சர்க்கரைக்குப் பதிலாக, மேற் கூறிய மாற்று உணவுப் பொருட்களை பயன் படுத்தித்தான் பாருங்களேன்.

# புத்தகம் வேண்டாம்... வகுப்பறை வேண்டாம்! VR இருந்தால் போதும். கல்வியில் நடக்கும் மெகா புரட்சி!

இன்றைய டிஜிட்டல் உலகம் இனி வெறும் தட்டையான திரைகளுக்குள் மட்டும் அடங்கிவிடப் போவதில்லை. 2026 ஆம் ஆண்டை நோக்கி நாம் பயணிக்கும்போது, ஒரு தலைமுறையின் உலகத்தொடர்பை வரையறுத்த டேப்லெட்டுகள், ஸ்மார்ட்போன்கள் மற்றும் தொலைக்காட்சிகள் போன்றவை இப்போது ஸ்பேஷியல் கம்ப்யூட்டிங் (SPATIAL COMPUTING) எனப்படும் வெளிசார் கணினி முறைக்கு வழிவிடுகின்றன.

இன்றைய இளைஞர்களுக்கு, விர்ச்சுவல் ரியாலிட்டி (VR) மற்றும் ஆக்மென்டட் ரியாலிட்டி (AR) என்பவை வெறும் விளையாட்டுக் கருவிகள் அல்ல; அவை புதிய சமூக, கல்வி மற்றும் தொழில்முறை யதார்த்தத்தின் அடிப்படை கட்டுமானக் கற்கள்.

1. தொழில்நுட்பத்தின் வகைகள்:

இளைஞர்கள் மீதான இதன் தாக்கத்தைப் புரிந்து கொள்ள, முதலில் இந்தத் துறையின் இரண்டு முக்கியத் தூண்களை நாம் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும்.

விர்ச்சுவல் ரியாலிட்டி (VR): கற்பனை உலகில் ஒரு பயணம்:

VR என்பது ஒரு ஹெட்செட் அணிவதன் மூலம், பயனர் இருக்கும் நிஜ சூழலை முழுமையாக மறைத்து, ஒரு முப்பரிமாண (3D) டிஜிட்டல் உலகிற்குள் அவர்களைக் கொண்டு செல்வதாகும். ஒரு மாணவர் கடலைப் பற்றிப் படிக்க VR கருவியை அணியும்போது, அவர் திமிங்கலத்தின் படத்தை மட்டும் பார்ப்பதில்லை; மாறாக, அவர் ஒரு டிஜிட்டல் ஆழ்கடலுக்குள் மிதந்து, ஒரு நீலத் திமிங்கலம் மிக அருகில் நீந்திச் செல்வதை உணர முடியும்.



ஆக்மென்டட் ரியாலிட்டி (AR): நிஜ உலகில் டிஜிட்டல் அடுக்கு:

VR போலல்லாமல், AR நிஜ உலகத்தை மறைக்காது. மாறாக, நம்மைச் சுற்றியுள்ள நிஜக் காட்சிகளின் மேல் டிஜிட்டல் தகவல்கள், படங்கள் அல்லது 3D மாதிரிகளை மேலடுக்காகக் காட்டும். உதாரணமாக, வேதியியல் தேர்வுக்காகப் படிக்கும் ஒரு மாணவர், தனது மேசைக்கு மேலே ஒரு மூலக்கூறின் (MOLECULE) 3D மாதிரியை அந்தரத்தில் மிதக்க விட்டு, அதைத் தொட்டு நகர்த்தி அதன் பிணைப்புகளைப் புரிந்துகொள்ள முடியும்.

2. செயலற்ற கற்றலிலிருந்து அனுபவக் கற்றலுக்கு: பாரம்பரிய கல்வி முறைகள் அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்புக்குப் பிறகு இப்போதுதான் மிகப்பெரிய மாற்றத்தைச் சந்திக்கின்றன. 2026 ஆம் ஆண்டின் ஆய்வுகள், மாணவர்கள் ஒரு பாடத்தைப் புத்தகத்தில் படிப்பதைக் காட்டிலும், அதை VR மூலம் அனுபவித்து கற்கும்போது 75% அதிக நினைவாற்றலைப் பெறுகிறார்கள் என்று கூறுகின்றன.

வரலாற்றுப் பயணம்: மாணவர்கள் வரலாற்றைப் பாடமாகப் படிக்காமல், அந்த வரலாற்று நிகழ்வு நடக்கும் இடத்திற்கே விர்ச்சுவல் முறையில் சென்று வரலாம். உதாரணமாக, மார்ட்டின் லூதர் கிங் உரை நிகழ்த்திய இடத்திற்கே சென்று அந்த உணர்ச்சியை அனுபவிக்க முடியும்.

பாதுகாப்பான அறிவியல் ஆய்வுகள்: ஆபத்தான ரசாயனங்கள் அல்லது மின்சாரம் சம்பந்தப்பட்ட சோதனைகளை விர்ச்சுவல் ஆய்வகங்களில் செய்து பார்க்கலாம். ஏதேனும் தவறு நடந்தாலும் நிஜ உலகில் விபத்து ஏற்படாது, இது மாணவர்களுக்குத் துணிச்சலாகக் கற்க உதவுகிறது.

3. புதிய சமூக வலைதளங்கள்:

2026 ஆம் ஆண்டின் இளைஞர்களுக்கு, சமூக வலைதளம் என்பது வெறும் 'ஸ்க்ரோலிங்' செய்வது மட்டுமல்ல; அது ஒரு இடத்திற்குள் நுழைவது போன்றது.

ரோப்ளாக்ஸ் (ROBLOX) மற்றும் ஃபோர்ட்நைட் (FORTNITE) போன்ற தளங்கள் வெறும் விளையாட்டுகளாக இல்லாமல், டிஜிட்டல் ஊர்ச் சதுக்கங்களாக மாறியுள்ளன.

இப்போது இளைஞர்கள் குறுஞ்செய்தி அனுப்புவதை விட, விர்ச்சுவல் அறைகளில் நண்பர்களுடன் அமர்ந்து படம் பார்ப்பது அல்லது விளையாடுவதையே விரும்புகின்றனர். தங்களின் உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்தும் அவதார்களை (AVATARS) உருவாக்குவதன் மூலம், தூரத்தில் இருந்தாலும் அருகிலேயே இருப்பது போன்ற உணர்வைப் பெறுகிறார்கள்.

# "அம்மாவின் கடைசிக் கடன்"



மரணப் படுக்கையில் கிடந்த மீனாட்சி மகன் முரளியின் காதருகே சன்னக் குரலில் சொன்னாள், ... நான் ஒரு கடன் பட்டிருக்கேன்... அதை நீதான் கட்டணும்..."

அதுதான் மீனாட்சியின் கடைசி வார்த்தை.
முரளி அதிர்ச்சியில் உறைந்து போனான்.
அம்மா அவனிடம் எதையும் மறைக்காதவள்.
ஆனால் இந்தக் கடன்?... எவ்வளவு?... யாரிடம்?.
அம்மாவின் பழைய பெட்டிகளை, சேமித்து வைத்திருந்த பைகளை, துருவிப் பார்த்தான்.
"கடன்" என்று ஒரு சின்னச் சுவடு கூட கிடைக்கவில்லை.
கடைசியாய், மடிக்கப்பட்ட பழைய காகிதம் மட்டும் கிடைத்தது. அதில்,
"ராமசாமி
பெரியார் தெரு
பழைய ஊர்"
என்ற ஒரு முகவரி எழுதப்பட்டிருந்தது.
முரளியின் மனசு சொன்னது,
"இதுதான் அந்தக் கடனோ?..."
அந்த முகவரி நோக்கிப் பறந்தான்.
அங்கே "ராமசாமி" என்று விசாரிக்க, அந்த வீட்டைக் காட்டினான் ஒரு வழிப் போக்கன்.
அந்த வீட்டு வாசலில் நின்ற போது, ஒரு முதியவர் வெளியே வந்தார். "யாரு?" என்று கேட்டார்.
"நான் முரளி... மீனாட்சி அம்மாவின் மகன்..." என்றான்.
அந்தப் பெயர் கேட்டவுடன், முதியவரின் முகம் மாறியது.
கண்களில் நீர் துளிர்த்தது.
"இன்னும் என்னை நினைவில் வெச்சிருக்காளா...?"
என்றார் மெதுவாக.
முரளிக்கு புரியவில்லை.
"அம்மா உங்க கிட்டேயிருந்து கடன் வாங்கியிருக்காங்க போலிருக்கு.....
அதை என்னைக் கட்டச் சொல்லிட்டு போயிட்டாங்க..." என்றான் முரளி.
முதியவர் புன்னகைத்தார்.
"அது பணக் கடன் இல்லைப்பா..."
" அப்புறம்?"
"மீனாட்சி...என் கூடப் பிறந்த தங்கை....
ஒரு சின்ன விஷயத்துக்காக... பல வருடம் என் கூடப் பேசவே இல்லை.
ஆனா... எப்பவும் சொல்லுவா... 'நான் அண்ணாவிடம் மன்னிப்பு கேட்கணும்... அதுதான் கடன்...'ன்னு..."
அந்த வார்த்தை முரளியின் உள்ளத்தைக் கிழித்தது.
"அம்மா இறக்கும் முன் சொல்லிய "கடன்" இதுதானா?"
அவன் கண்கள் நிரம்பின.
சற்றும் யோசிக்காமல் அந்தப் முதியவரின் காலில் விழுந்தான்.
"என் அம்மாவுக்காக... நீங்க மன்னிச்சுடுங்க..."
முதியவர் குலுங்கினார்.
அவன் தோளில் கை வைத்து எழுப்பினார்.
"மன்னிக்குறதுக்கு நான் எப்போதே ரெடியா இருந்தேன்... அவ தான் வரல..."
அங்கு, பல வருட மௌனம் உடைந்து, இரண்டு மனங்கள், ஒரு உறவாக மீண்டும் இணைந்தன.

வீடு திரும்பும் வழியில், முரளி வானத்தைப் பார்த்துச் சொன்னான்,
"அம்மா... நீ வெச்சிருந்த கடன் பணமில்லை... மன்னிப்பு தான்... அதை நான் கட்டிட்டேன்..."
(முற்றும்)



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# ஊருக்கு வாழ்வதில் தோல்வி இல்லை




முகூர்த்தம் விடியற்காலை ஆறு மணிக்கே என்பதால் மலர்கொடி சீக்கிரமா எழுந்து சுடு தண்ணி வச்சி குளிச்சிட்டு ஐந்து மணிக்கே பஸ் ஏறி கல்யாண மண்டபத்தை வந்தடைந்தால், மண்டப வாயிலில் எல்லோரையும் வரவேற்ற சரண்யா ஆச்சர்யத்தோடு,,,

"என்னங்க அக்கா, ரொம்ப சிம்பிளா வந்திருக்கீங்க, எப்போதும் கலக்கலா கலர்புல்லா வருவீங்க, இப்போ என்னாச்சு" என்றாள்
"அதை ஏன்டி சரண் கேக்குற, இந்த ஊர்ல ஒரு நல்ல சேலை கட்ட முடியல, ஒரு கொலுசு போடமுடியல, தலசீவி ஒரு மொழம் மல்லிகைப்பூக்கூட வைக்க முடியல, டிசைனா ஒரு சுடிதார்கூட போட முடியல"
"ஏங்க அக்கா அப்படி சொல்றீங்க, நம்ம இஷ்டம்,நாம மேக்கப் பன்றோம், இதுக்காக நீங்க எதுக்கு சிம்பிளா வர வேண்டும்"

"அடிப்போடி கொஞ்சம் நீட்டா ட்ரெஸ் பன்னினாலே இதுக்கெல்லாம் இது தேவையா, பேரன் பேத்தி எடுத்துட்டு, எப்பிடி மினிக்கிக்கிட்டு போவுது பாருன்னு ஜாடையில பேசுறாளுவோ, இதெல்லாம் கேட்டா எப்படி நீட்டா வர தோணும் சொல்லு"
"அக்கா ஊரு உலகம் ஆயிரம் சொல்லும், அதை காதில் வாங்காதீங்க, நம்ம இஷ்டத்துக்குதான் வாழணும், அக்கம் பக்கம் சொல்றதை கேட்டா வாழ முடியாது, நாம ஊருக்கு வாழல, நமக்காக வாழ்றோம்"
"அப்படி இல்ல சரண்யா, அவங்க என்ன சொல்றது, இவங்க என்ன சொல்றது, என் இஷ்டம் நான் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன், என்ன வேண்டுமானாலும் செய்வேன், நான் சம்பாதிக்கிறேன், நான் வாழ்கிறேன்னு சொல்றவங்க எல்லாரும் யாருக்கும் பயப்படாமல், மரியாதை கொடுக்காமல் இருப்பதால்தான் வீணா போய் சீரழியுறாங்க, ஊரு உலகத்துல சொல்றதை கேட்பவர்களும், அக்கம் பக்கம் சொல்றதை கேட்பவர்களும், அவங்க என்ன சொல்வாங்களோ, இவங்க என்ன சொல்வாங்களோன்னு பயப்படுறவங்களும், நேர்மையா இருப்பாங்க, வாழ்க்கை நல்லவே இருக்கும், ஊருக்காக வாழ்வதில் ஒருபோதும் தோல்வியில்லை, இதைதான் படிக்காதவன் படத்தில் ஒரு பாடலில் வைரமுத்து அவர்கள் சொல்லி இருக்காங்க, "
"என்ன பாட்டு அக்கா"
"ஒரு கூட்டுக்கிளியாக என்ற பாடலில் பேருக்கு வாழ்வது வாழ்க்கை இல்லை, ஊருக்கு வாழ்வதில் தோல்வி இல்லைன்னு, இதுதான் உண்மையும் கூட"
"அப்படின்னா நீங்க நீட்டா வந்து இருக்கலாமே அக்கா"

"வந்திருக்கலாம்தான்,,, ஆனா,,, ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல் சிம்பிளா இருப்பதுதான் நமக்கும் நம்ம வயசுக்கும் நல்லது, அதான் சிம்பிளாவே வந்தேன் சரண்யா,"
"ஓ,,,, இதுவும் சூப்பராதான் இருக்கு அக்கா," ன்னு சொல்லும்போதே மண்டபத்திலிருந்து ஒரு குரல் கேட்டது, வச வசன்னு பேசிக்கிட்டு நிக்காம பொண்ண கூட்டிட்டு வாங்க முகூர்த்தத்திற்கு நேரமாச்சி,,, மணப்பெண்ணை அழைச்சிட்டு வரும் குழுவில் மலர்கொடியும் இருந்தால், பெண்ணின் மேக்கப்பை பொறாமையோடு பார்த்தப்படி.

**-நாகை ஆசைத்தம்பி**
கோவை

# அகத்தியனின் பயணம் 19



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

## பிரிவிலும் அவிழாத முடிச்சுகள்

"சொல்லுங்கள் மேடம். நான் என்ன பண்ணனும்" என்றான் அகத்தியன்.

" நான் எப்படி சொல்றதுன்னு தெரியல. சொன்னா ஏத்துக்குவியா ? அப்படி ஏத்துக்கிலனா, என்ன பண்றதுன்னு யோசிக்கிறேன். அதனாலதான் இவ்வளவு தயக்கம். அதான் இவ்வளவு வருடங்கள் தள்ளிப் போட்டேன். எனக்கு நம்பிக்கை இருக்கு. நிச்சயமாக நீ ஏத்துக்குவ" என்று சொல்ல வந்ததைச் சுருக்கமாகச் சொல்லாமல் தொடர்ந்துப் பேசிக்கொண்டே இருந்தாள்.

அகத்தியன் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

மேசையின் மீதுயிருந்த தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு, கொஞ்ச நேரம் அமைதியாக இருந்துவிட்டு, பேச ஆரம்பித்தாள்.

அகத்தியன் கண்ணை மூடிக்கொண்டான். ஒற்றை விரலை நெற்றியில் வைத்துக்கொண்டான்.

ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு, அமைதியாகப் பேச ஆரம்பித்தாள் "அகத்தியன் எனக்குக் கணவர் இல்ல. எனக்கு இருக்கிறது ஒரே ஒரு பெண். இந்தச் சொத்து எல்லாம் அவளுக்குதான். சொந்தம் பந்தம், உறவுன்னு எதுவும் இல்லை. அதனால நீ... நீ." என நீடித்துக்கொண்டே அமைதிகாத்தாள்.

அகத்தியன் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

"நீ என்னோட மகள திருமணம் பண்ணிக்கணும். நிச்சயமா இதைத் தட்டி கழிக்க மாட்டேன்னும், என்னுடைய சொல்ல மீறமாட்டங்கிற நம்பிக்கை இருக்கு"ன்னு பேசி முடித்து அகத்தியன் முகத்தைப் பார்த்தாள்.




இயக்குனரின் சொல்லுக்கு மறு பேச்சி பேச முடியாமல் அமைதியாக இருந்தான் அகத்தியன்.

அலுவலக உதவியாளர் அறையினுள் நுழைவதற்காக "அம்மா" என்று கதவைத் தட்டி, "உங்களைப் பார்க்கிறதுக்காக முக்கியமான ஒருத்தர் வந்திருக்காரு" என்று சொன்னவுடன்,

அகத்தியன் உடனே எழுந்து "வரங்க மேடம்" என்று கைகூப்பி வணங்கிவிட்டு, கதவைத் திறந்து வெளியே நடந்தான்.

உதவியாளரின் பார்வை அன்று எப்படி இருந்ததோ, அதே பார்வை இன்றும் அவனை நோக்கி இருந்தது.

மறுநாள் அகத்தியன் வேலைக்கு வரவில்லை. எழிலழகி நேற்று "நான் நாளையிலிருந்து வேலைக்கு வரமாட்டன் சார்" என்பதை கடிதத்தின் மூலமாகச் சொல்லிவிட்டாள். இயக்குனர் அதிசயமாக இன்று அலுவலகத்துக்கு வரவில்லை என்ற செய்தி அனைவருக்கும் தெரிந்தது. இயக்குனரின் உதவியாளர் தான் சந்தேகித்தது உறுதியாகிவிட்டது என்பதை உணர்ந்துகொண்டு, ஆழ்ந்த யோசனையில் யாரிடமும் சொல்ல முடியாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

குளித்துவிட்டு ஆடையை மாற்றிக்கொண்டு எழிலழகியின் திருமணத்திற்கு செல்வதற்காகப் பெட்டியோடு வெளியே நடந்துவந்தான் அகத்தியன்.

இயக்குனர் அறையின் முன்பு உட்கார்ந்திருந்த உதவியாளரிடம் சாவியை கொடுத்துவிட்டு " முதலாளியம்மாகிட்ட, அகத்தியன் அவசர அவசரமா வீட்டுக்குப் போறான்னு. வீட்ல வரச் சொன்னாங்கன்னு சொல்லிடுங்"என்று கூறிவிட்டு நடந்தான்.

உதவியாளர் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்.

திருமணவீட்டிற்குள் நுழைந்த அகத்தியனை வரவேற்க, எழிலழகி ஓடோடி வந்தாள். அவள் முகத்தில் பொலிவும், மகிழ்ச்சியும், ஆனந்தமும், காணாமல் போனது தெரிந்தது. ஆனால், தன்னைப் பெற்ற தாய் தந்தையின் சொல்லைத் தட்டக்கூடாது என்பதற்காக இதை ஏற்றுக் கொண்டிருக்கிறாள் என்பது அகத்தியனுக்குப் புரிந்தது.

அகத்தியனை எழிலழகி அழைத்துச் சென்று உள்ளே இருக்கின்ற அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

"இவங்க என்னுடைய தோழி. இவங்க பேரு இசையழகி." என்று எழிலழகி இசையழகியை அறிமுகப்படுத்தியபோது, அகத்தியன் அசந்து போனான்.

இசையழகி கலையிழந்து காணப்பட்டாள். அவளின் தோற்றத்தில் பொலிவில்லை. நெற்றியில் வழக்கமாக வைத்திருக்கும் பொட்டில்லை. அவளின் கருத்தக் கூந்தலில் பூக்கள் இல்லை. முகம் வாடியிருந்தது.

எதையோ இழந்திருக்கிறாள். அது ஈடுசெய்ய முடியாத பெரிய இழப்பாக இருக்கலாம் என்பதை அகத்தியன், அவளைப் பார்த்த நேரத்தில் உணர்ந்துகொண்டான்.

அந்த இழப்பு எப்படி என்று அகத்தியனால் இந்த இடத்தில் கேட்க முடியவில்லை. உணர்ந்து கொண்டான். அகத்தியன் இசையழகியைப் பார்த்தான். இசையழகியிடம் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லாமல் குற்ற உணர்ச்சியில் தவித்தான்.

எழிலழகி அகத்தியன் முகத்தைப் பார்த்தாள்

அகத்தியன் எழிலழகியின் முகத்தைப் பார்க்காமல் தலையைக் கீழே தொங்கவிட்டு அமைதியாக இருந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் கம்பெனியின் முதலாளியம்மா வருவதை கேள்விப்பட்டு எழிலழகி வாசற்படியை நோக்கி ஓடினாள். முதலாளியம்மாவை வரவேற்று அழைத்து வந்து அனைவருக்கும் அறிமுகப்படுத்தினாள்.

அகத்தியன் எதுவும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்து இருந்தான். எழிலழகி, இசையழகி, இயக்குனர் மற்றும் அகத்தியன் இவர்களுக்குள் ஏதோ ஒன்று, இனம் புரியாத மொழியில், தீர்க்கப்படாத சிக்கல்கள் இன்னும் நீடித்துக்கொண்டே இருக்கிறது என்பது, அங்கு நிலவிய அமைதியான சூழலே வெளிப்படுத்தியது.

எல்லாம் முடிந்தது. தனது கையில் வைத்திருந்த மொழி உறையைப் எழிலழகியிடம் கொடுத்துவிட்டு, இசையழகியை அன்பு கலந்தப் பார்வையோடு பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு, இயக்குநர் அவர்களைக் கையெழுத்து கும்பிட்டு, "எல்லாருக்கும் வரேன்"னு சொல்லிட்டு தன்னுடைய பெட்டியை எடுத்துக்கொண்டுப் புறப்பட்டான் அகத்தியன்.

(தொடரும்)

# இலட்சுமி தேவிக்கும் தாமரைக்கும் நெருக்கமான பிணைப்பு உண்டு



இலட்சுமி எனும் சொல் சமஸ்கிருதத்தின் மூலத்தில் இருந்து வந்தது. இதன் பொருள் ஒன்றை ஈர்ப்பது. அல்லது இலட்ஷிய என்பது இலக்கு என்பதையும் குறிக்கும்.

திருப்பதியில் முதல் கால பூஜை பெருமாலுக்கு தங்க பூ அர்ச்சனையால் தான் தொடங்கப்படுகிறது. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த தன்மை இந்த தங்க தாமரை பூவுக்கு உண்டு.
வங்காளத்தில் தங்க தாமரை பூவால் இலட்சுமி தேவியை வணங்குவது வழக்கம். கொல்கத்தா போன்ற நகரில் மகாலட்சுமியை தங்க தாமரை ரூபமாக வழிபடுகின்றனர்.
இலட்சுமி தேவிக்கும் தாமரைக்கும் நெருக்கமான பிணைப்பு உண்டு. தங்க தாமரை மலரே இலட்சுமி தேவியின் இருப்பிடம் என்கிறது வரலாறு. தங்க தாமரையில் இருப்பதால் தான் இலட்சுமியை பத்மப்ரியா என்ற பெயர் கொண்டும் அழைக்கின்றனர்.
தங்க தாமரையை விரும்பும் வகையில் இலட்சுமியின் பெயர் பத்மலதாரா தேவி என்றும். தாமரை மாலையை அணிந்திருக்கையில் இலட்சுமியை பத்ம முகி என்றும், தாமரை போல் முகம் ஒளிர்கின்ற போது பத்மாக்ஷி என்றும், இலட்சுமியின் திருக்கண் தாமரையை போன்று ஒளிர்கின்ற போது பத்மாஸ்டா என்றும். கையில் தாமரையை ஏந்தியிருக்கையில் பத்ம சுந்தரி என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

இன்னும் நூற்றுக்கணக்கான பெயர்களை கொண்ட அம்பிகையை ஜகன் மாதா என்று அழைக்கிறது ப்ரீ மஹாலட்சுமி ஆஷ்டகம். இவரை வணங்கி வழிபடுவதற்கு ஏற்ற பொருட்களாக இருப்பது தங்க தாமரை பூ, சந்தனம், குங்குமம், வெற்றிலை, உலர் பழங்கள், பழங்கள் மற்றும் வெல்லம் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு பொருட்கள், அரிசி மற்றும் தேங்காய்.

வியாழக்கிழமைகளில் மற்றும் முழு நிலவு நாளான பௌர்ணமியில் இலட்சுமி பூஜை செய்வது மிகவும் உகந்ததாகும். இலட்சுமியின் திருவுருவத்தை வடிக்கிற போது, தங்க காசுகள் அள்ளி வழங்குவதை போலவும், அவருக்கு பின் யானைகள் இருப்பது போலவும் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் அவரின் ஐஸ்வர்யத்தை வழங்கும் பலத்தை உலக மக்களுக்கு புலப்படுத்துவதாக உள்ளது.

இலட்சுமி தேவி வழங்க கூடிய ஐஸ்வர்யம் என்பது வெறும் பணம் செல்வத்தை மட்டும் குறிப்பதல்ல. இலட்சுமி தேவியின் அருள் இருப்பவர்களுக்கு புகழ், பலம், வெற்றி, தங்கம், நவதானியங்கள், நல்ல புத்திரர்கள், மகிழ்ச்சி, ஆனந்தம், புத்தி, அழகு, உயர்ந்த இலட்சியம், உயர் தவம், அறம், நல்ல பண்புகள், ஆரோக்கியம், ஆயுள் ஆகிய பதினாறு விஷயங்களும் அவர்களுக்கு கிடைக்கும்.
மேலும் இலட்சுமி தேவி பல ரூபங்களில் அருள் பாலிக்கிறார் உதாரணமாக ப்ரீதேவி, பூதேவி மற்றும் நீலா தேவி .
மஹாலட்சுமிய அஷ்ட இலட்சுமி என 8 வகையாக வழிபடுகின்றனர். ஒரு மனிதனுக்கு அஷ லட்சுமி கடச்சம் அவசியம் தேவை வாழ்வில் உயர்வதர்க்கு. நம் ஆசரமத்தில் இந்த தங்க பூ கிடைக்க ஏற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த தங்க தாமரை 1 கிராம் தங்கதால் DIP செய்யப்பட்டது. இந்த பூவை காலையில் தினசரி 8 மகாலட்சுமி (அஷ்டலட்சுமி) பெயரை சொல்லி மகாலட்சுமி படத்தின் முன் அர்ச்சனை செய்ய வேண்டும். ஒரு முக்கிய குறிப்பு தங்கத்திலும் தாமரையிலும் கட்டாயம் வாசம் செய்வால். எனவே தான் இந்த தங்க பூவால் அர்ச்சனை செய்வது மிக மிக விஷேஷமானது.

**எம்.அசோக்ராஜா,**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி 620015

# தினம் ஒரு தலைவர்கள்

# சையத் ஹசன் இமாம் வரலாறு

சையத் ஹசன் இமாம் ( 31 ஆகஸ்ட் 1871 - 19 ஏப்ரல் 1933) ஒரு இந்திய வழக்கறிஞரும் அரசியல்வாதியும் ஆவார், அவர் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகப் பணியாற்றினார் மற்றும் செப்டம்பர் 1918 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
வாழ்க்கை வரலாறு
இந்திய தேசிய காங்கிரஸின் தலைவரான நான்காவது முஸ்லிம் ( பத்ருதீன் தியாப்ஜி , ரஹிம்துல்லா எம். சயானி மற்றும் நவாப் சையத் முகமது பகதூர் ஆகியோருக்குப் பிறகு) அவரது மூதாதையர்களில் ஒருவர் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் தனியார் ஆசிரியராக இருந்தார் . ஹசன் இமாமின் தந்தை பாட்னா கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்தார் . அவரது முதல் மனைவி மூலம், சையத் ஹசன் இமாமுக்கு சையத் மேதி இமாம் என்ற மகன் பிறந்தார், அவர் ஹாரோ மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார், இந்திய உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞராகவும் லத்தீன் மற்றும் கிரேக்க மொழி அறிஞராகவும் இருந்தார். ஹசன் இமாம் ஒரு இந்தோ-பிரெஞ்சுப் பெண்ணையும், புலு இமாம் மனித உரிமைப் பிரச்சாரகரையும் மணந்தார், மேலும் வனவிலங்கு நிபுணர் அவர்களின் பேரன் ஆவார். இந்தியாவின் மிகச்சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராகக் கருதப்படும் சித்தரஞ்சன் தாஸ் (சி.ஆர். தாஸ்) மற்றும் எச்.டி. போஸ் போன்ற சில வழக்கறிஞர்கள் ஹசனை பிரிட்டிஷ் இந்தியாவின் சிறந்த வழக்கறிஞர் என்று கருதினர் . சர் சுல்தான் அகமது மற்றும் சையத் அப்துல் அஜீஸ் உள்ளிட்ட அவரது சொந்த குடும்பத்தில் உள்ள பல வழக்கறிஞர்களுடன் அவருக்கு தொடர்பு உள்ளது . கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்த ஹசனின் மருமகன் சையத் ஜாபர் இமாமும் அவரது மருமகனாக இருந்தார், பின்னர் உச்ச நீதிமன்ற நீதிபதியானார்.

## சட்டம் மற்றும் அரசியல் வாழ்க்கை

சுதந்திரப் போராட்ட வீரர் சர் அலி இமாமின் தம்பியும், இம்தாத் இமாமின் மகனுமான ஹசன் இமாம், பீகார் மாநிலம் பாட்னா மாவட்டத்தில் உள்ள நியோரா கிராமத்தில் ஆகஸ்ட் 31, 1871 அன்று பிறந்தார். ஷியா முஸ்லிம் மத நம்பிக்கை கொண்ட இவர், ஒரு புகழ்பெற்ற, படித்த நில உரிமையாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். உடல்நலக்குறைவால் அடிக்கடி தடைப்பட்ட பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, ஜூலை 1889 இல் இங்கிலாந்துக்குச் சென்று மிடில் டெம்பிள் நிறுவனத்தில் சேர்ந்தார். அங்கு இருந்தபோது, 1891 இல் இங்கிலாந்து பொதுத் தேர்தலின் போது தாதாபாய் நௌரோஜிக்காக தீவிரமாக பிரச்சாரம் செய்தார். 1892 இல் அவர் வழக்கறிஞர் சங்கத்திற்கு அழைக்கப்பட்டார்; அதே ஆண்டு வீடு திரும்பினார், கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் சட்டப் பயிற்சியைத் தொடங்கினார். ஹசன் இமாம் 1912 இல் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் நீதிபதியானார்.


மார்ச் 1916 இல் பாட்னா உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டதும், இமாம் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் நீதிபதி பதவியை ராஜினாமா செய்து பாட்னாவில் பயிற்சியைத் தொடங்கினார் . 1921 இல், அவர் பீகார் மற்றும் ஒரிசா சட்டமன்ற உறுப்பினராக பரிந்துரைக்கப்பட்டார். 1908 முதல் அவர் அரசியல் விவகாரங்களில் பங்கேற்றார். அக்டோபர் 1909 இல், அவர் பீகார் காங்கிரஸ் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார், அடுத்த மாதத்தில் அவர் பீகார் மாணவர் மாநாட்டின் நான்காவது அமர்வுக்கு தலைமை தாங்கினார். 1916 இல் நீதிபதி பதவியை ராஜினாமா செய்த பிறகு அவர் பெரிய அளவில் அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கினார். 1917 நவம்பரில் இந்திய வெளியுறவுத்துறை செயலாளரான மொன்டேகுவை சந்தித்த முக்கிய இந்தியத் தலைவர்களில் ஹசன் இமாம் ஒருவர், மேலும் அவர் "இந்திய அரசியல் உலகின் உண்மையான ஜாம்பவான்களில்" பட்டியலிடப்பட்டார். மொன்டேகு -செல்ம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தத் திட்டத்தை பரிசீலிக்க 1918 இல் பம்பாயில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் சிறப்புக் கூட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார். திட்டத்தின் தகுதிகள் குறித்து கருத்து கடுமையாகப் பிரிக்கப்பட்டதால், அதைக் கையாள்வது ஒரு முக்கியமான, ஆனால் கடினமான அமர்வாகும். ஹசன் இமாம் ஒரு மிதமான பாத்திரத்தை வகித்தார். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான விரோதமான சூழல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதை சாத்தியமற்றதாக்கும் என்று அவர் நினைத்தது அவரது கருத்தாக இருந்தது. ஒரு தீவிர அரசியலமைப்புவாதியான அவர் ஒத்துழையாமை இயக்கத்தின் சித்தாந்தத்தை எதிர்த்தார் . ஹசன் இமாம் கிலாபத் இயக்கத்தில் முன்னணிப் பங்காற்றினார். 1930 இல் அவர் சிவில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார் மற்றும் பாட்னாவில் உருவாக்கப்பட்ட சுதேசி லீக்கின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணிப்பதற்கும் கதர் பயன்படுத்துவதற்கும் அவர் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். 1927 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பீகாரில் சைமன் கமிஷனைப் புறக்கணித்ததன் "பொருள் ரீதியாக வெற்றிக்கு அவர் வழிவகுத்தார்" . ஹசன் இமாம் சமூக சீர்திருத்தங்களுக்கு , குறிப்பாக பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலையை மேம்படுத்துவதற்கு வலுவான ஆதரவாளராக இருந்தார் . திகாரி அறங்காவலர் குழுவின் உறுப்பினராக, அவர் பெண் கல்விக்கான திட்டங்களை ஊக்குவித்தார். கம்பெனி மற்றும் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் நாட்டின் பொருளாதார சுரண்டலை அவர் அம்பலப்படுத்தினார். பீகாரின் முன்னணி ஆங்கில நாளிதழான பிஹாரியின் அறங்காவலர் குழுவின் தலைவராக இருந்தார்; அதைத் தொடர்ந்து வந்த சர்ச்லைட்டின் நிறுவனர்களில் ஒருவராகவும் இருந்தார்.



## இறப்பு

அவர் ஏப்ரல் 19, 1933 அன்று இறந்தார், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் எல்லைக்கு அருகிலுள்ள பலாமு மாவட்டத்தில் உள்ள ஜாப்லா என்ற ஊரில் சோன் நதிக்கரையில் அடக்கம் செய்யப்பட்டார் .

# ‘மேயாத மான்’ ரத்ன குமாரின் ‘29’: ரிலீஸ் தேதி அறிவிப்பு!




‘மேயாத மான், ஆடை’ போன்ற படங்களின் இயக்குநர் ரத்ன குமார் எழுதி, இயக்கியுள்ளப் படம் ‘29’. இப்படத்தில் விது, ப்ரீத்தி அஸ்ரானி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். மாஸ்டர் மகேந்திரன், அவினாஷ் மற்றும் பிரேம் குமார் ஆகியோர் பிற முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

கார்த்திக் சுப்புராஜின் ஸ்டோன் பெஞ்ச் கிரியேஷன்ஸ் மற்றும் லோகேஷ் கனகராஜின் ஜி ஸ்குவாட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளன. இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். இப்படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் இப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி இப்படம் மே.8ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




விஜய் டிவியின் பிக் பாஸ் ஷோவில் போட்டியாளராக கலந்துகொண்டவர் பூர்ணிமா ரவி. அவர் நெகடிவ் விமர்சனங்களை தான் அதிகம் சந்தித்தார்.

பிக் பாஸுக்கு பிறகு அவருக்கு பட வாய்ப்புகள் வரும் என எதிர்பார்த்த நிலையில் பெரிய வாய்ப்புகள் எதுவும் தேடி வரவில்லை.

தற்போது பூர்ணிமா ரவி இன்ஸ்டாவில் கிளாமர் ஆக போட்டோக்கள் வெளியிட்டு எல்லோரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார்.

# ‘அம்மா’ என்று அழைப்பதா?



கமல்ஹாசன் மூத்த மகளான சுருதிஹாசன் நடிகை, பாடகி, இசை அமைப்பாளர் என்ற பன்முகங்களை கொண்டவர். தமிழ் திரை உலகில் மட்டுமின்றி இந்தி திரை உலகிலும் படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில் சுருதிஹாசன் நேற்றுமுன்தினம் மும்பை ரெஸ்டாரண்ட் ஒன்றில் இருந்து வெளியே வந்தார்.

புகைப்பட கலைஞர்கள் சூழ்ந்து கொண்டு போட்டி போட்டு புகைப்படம் எடுத்தனர். அப்போது புகைப்படக்காரர் ஒருவர் சுருதிஹாசனை பார்த்து ‘அம்மா...’ என்று அழைத்தார். இந்த வார்த்தையை கேட்ட சுருதிஹாசன் ‘யார் உங்களுக்கு அம்மா, என்ன உளருகிறீர்கள்?’ என்று கோபத்துடன் கேள்வி எழுப்பினார்.

இந்த வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. சுருதிஹாசனுக்கு ஆதரவாக பலரும் பதிவிட்டு வருகின்றனர்.




தென்னிந்திய திரை உலகில் மட்டுமின்றி பாலிவுட் திரை உலகிலும் பிரபல நடிகையாக இருப்பவர் மிருணாள் தாக்கூர். தற்போது பாலிவுட் படங்களில் அதிக கவனம் செலுத்தி வரும் மிருணாள் தாக்கூர் சினிமா மற்றும் வெப் தொடர்களில் தொடர்ந்து நடித்து வருகிறார். சினிமாவில் எவ்வளவு பிசியாக இருக்கிறாரோ, அந்த அளவிற்கு அவரை சுற்றி காதல் கிசு, கிசுக்களும் ஓடிக் கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் நடிகர் தனுசுடன் மிருணாள் தாக்கூருக்கு காதல் இருப்பதாக தகவல்கள் வெளியானது. இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள போவதாகவும் செய்திகள் காட்டுத்தீ போல பரவியது. ஆனால் இந்த செய்திகள் அனைத்தும் வதந்திதான். எனக்கும் தனுசுக்கும் இடையே காதல் எல்லாம் இல்லை’ என மிருணாள் தாக்கூர் திட்டவட்டமாக மறுத்தார்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அவரது நடிப்பில் வெளியான ‘டக்கோயிட்’ படத்தின் புரமோஷன் விழாவில் பிரபல தயாரிப்பாளர் அல்லு அரவிந்த் பேசிய போது, ‘உங்களை தென்னிந்தியாவிலேயே கட்டிப்போட ஆசை. எனவே தெலுங்கு சினிமா திரையில் இருந்து ஒருவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும்’ என்று பேசினார்.

அதற்கு மிருணாள் தாக்கூர், ‘சிரித்துக் கொண்டே பதில் எதுவும் கூறாமல் வெட்கப்பட்டார். அவரது திருமணம் குறித்து அடிக்கடி தகவல்கள் வந்த நிலையில் இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மிருணாள் தாக்கூர் அளித்த பேட்டியில், ‘இப்போதைக்கு எனக்கு காதலிக்க நேரமில்லை. எனது முழு கவனமும் நடிப்பில்தான் இருக்கிறது’ என்று கூறினார்.



# வா... வா... என் தேவதையே... குட் நியூஸ் சொன்ன அட்லீ

ராஜா ராணி, தெறி படம் மூலம் கவனம் ஈர்த்தவர் இயக்குநர் அட்லீ. அதனைத்தொடர்ந்து மெர்சல், பிகில் என விஜய்யை வைத்து அடுத்தடுத்து படங்கள் எடுத்து பட்டித் தொட்டி எங்கும் புகழ்பெற்றார். தொடர்ந்து பாலிவுட் ஸ்டார் ஷாருக்கானை வைத்து ஜாவான் படம் எடுத்தார்.

பான் இந்தியா படமான இப்படம் ரூ.1000 கோடிக்கும் அதிகமாக வசூலித்தது. அதனைத்தொடர்ந்து தற்போது அல்லு அர்ஜுனை வைத்து ‘ராக்கா’ படத்தை இயக்கி வருகிறார்.

இந்நிலையில் தனது மனைவி பிரியா கர்ப்பமாக இருப்பதாக கடந்த ஜனவரி மாதம் இயக்குநர் அட்லீ அறிவித்தார். அதனை தொடர்ந்து மனைவிக்கு பிரமாண்டமாக வளைகாப்பு நிழச்சியையும் நடத்தினார். இதுதொடர்பான புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இந்த நிலையில், அட்லீ- பிரியா தம்பதிக்கு இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு ப்ரியாவை திருமணம் செய்துகொண்டார் அட்லீ. இந்த தம்பதிக்கு முன்னரே மீர் என்ற ஆண்குழந்தை உள்ளது. தற்போது இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்துள்ளது.

இவர்களுக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



சின்னத்திரையில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவர் நக்ஷத்ரா நாகேஷ். இவர் தொகுப்பாளினியாக இருந்து பின் நடிகையாக அறிமுகமானவர். லட்சுமி ஸ்டோர்ஸ், தமிழும் சரஸ்வதியும் ஆகிய சீரியல்களில் நடித்திருக்கிறார். மேலும், தற்போது விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வரும் அழகே அழகு சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

இந்த நிலையில், நடிகை நக்ஷத்ரா நாகேஷ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அழகிய புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன.

# நடிகர் பார்த்திபனுக்கு சான்றிதழ் வழங்க ஐகோர்ட் உத்தரவு



இதுதொடர்பாக பார்த்திபன் தாக்கல் செய்த மனுவில், கடந்த 1958-ம் ஆண்டு ஜனவரி 14-ம் தேதி பிறந்த தனக்கு பிறப்பு சான்று இல்லை எனவும், பழைய எஸ்.எஸ்.எல்.சி படிப்பை முடித்த பின் சான்றுகளை பெறவில்லை எனவும் தனது சாதி, மதத்தை தெரிவிக்கும் பிறப்பு சான்றோ, கல்விச் சான்று எதுவும் தன்னிடம் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சாதி, மதம், மொழி அடிப்படையிலான பிளவுகள், தேச ஒற்றுமைக்கு பாதிப்பானது என்பதால், மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ, சாதி - மதமற்றவர் என சான்று கோரி வேளச்சேரி தாசில்தாரருக்கு விண்ணப்பித்ததாகவும், அந்த விண்ணப்பம், சோழிங்கநல்லூர் தாசில்தாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

# WANTED
## MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

**Managers**: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

# ADVERTISE WITH US
CONTACT US
9438610756

# WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

# ! WANTED !
## Muslim Lady Accounts Assistant
**Qualification:** B.Com / Tally Knowledge Required
**Company:** Perfume Manufacturing Company
**Location:** Chrompet
Contact: 99401 46318

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
# D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம் முகக் குறிப்பு கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

# Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

# keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

# WANTED
## JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யு, வி.பி.ஜி அவின்யு, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

# ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

# WANTED
## FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House Call/Whatsapp 94386 10756

# WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

# SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

# just499®
## MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

# Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
# CAR WASH SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Sennianman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
# ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

# அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

# WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872






நல்ல கவிதை
ஒன்றைப் படித்தேன்.
நல்ல கவிதை ஒன்றைப்
நானும் படைத்து
அதைக் கொண்டாட
நினைத்தேன்.
படைக்காமல் இருப்பதே
அதைக்
கொண்டாடுவது
என்று
உணர்ந்தேன்.



கே. பி.
ஜனார்த்தனன்



## ஏழ்மையின் எதிர்பார்ப்பு:

வாழ்க்கையிலே அமர்தற்குச் சிறிய வீடு
வயிறெரிக்கும் பசிதணிக்கக் கொஞ்சம் சோறு
தாழ்ந்திடாமல் மானத்தைக் காப்பதற்குத்
தகுவுடலை மறைப்பதற்குக் கீழ்மேல் ஆடை
வீழ்ந்திடாமல் தலைநிமிர்ந்து நிற்ப தற்கு
விளங்குகின்ற அடிப்படையாம் இந்த மூன்றே
ஏழ்மையிலே தவிக்கின்ற மக்கள் எங்கள்
எதிர்பார்ப்பாம் இவைகிடைத்தால் வாழ்வோம் நாங்கள் !

பிச்சையாக இலவசங்கள் தேவை யில்லை
பிறக்கின்ற கருணையதும் தேவை யில்லை
முச்சந்தி தனில்நின்று கையை ஏந்தி
மூச்சுவிடும் வாழ்க்கையினை விரும்ப வில்லை
கச்சிதமாய் மதிப்பளித்துப் பணிகொடுத்துக்
கரங்களிலே உழைப்பதற்கு வழியை செய்தால்
நிச்சயமாய் ஏழ்மையினை ஓட வைத்து
நிறைவாழ்வு வாழ்ந்திடுவோம் வாய்ப்பளிப்பீர் !



மாளிகையின் வசதிகளைக் கேட்க வில்லை
மகிழுந்து சொகுசுதனைக் கேட்க வில்லை
கேளிக்கைப் பொழுதுபோக்கைக் கேட்க வில்லை
கேள்விக்கு விடைதேடும் எங்களுக்கு
வாலியினை மறைந்திருந்து கொன்ற போல
வளங்களினை சுருட்டுகின்ற கரமிருந்து
கூலிக்காய் உழைக்குமெங்கள் உழைப்பிற்கேற்ற
கூலிதந்தால் போதுமெங்கள் ஏக்கம் தீரும் !

பாவலர் கருமலைத்தமிழாழன்



## பாவேந்தரைப் போற்றுவோம் !

கனகசபை இலக்குமி அம்மாள் ஈன்றெடுத்த
கவிதைக்கடல் கருத்துக் களஞ்சியம் !

புதுவையில் பிறந்த புதுமைப் பாவலர்
பாடல் கதை திரைக்கதை வசனம் வடித்தவர் !

பெரியாரின் பகுத்தறிவுக்கு கருத்துக்களை
பாடலில் புகுத்தி பகுத்தறிவை ஊட்டியவர் !

பேரறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து விழாவில்
புரட்சிக்கவிஞர் என்ற பட்டத்தை பெற்றவர் !

பிசிராந்தியார் என்ற நாடக நூலிற்கு
பாரத சாகித்ய அகாதெமி பரிசுப் பெற்றவர் !

கிறுக்கன் கிண்டல்காரன் என்ற பெயர்களில்
கன்னித்தமிழ்ப் படைப்புகள் படைத்து எழுதியவர் !

புதியதோர் உலகம் செய்வோம் என்று பாடி
புதியதோர் உலகத்தை பாடலால் காட்டியவர் !

தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று பாடி
தமிழ்ப்பற்றை மனங்களில் விதைத்தவர் !

இருண்டவீடு காவியம் படைத்துக் காட்டியவர்
இருளை மன இருளை பாடலால் அகற்றியவர் !

இளைஞர் இலக்கியம் கவிதை நூல் வடித்து
இளைஞர்களை இலக்கியத்திற்கு ஈர்த்தவர் !

எதிர்பாராத முத்தம் கவிதை நூல் வடித்து
எல்லாக்காதலர்கள் கரங்களில் தவழ வைத்தவர் !

கண்ணகி புரட்சிக் காவியம் நூல் வடித்து
கண்ணகி பற்றி உலகிற்கு உரைத்தவர் !

எண்பத்தி நான்கு நூல்கள் வடித்தவர்
எண்ணிலடங்காத வாசகர்களைப் பெற்றவர் !

பாவேந்தரின் படைப்புகள் தமிழக அரசால்
பாரே படித்திட நாட்டுடைமையாக்கப் பட்டது !



சகலகலா வல்லவராக வாழ்ந்துக் காட்டியவர்
சகலரும் விரும்பிடும் பாடல்கள் யாத்தவர் !

புவியில் பாவேந்தருக்கு நிகர் பாவேந்தர் மட்டுமே
புரட்சிக்கவிஞர் பாவேந்தரைப் போற்றுவோம் !

கவிஞர் இரா .இரவி !

## மனதின் எதிரொலி

" பல நாட்கள் பல வாரங்கள்
பல மாதங்கள்
பல ஆண்டுகள் ..."

நொடிப் பொழுதில்
கடந்தது காரணம்
எதிர்வீட்டு ஜன்னல் ..."

எப்போது கதவு
திறக்கும் என்பது
ஏக்கம் பாழாய்
போன மனதுக்கு
தெரியவில்லையே ..."

வயதும் ஒரு காரணமும்
தடுமாறும் இளமையும்
காரணமே ..."

எதிர் வீட்டு
ஜன்னல் தூதுப்
புறாவாக இருந்தது
காதல் எனும்
மாயை கண்களை
மறைத்தது ..."


அது ஒரு கனாக் காலம்
பக்குவம் இல்லாத மனது
இளமையை ரசிக்க துடிக்கும்
ஏக்கம் ... "

கண்கள் தேடும்
ஆனந்த கீதம்
கனவில் மிதந்த
மோகம் தாகம் .... "

பக்குவம் அடைந்த பிறகும்
அந்த ஒரு காதல் காலம்
மனதின் எதிரொலியாகத்
தான் வந்து
செல்கிறது
வரமாக ..."



ஆர்.
சீதாராமன்
சீர்காழி



## ஏனடி

அழகை ஆராதிக்கனும்
அபகரிக்க கூடாது
என்கிறாய் நீ மட்டும்~அதை
பின்பற்ற மறுக்கிறாய்
பூக்களை
ரசிக்காமல்
கூந்தலில்
சூடிக்கொண்டு,,,!



நாகை
ஆசைத்தம்பி
கோவை



## என் பேரனுக்கு,,,,

அப்பா,
தோட்டத்து காய்களையும்
காட்டு விறகுகளையும்~நம்ம
ஊரில் விளைந்த
நெல்மணிகளையும்
சாப்பாட்டிற்கு
பயன்படுத்தினார்,

நான் நகரத்தில் வசிப்பதால்
கடையில் வாங்கிதான்
உலையில் போடுகிறேன்,

என் மகன் குடிக்கும்
தண்ணீரைக்கூட
காசுக்கொடுத்து
கடையில் வாங்கிதான்
குடிக்கிறான்,

நாளை, காசுக்கொடுத்தாலும்
இவையெல்லாம்
கிடைக்குமா?
என்பேரனுக்கு,,,,?!
விளைநிலங்களெல்லாம்
வீடுகளாகும்போது,,,!

நாகை ஆசைத்தம்பி
கோவை




## இசை மேதை டி.எம். சௌந்தரராசன் பாடல்களில் சிகரம் தன்னம்பிக்கைப் பாடல்கள்!



படிப்பறிவு இல்லாத பாமரனையும்
பாடல் பாட வைத்து தமிழைக் கற்பித்தவர்!
காதல் பாடல்கள் கைகள் என்றால்
தத்துவப் பாடல்கள் கால்கள் ஆகும்!
தன்னம்பிக்கைப் பாடல்கள் இதயம் போன்றது !
இதயமின்றி மற்ற உறுப்புகளின் இயக்கம்,
சாத்தியமில்லை எனபது சத்யம்!
சௌந்தரமான குரலுக்குச் சொந்தக்காரர் சௌந்தரராசன் !
காதல் பாடல்கள் குழம்பு என்றால்
தத்துவப் பாடல்கள் ரசம் ஆகும்!
தன்னம்பிக்கைப் பாடல்கள் சோறு போன்றது !
சோறின்றி குழம்பு, ரசம் இருந்து ரசனையில்லை.
காதல் பாடல் தலைப்பில் பாட மறுத்ததால்
காதலுக்கு எதிரி அல்ல நான்!
தன்னம்பிக்கை எனக்குள் வளர்த்தது தன்னம்பிக்கை பாடல்!
தன்னம்பிக்கையுடன் தன்னம்பிக்கையைத் தேர்ந்தெடுத்தேன்!
ஒரு மனிதன் காதலின்றி வாழ்ந்திடலாம்!
ஒரு மனிதன் தத்துவம் அறியாமலும் வாழ்ந்திடலாம்!
ஒரு மனிதன் தன்னம்பிக்கையின்றி வாழ்வது கடினம்!
காதலா? தத்துவமா? தன்னம்பிக்கையா? என்று
கேள்விகள் எழுப்பினால் தன்னம்பிக்கையே விடையாகும் !
அச்சம் என்பது மடமையடா! பாடிப் பாருங்கள்!
அச்சம் அகத்திலிருந்து அறவே அகன்று விடும்!
சின்னப்பயலே சின்னப்பயலே பாடிப் பாருங்கள்!
சிந்தனையில் அனைவருக்கும் தெளிவு பிறக்கும்!
திருடாதே பாப்பா திருடாதே பாடிப் பாருங்கள்
திருட்டுக்குணம் குழந்தைகளிடம் அற்றுப் போகும்!
உழைத்து வாழ வேண்டும் உச்சரித்துப் பாருங்கள்!
உழைப்பின் உன்னதம், உயர்வை உடன் உணர்வீர்கள்!
ஏழையாகப் பிறந்து ஏழையாகவே வாழாதவர்!
ஏழ்மையை தன்னம்பிக்கையால் தரைமட்டமாக்கியவர்!
மதுரையில் பிறந்து மதுரையின் பெருமைகளில் ஒன்றானவர்!
மதுரையின் புகழை உலக அரங்கில் உயர்த்தியவர்!
தாய்மொழி தமிழ் இல்லை, சௌராட்டிரம் என்ற போதும்
தமிழ் அன்னையின் அன்பை முழுவதுமாகப் பெற்றவர்!
நடிகர் திலகமே நடுங்கிய குரலுக்குச் சொந்தக்காரர்!
மக்கள் திலகமே மிரண்டிட்ட குரலுக்குச் சொந்தக்காரர்!
இருவரின் புகழுக்கும் உயர்வுக்கும் காரணமானவர்!
இருவரிடமும் எந்த உதவியும் என்றும் கேட்காதவர்!
ஆறு முதல் அறுபது வரை அனைவரும் விரும்பிடும்
அற்புதமான ரம்மியமான குரலுக்குச் சொந்தக்காரர்!
ஆயிரக்கணக்கில் பாடல்கள் பல பாடிய போதும்!
அகந்தையைத் தலையில் ஏந்திக் கொள்ளாதவர்!
தோல்வியால் துவண்ட உள்ளங்களை தூக்கி நிறுத்தியவர்!
தோல்விக்கு அஞ்சாத குணத்தை பயிற்றுவித்தவர்!
தன்னம்பிக்கையை தன் பாட்டால் விதைத்தவர்!
தன்னம்பிக்கையின் சின்னமாக என்றும் விளங்கியவர்!
டி.எம். சௌந்தரராசன் என்றால் தன்னம்பிக்கை
தன்னம்பிக்கை என்றால் டி.எம். சௌந்தரராசன்
உடலால் உலகை விட்டு மறைந்திட்ட போதும்
பாடல்களால் உலகத்தமிழர்களின் உள்ளங்களில் வாழ்பவர்!
வாழ்க பல்லாண்டு!

கவிஞர் இரா. இரவி!



## சிலந்தி வலை

விடா முயற்சியின் சான்று

நீர்த்துளிகளின் சேர்ப்பில்
ஊருக்கு உதாரணமாகும்

சிக்கலின்றிப் பிணைந்து
சீராய் இடமாக்கும்

தன்னைச் சுற்றிய வலை
அரணா? அடைக்கலமா?

இடமும் இனமும்
இணை சேர்ந்து
இயற்கையாகக் காவலாகும்

உருவில் சிறிய
உயிரென்றாலும்
உன்னதமான உழைப்பாளி

சின்னக்கூட்டில்
பின்னிப்பிணைந்து
எண்ணத்தில் ஏற்றம்
கொண்டிருக்கும்

பகட்டு வாழ்வு
தேவையில்லை
பரணில் கூட்டை
அமைத்திடும்

இழையில் மென்மை
கொண்டிருக்கும்
வலையில் உறுதி
பிணைந்து இருக்கும்

ஊக்கம் குறைந்த
மன்னனுக்கு
தேக்கம் நீக்கிப் பாடம்
சொல்லும் தளர்வில்லா
முயற்சியால் தரணியும்
நமக்குக் கைகூடும்

தடையில்லை வாழ்வில்
விடையாகி ஐயம் நீக்கும்

முயற்சியின் பலனாய்
வலை பின்னி
அயர்ச்சியில் உள்ளே
தங்கிவிடும்





சுயமாய்க் கட்டிய
கோட்டை என்றாலும்
சுதந்திரமாய் வெளியேற
வழி இல்லாச் சிலந்தி
வலை.

தமிழ்நிலா

## நூல் விமர்சனம்

அம்மாவின் கைநாட்டு
நூலாசிரியர்_ஆகிருட்டிணன்
அவர்கள்
நூல் விமர்சனம்
தயானி தாயுமானவன்
வாழ்த்துரை
மல்லை சத்யா அவர்கள்
*மல்லைத் தமிழ்ச் சங்கம்
*உலக தமிழ்ப் பண்பாட்டு
இயக்கம் (ஆசியா)
* திராவிடர் வெற்றிக் கழகம்.
வாழ்த்துரை
தோழர் மருத்துவர்
த. அறம் அவர்கள்
மாநிலப் பொதுச்செயலாளர்
தமிழ்நாடு கலை இலக்கியப்
பெருமன்றம்
மு.முருகேஷ் அவர்கள்
முதுநிலை உதவி ஆசிரியர்
இந்து தமிழ் திசை" – நாளிதழ்
சென்னை.
பிருந்தா சாரதி அவர்கள்
திரைப்பட இயக்குனர் .
ஓவியக் கவி நா. வீரமணி
அவர்கள்
புத்தர் ஒளி பன்னாட்டுப்
பேரவை
தூரிகை ப்பதிப்பகம்




*உடைத்துவிடாதே காற்றே காதலுக்குச்சாட்சி கிணற்று நிலா.

மென்மையான உணர்வுகளைத் துல்லியமாக மலரவைப்பதில் ஹைக்கூ முக்கிய இடத்தை வகிக்கிறது.

*நிர்வாணமாய் குடிசைகள் விண்ணில் பறக்கும் ஏவுகணை வல்லரசு அதிகார வர்க்கத்தின் புன்னகையின் தாடைகளை உடைக்கத் தவறவில்லை இவரது ஹைக்கூ ஆசிரியர் பதவியில் அமரவைத்த தாய்க்கு ஒரு ஹைக்கூ பரிசாக ** என்னை ஆசிரியனாக்கி அழகு பார்க்கும் மௌனமாய் அம்மாவின் கைநாட்டு ** வீடெங்கும் நிறைந்திருக்கும் அம்மாவின் கைரேகை மெழுகிய சாணத்தில். இதுவரை தாயை இவ்வாறு எழுதியதாக எதுவும் நினைவில் இல்லை எளிமையான வரிகளில் மனம் கவரும் ஹைக்க பூத்திருக்கின்றன கோடையின் மலர்கள் போல. சமமற்ற தேர்வு முறையை வன்மையாகக் கண்டிக்கிறது இந்த ஹைக்கூ

** பச்சை மரங்களில் கூர்தீட்டும் செங்கோட்டை நீட் தேர்வு என்பது எத்தனையோ இளங் குருத்துகளை பறிகொடுத்த தாய்தந்தைக்கு தெரியும் மனவலி இது சாகும்வரை ஆயுள் தண்டனை யல்லவா ? பெற்றோருக்கு.

** சிலைகளை வைப்பது பெரிதல்ல பராமரிப்பு அவசியம் என்கிறார் கவி. ** பறவைகளின் இலவசக் கழிப்பறை தலைவர்களின் சிலைகள். ஏழைகளின் பரமபத வாழ்வில் வெளிச்சம் கூட வியாபரம் தான் ** வீடெல்லாம் இருட்டு அடகு கடையில் இருக்கிறது அம்மாவின் மூக்குத்தி என்பது ஒரு தலைமுறையின் வெளிச்சப்பூக்கள் மின்னி மறைந்த அவலம். மரணத்தின் முன்பு அனைவரும் சமம் என்பதை தன் வரிகளால் மகுடம் தரிக்கிறார் கவி ஆ. கிருட்டிணன் அவர்கள். ** பல ஏக்கர் வாங்கிய வரை வாங்கியது ஆறடி நிலம். கடைசியாகக் கேட்கிறார் ஒரு கேள்வி அரசியலின் கள்ளத்தனங்களின் சரவெடிக்கு வைக்கப்படும் இந்தக் கேள்வியால் புஸ்வாணமாகும் உங்கள் மேடைகள். ** "ஒரே நாடு சரி எப்போது கிடைக்கும ஒரே சுடுகாடு" இறந்த பிறகும் ஊரைச்சுற்றிச் செல்லும் அவலம் ஒரு நூற்றாண்டு ஆகியும் மலராத சமூக நீதியின் மொட்டுக்களை கொய்து விடும் சாதீயப்பெருமைகள் சாக்கடையாக ஓடிக்கொண்டிருக்கிறது அவரவர் ஆணவப் பெருமையில் வெல்க சமூக நீதி. வாழ்க தமிழ். வெடித்து மலரட்டும் ஹைக்கூ மொட்டுக்கள்.

*******

விமர்சனம்
தயானி தாயுமானவன்






## ஏனிந்த இழி நிலை

மொழிமறந்தான் இனம்மறந்தான் தன்னை ஏத்தி
மொழிவோரின் சொல்லுக்கே செவிகொடுத்தான்
வழிவழியாய் வந்திட்டப் பண்பை ஞாலம்
வணங்குகின்ற இலக்கியத்தின் மதிப்பழித்தான்
குழிவெட்டித் தன்னினத்தைத் தானே மாய்த்தான்
குமுறுகின்ற உடன்பிறந்தார் குரலைக்கேளான்
வழிமறந்தே பிறருக்கே அடிமையானான்
வளமான வாழ்விழந்தே இழிவு கொண்டான் !

பிறநாட்டில் மாய்கின்றான் தமிழன் என்றால்
பிறந்திட்ட நாட்டிலேயே அகதியானான்
முறத்தாலே புலிதன்னை அடித்த பெண்ணை
முச்சந்தி வீதியிலே அடிக்கின்றார்கள்
புறமுதுகு காட்டாத தமிழர் தம்மைப்
புறமெல்லாம் குருதியிலே குளிக்க வைத்து
விறகாக்கி எரிக்கின்ற இழிவு எல்லாம்
விளங்கிருந்த மொழியுணர்வை விட்டதாலே !



ஏனிந்த அவலங்கள் எண்ணிப் பார்ப்பீர்
எவ்வினமும் பட்டிடாத துயர்கள் பெற்று
கூனிப்போய் வாழ்கின்ற நிலைதான் ஏனோ
கூலிக்காய் சென்றதாலோ அன்றி தானே
ஏணியாகிப் பிறரேறக் குனிந்ததாலோ
ஏளனத்தின் காரணந்தான் என்னே நாளும்
பேணிவரும் தன்னலந்தான் ! மான வாழ்வைப்
பெறுதற்தே ஒற்றுமையின் உணர்வு கொள்வோம்!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## "கரும்பலகை அவனின் முகம் பார்க்கும் கண்ணாடி."

பள்ளி வகுப்பறையில் முதலில் அவன் பார்த்த
(கரும்பலகை) முகக் கண்ணாடி.

வகுப்பாசிரியர் கரும்பலகையில் வியர்வை
சிந்தி எழுதிக் கொண்டிருப்பார்;

அப்பொழுதுதான் கை கால் முளைத்த கணக்கிலடங்காக்
கற்பனை ஓவியங்கள் அவனின் மாயக் கண்ணாடியில்
வரிசையாக வலம் வரும்;

ஒவ்வொரு கற்பனை ஓவியத்திற்கும் உண்மையான உருவம்
கொடுத்து அவைகளை அவன் ஆட்டி வைப்பான்; அவற்றின்
தீவிர ரசிகனாகவே அவன் மாறி விடுவான்..!

வகுப்பிலுள்ள மற்ற மாணவர்கள் வகுப்பறைக்
கரும்பலகையுடன் ஒன்றியிருப்பார்கள்;

ஆனால்..

இவன் மட்டும் அதைவிட்டு எப்போதும் விலகியிருப்பான்..!


ஏனென்றால் கரும்பலகையை அவன் தன் முகம் பார்க்கும்
கண்ணாடியாக்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்
உண்மையின் ரகசியம் வெளியில் தெரிந்து விடக் கூடாதெனும்
எச்சரிக்கை கலந்த பயம் அவனைப் பின் தொடரும்..!

"கண்சிமிட்டும் கற்பனைக் கதாபாத்திரங்கள்."

நாம் எல்லோரும் கற்பனைக் கனவுலகக் கதாபாத்திரங்களுடன்
வாழப் பழகிக் கொண்டால் இப்பூவுலக வாழ்க்கை ஒரு
விளையாட்டு மைதானமாகிவிடும்..!

கற்பனையில் உருவாக்கிய கதாபாத்திரங்களை நாம் எப்படி
வேண்டுமானாலும் ஆட்டிப் படைத்து மாற்றி அமைத்துக்
கொள்ளலாம்..!

ஆனால்..



நிஜமான வாழ்க்கைச் சிக்கல்களுக்குத்தான்
நாலுபேரின் நல் ஆலோசனைகள் தேவை;
நாம் கற்பனையில் சிருஷ்டித்த நிகழ்வுகளின்
சிக்கல்களுக்கு யாருடைய ஆலோசனைகளும்
ஒருபோதும் தேவை இருக்காது..!

**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,**
திருச்சி

## வெற்றியைத் தொட்டுவிடு

விம்மி அழுவதாலே
விலகிடுமா உன் துயரம்?
சொல்லாத வலிகளெல்லாம்
சடுதியில் சென்றிடுமா?
புலம்பி சலம்புவதால்
புவி உன் கண் பார்க்குமா?
புரையோடின புண் ஒன்று
ஆறிடுமா; "ஐயோ" என்றிட.

கழிவிரக்கம் கழித்து விடு.
மனவலிமை கூட்டிவிடு.



திட்டம் வகுத்து
விடு.
திறமையை
பெருக்கி விடு.

வெற்றியைத்
தொட்டு விடு
இகழ்ச்சியை
சென்றுவிடு.

**சசிகலா விஸ்வநாதன்**

## சின்னம்...

இலை...பூ... பழம்...என இடம்
பெற்றுள்ள...சின்னங்களில்...



உன்
சுட்டுவிரல்
தீண்டிய
சின்னத்தை...
தேடிக்
கொண்டி
ருக்கிறன...
கண்கள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



ஆயிரம் என்றனர்
அவசரத்தில் கை தட்டல்
கடன் தீராது
நினைவெல்லாம் நித்யா
நித்யாவின் நினைவினிலே
யாரோ ?

**ஓம் குமார் P N**

## மண்வாழ வேண்டும்

நீ வாழ வேண்டும் –உன்
நிலை உயர வேண்டும் கோன்
ஆக வேண்டும் – கொடுங்
கோல் அகல வேண்டும்

நீ பாட வேண்டும் – உன்
நிழல் பாட வேண்டும்
வான் மேகம் வந்து – மண்
வளமாக்க வேண்டும்.

மண் வாழ வேண்டும் – தமிழ்
மணம் வீச வேண்டும் பொன்
மாலைப் பொழுதாய் – இப்
புவி ஆக வேண்டும்.



கை வீச
வேண்டும் –
தமிழ்க் கதை
பேச வேண்டும்
மெய்யான
இன்பம் –
புவி மீதூர
வேண்டும்.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.

## சீரும் சிறப்பும் செழிப்பு!

நேரிசை வெண்பா!

வாழப் பொருள்வேண்டும்
வாழ்வதில் நற்பொருள்

சூழவே வேண்டுமே!
சோம்பலின்றி.. ஆழவே

ஈரநெஞ்சம் கொண்டே
இனிமையாய் வாழ்ந்திட்டால்

சீரும் சிறப்பும் செழிப்பு!

பகைவர்க்கும் அன்பினைப்
பாராட்டி வாழ்ந்து

தகவான நற்செயல்
தக்க.. வகையாக

பேரும் புகழும்
பெருமையாய்க்கண்டாலே

சீரும் சிறப்பும் செழிப்பு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## புரிதல் புதிது

நிச்சயமாக நான் அப்படி நினைக்கவில்லை;
நான் பேசாமல் இருந்தால், நீ மீண்டும் பேசுவாய் என
நம்பினேன். என் மௌனம் மிகவும் எளிமையானது என்பதை
நீ அறிந்திருப்பாய் என்றுதான் காத்திருந்தேன்.

உன் மேல் நான் வைத்திருக்கும் நேசம் உனக்குப் புரியும்;
விலகுவது எனக்கு வழக்கம் அல்ல என்பதை நீ அறிவாய் என
நான் கணித்திருந்தேன்.

ஒரு வார்த்தை பேசினால் என்ன?
ஒரு கைகுலுக்கலில் சமாதானம் செய்து கொண்டால் என்ன?
ஒரு பார்வையில் புன்னகை சிந்தினால் என்ன?
இன்று இப்படி விலகிய பின்னும் நீ இயல்பாய் இருப்பது,
அன்று என்னிடம் நீ பழகியது இயல்பான ஒன்றல்லவோ என
என் மனதை ரணமாக்கிக் கொண்டிருக்கிறது.
இப்படி ஒரு நீண்ட பிரிவு வரும் எனத் தெரிந்திருந்தால்,
சின்னப் பிரிவைக் கூட நான் ஒருபோதும் ஏற்படுத்தியிருக்க
மாட்டேன்.

இப்போது ஒன்று புரிகிறது... பிரிவு சில நேரங்களில்
நல்லதொரு புரிதலைத் தருகிறது. பிரிவு அதுவாக வருவதல்ல;
அப்படியே வந்தாலும் அதனை ஏற்றுக்கொண்டு,
மீண்டும் இணைய வாய்ப்பே இல்லாமல் அது நீண்டு
கொண்டே போனால்... அந்த உறவு நமக்கானது அல்ல
என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்து போகிறேன்... ஆனால் காத்திருக்கிறேன்.
பொய் பேசும் உன் முகம் என்றாவது என் கண்ணில் பட்டால்,
உன் முதல் வார்த்தை என்னவாக இருக்கும்?
உன் முகபாவம் என்ன சொல்லும்?
அது எப்படி என் கோபத்தை வெல்லும்?



அர்த்தமற்ற ஆசைகள்தான் இவை;
ஆசைகளுக்கு அர்த்தம் இருந்திருந்தால்,
அவை அழிந்து போயிருக்கும். இங்கு
ஆசைகள் அழிந்து போகாததால் தான்,
நாம் ஆசையால் அழிந்து கொண்டிருக்கிறோம்.

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

யார் குரலுக்குத் தவிக்கிறதோ
அவரோடுதான் பேசாமலிரு
என்று தடை போடுகிறது
இந்த வீம்பு.

இந்த வீதியை அப்படியே
சுருட்டி உன் பக்கமாய்
விரிக்கச் சொல்கிறது மனசு..

இன்னொரு பாதியை



உன்னிடம்
புதைத்து
படைத்திருக்கிறது
இயற்கை..
தேடிக்
கொண்டிருக்கிறது
இந்தப் பாதி.

**ரிஷபன்**

## முகமூடிகள் பலவிதம்

மனத்தின் நிறத்திற்கு
ஏற்ப மாறும் முகம் ஒன்றே
முகமூடிகள் பலவிதம்

சந்தோஷமாகச் சிரிக்கும்
முகமூடி சோகத்தை
மறைக்கும் மனம்

துணிச்சல் பேசும் முகமூடி
பயத்தை மறைக்கும் மனம்

அன்பைப் பொழியும்
முகமூடி அகங்காரத்தை
மறைக்கும் மனம்

மௌனம் அணியும்
மூகமூடி வேதனையை
மறைக்கும் மனம்

ஒவ்வொரு கணமும்
விரும்பும் நபராக
வேடம் தேர்வு செய்து
உள்ளத்தை மாற்றிக்
கொண்டு...

“நான்” என்ற சொல்லும்
நாடக உரையாகி,
நிஜம் மேடைக்கு
வெளியே காத்திருக்க...

அகத்தின் உண்மை
அழைத்தாலும் கேட்காமல்,
வெளிப் பார்வைக்காக
வாழும் வாழ்க்கையில்...

ஓர்நாள்...

அனைத்து முகமூடிகளும்
களைந்து நிதர்சனமான
உண்மையின் முன் நின்று
கொள்வோமா? அல்லது
அதையும் மறைக்க
புதிய முகமூடித்
தேடுவோமா...?



காலமே...
முடிவு உன்
கையில்...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## சாம்பலாகும் மனித இனம் !

மண்ணிலிருந்து விண்ணுக்கு
தொடர் வெடியாய் வெடிக்கும்
பட்டாசுகள்... !
மனித உயிர்களைத்
தொடர்ந்து பழிவாங்கும்
நிலையிலும் இதற்கு ஒரு
முடிவில்லையோ !

காலை புலர்வதும்
நிச்சயமில்லை. மாலை வீடு
திரும்புவதும் நிச்சயமில்லை...
மரணத்தோடு பயணிக்கிறது
அவர்களின் வாழ்க்கை...

வயிற்று பிழைப்புக்காக..



விண்ணை
முட்டும்
வெடிகளை
உருவாக்க
கந்தகத்
தூள்களை
தினமும்
சுவாசிக்கும்
பட்டாசு ஆலை
தொழிலாளர்களின்
வாழ்க்கை விடியுமா... !

**எம்.பி.தினேஷ்.** கோவை



## பெட்டகம் !

கருப்பு திராட்சைகள்
கண்ணாடி பெட்டகத்தில்
அடைத்து வைத்ததை.
உன் கண்களைப் பார்த்த
பின் தான் நானும்
காண்கிறேன் !

**எம்.பி.தினேஷ்.** கோவை


மாற்றம் வருகிறா?
ஏமாற்றம் வருகிறா?
என்றெல்லாம் எங்களுக்குத்
தெரியாது. ஆனால் தேர்தல்
வருகிறது ஐந்தாண்டுக்கு
ஒருமுறை. தெரிந்திருந்தால்
என்றோ மாறியிருப்போமே
என்று அம்மாவும்
அப்பாவும் சொல்கிறார்கள்
காட்டுக் களையை
எடுத்துக்கொண்டு.

பயிருக்கு தீங்கானதை
பார்த்துப்பார்த்து
எடுக்கிறார்கள்.



உயிருக்கு
தீங்கென
நான்
சொல்லியும்
மீண்டும்
அதையே
செய்கிறார்கள்.

**துங்கன்.**



என்னை கொத்தி தான்
தின்றது உன்னுடைய
மீன்கொத்தி கண்கள்!

நீ இளநீர் தானடி குடித்தாய்
பதநீர் ஆனது
பாழும் மனசு!

மறந்து விடு எனச்
சொல்லியும் மறக்காத–என்
மானம் கெட்ட காதலை
என்ன தான் செய்வதோ?!

நீ செல்லங்கள் கொஞ்சும்
வாயில்லா ஜீவன்களெல்லாம்
வரம் பெற்றவைகள் தான்!

கையில் மட்டுமல்ல
உயிரிலும் பொத்தி வைப்பேன்
பொக்கிஷமான உன்
காதலை!

என்ன தான் செய்தாய்?
அந்த ஒரு பார்வை
என்னென்னமோ செய்கிறது!

வறட்டு நெஞ்சிலும்
ஈர சொட்ட வைக்கிறது–
அந்த திருட்டு பார்வை

மொத்தமாய் என்ன
வேண்டுமென்கிறாய்?
முத்தமாய் நிரப்பென
எப்படி சொல்வது!

சேராமல் போனால் தான்
என்னடி? பாரமாய் என்னுள்
மாறாமல் வாழ்ந்திடும்
உன் காதலடி!
பிரிவதும், சேர்வதும்
மட்டுமல்ல என் சதை
நெருப்பில் வெந்து
சாம்பலாகும் வரை
நினைத்து கொண்டிருப்பதும்
காதல் தான்!

ரொம்பவும் தலைவலிக்கிறது
கொஞ்சம் ஸ்ட்ராங்காய்
முத்த "டீ" ஸ்பரிசத்துடன்
கொடு!

செல்வியே நீயும்
தமிழ் செய்யுளும் ஒன்று தான்
ஏனெனில் எப்படி மனப்பாடம்
செய்தாலும்
புரியப் போவதே இல்லை!

கோபப்படுவது போல
கொஞ்சுவதும்
கொஞ்சுவது போல
மிஞ்சுவதும் சைத்தானே
உன்னால் மட்டுமே சாத்தியம்!

காதலோடு
முத்தமிடுவதற்காக
அந்த தேவதையின்
கன்னம் தொட்டேன்
ஏனோ வண்ண மயில் கோபம்
கொண்டது கோபம் குறைக்க
எந்த கவி பாடுவது!

கள்ளனே உள்ளம் கவர்
கவிதை தா என்றது
அந்த தேவதை
அழ வைத்த பிறகு
அழகியல் எங்கே வருவது?!


பாட்டி சொன்ன போது
புரளி கதைகள்
என்றிருந்தேன்
பத்தாம் வகுப்பு
படிக்கும் போது
ஜாஸ்மின் மிஸ் சொன்ன
போது உருட்டு கதைகள்
என்று நினைத்திருந்தேன்.
அடியே உன்னை பார்த்த
பிறகே தேவதை கதைகள்
உண்மையென்று ஒத்துக்
கொண்டேன்!

தொழுகையின் போது கூட
சில நேரம் தொந்தரவு
செய்யும் அவள் இபிலீஸ்
நினைவுகளிலிருந்து
காப்பாயாக யா அல்லாஹ்!
அறமில்லாத காதலெல்லாம்
ஹராம் தான். மறுமை
அறியாத கப்ருஸ்தான்
வேதனை அனுபவிக்காத
பாவப்பட்ட மனுசப்பிறவிக்கு
ஏனோ கடைசி வரை
புரிவதேயில்லை!

இலைகளின் உதிர்வெல்லாம்
உனக்காக தான்
ஒரு முறையாவது
மண்ணில் விழுந்த
இலைச் சறகுகளை
வாஞ்சையோடு தொட்டு
விட்டுப் போ மீண்டும்
மரங்களில் துளிர்க்கும்
இலைகள் உன் மீது பனியை
காதலாய் பொழிவதற்காக!

அரேபியாவின் நறுமண
வாசனை திரவியம் உன்
மூச்சு அல்ஜௌப் சபாவி
பேரீச்சம் பழத்தின்
அடர் கருநிறத்தை ஒத்தது
உன் கூந்தல் "ம் "என்று
சொல் கஸீதா பாடலாகி
போகும் உன் குரல்
பெட்ரா கல்பாறை
இதயத்தை உடைத்து விட்டு
உள்ளிருக்கும் காதலை
ஒருமுறை சொல்வாயா??
மணல் பூத்த காட்டில்
உனக்காக காத்திருக்கும்
ஓராயிரம் கவிதைகள்!!

**லி.நௌஷாத் கான்**



## ஹைக்கூகள்

நிழலை நீருக்குள் தள்ளி/
குளக்கரை தியானத்தில்/
நானும் அமைதியும்./
*********
மே வெயில்/
மழையுடன் தப்பி விடுகிறது/
என் நிழலைச் சுடாமல்./
**********
வட்டமிடும் பறவைகள்
கண்டும் கற்கவில்லை பாடம்/
அரைவட்ட வானவில்./
********
ஓய்வெடுக்கிறது இன்று/
இருபத்தொன்பது
நிலவுகளால்/
பாதிக்கப்பட்ட இருள்./
********
அமைதியாகவீசுகின்றன/
அடுத்தப் புயலின்
பெயரறியா/
கடல் அலைகள்./
********
கண் விழிக்கும் போதெல்லாம்/
வீழ்ந்திடும் எரிகற்கள்/
அடுத்த துயிலின் மேல்./
*********
மழைக்கு அழைப்பு விடும்/
முழுநிலவைக் கடந்து/
ஒளியிழந்த முகிலினங்கள்./
*********
இறக்கை மேல் வரைந்த/
ஓவியத்தை ரசிக்க
நேரமில்லை/
மகரந்தச் சேர்க்கையில்
பட்டாம்பூச்சி. /
*********
இருளில் சங்கமித்த
ஒளியைப்/
பிரித்தெடுக்கையில்/
புதிய வெளிச்சத்தின் வரவு./
**********
சிற்பி, ஓவியனை இறைவன்/
சிநேகிதராய்
நேசிக்கையில்/
சிந்தை கலைக்கும்
ஆலயமணி./



**முனைவர்**
**வே. புகழேந்தி,**
பெங்களூர்


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


குன்னத்தோழும்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிவுக்கு வரளன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


ADVERTISE
WITH US
7789941009


ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services (Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services (Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply (Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices
WHY CHOOSE US?
• Experienced & Professional Team
• 24/7 Reliable Support
• Affordable & Transparent Pricing
• Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1,
Moovarasampet Main Road,
Madipakkam, Chennai-600091.
+91 93632 98980 ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families


உ முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591,9578622711


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.



SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are
HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS:THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennal Real Choice Chennal Real Choice Chennal


THANIGAI
WANTED
ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com


அகிலாண்டேஸ்வரி நகரில் வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு = 30x40 = 1200 ச.அடி
மனை விலை 1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம் : பத்தமடை உள்ளது திருநெல்வேலி மாவட்டம்
LOCATION



SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009




WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005




Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521




WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756




GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009




தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!




WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009




ADVERTISE WITH US
CONTACT US
9438610756




Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699




TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009




உ
ஸ்ரீ வாசவி சகாயம்
கரூர் ஸ்ரீ வாசவி
கன்னிகாபரமேஸ்வரி அம்மன்
ஜெயந்தி தின விழா
அழைப்பிதழ்
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
(15.04.2026 முதல் 27.04.2026 முடிய)


முனீஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
RG Rajendra Prasath
Proprietor
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


DIGITAL
MARKETING
SOLUTIONS
SEO
DIGITAL MARKETING
EMAIL MARKETING
smartpromoters.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


ஸர்வேஜநா சுகிநோபவந்து
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
అజంతా
వక్క పలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
RAVIKUMAR AND COMPANY
சம்பிரதாய
தாம்பூல பாக்கு!
பூஜைக்கு
உகந்த பாக்கு
21, North Mada Street, Viilivakkam, Chennai - 600 049 PH: 044 26171341 | emalir ajanthasupari@hotmail.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PALANIVEL
PR
TRANSPORT
9677174691
9176232026
NO.1-B, parivallai street, Murugappa nagar,
Manali high road, Ernavoor,Chennai-57


Sir Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
20% OFF
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com



உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com


உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com



வாரம் தோறும்
பல்சுவை செய்திகளை
தரும் தரமான
வார இதழ்
வைகறையில்
பேப்பர்பாய்
www.Paperboy.com



# பல்சுவை களஞ்சியம்




## அப்பா மாறவில்லை



சின்ன வயதில் பட்டாசு கம்மியாக வாங்கி கொடுத்ததற்கு, அப்பாவிடம் சண்டை போட்டது, ஞாபகத்திற்கு வந்து போனது. பாவம் அப்பா.

கையில் கொஞ்சம் காசு வந்தவுடன், நான் தான் மாறியிருந்தேன்.

அப்பா மாறவேயில்லை.

போனவரம், நரதகான சபாவில் ஒரு பாகவதர் உபன்யாசம் கேட்க, நண்பன் கிருஷ்ணனோடு போயிருந்தபோது, பாகவதர் சொன்னது ஞாபகத்தில் வந்தது. அவர் சொன்னது இது தான்.

"தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே".

ஒரு கட்டத்தின் வெளித் தோற்றம் மாதிரி அம்மா. பார்க்க அழகாக இருப்பாள். வீடும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பாள். ஆனால் அந்த வீட்டின் அஸ்திவாரம் அப்பா. அதன் பலன் வெளியே தெரியாது. ஆனால் உறுதியாக இருக்கும்.

நான் போகும் பாதை எல்லாம் என் தந்தை போட்டு வைத்தது. எனை சேரும் செல்வம் எல்லாம், அவர் பார்த்து விதைத்தது!

கையில் கொஞ்சம் காசு வந்தவுடன், நான் தான் மாறியிருந்தேன். அப்பா மாறவேயில்லை...

இதுபோல் ஆயிரம் அப்பாக்கள்.


# மீம்ஸ்







## திட்டமிடுதலின் அவசியம்



ஒரு நகரத்திற்கு ஒரு சட்டமிருந்தது. அதன்படி யார் வேண்டுமானாலும் அந்த நகரத்திற்கு ராஜாவாக வரமுடியும். ஆனால், அந்தப் பதவி ஐந்தாண்டுகள் மட்டுமே! ஐந்தாண்டு முடிந்த அடுத்த நாளே மன்னனை ஆற்றின் கரைக்கு மறுபுறம் உள்ள காட்டில் விட்டுவிடுவார்கள். அந்தக் காட்டில் மனிதர்கள் கிடையாது. வெறும் கொடிய விலங்குகள் மட்டுமே! மன்னன் காட்டிற்குள் நுழைந்தால் போதும்; வனவிலங்குகள் கொன்று தீர்த்துவிடும்.

இந்த சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது. இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டவன் மட்டுமே அரியணையில் அமரப் பொருத்தமானவன். ஆக, மன்னனாக முடிசூட்டிக் கொண்டவனின் தலையெழுத்து, ஐந்து ஆண்டுகளுக்குப் பின் கட்டாய மரணம்.

இந்தக் கடுமையான சட்டத்துக்கு பயந்தே யாரும் அந்தப் பதவிக்கு ஆசைப்படாமலல் இருந்ததால் அந்த அரியணை பெரும்பாலும் காலியாகவே இருந்தது.

இருப்பினும் ஒரு சிலர்' எப்படியிருந்தாலும் சாகத்தானே போகிறோம்; மன்னனாகவே மடியலாமே!' என்று பதவி ஏற்பதுண்டு. அதிலும் பாதி மன்னர்கள் இடையிலேயே மாரடைப்பால் மரணமடைவதும் உண்டு.

இப்படி ஒரு மன்னனுக்கு ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிந்தது. அன்று ஆற்றின் கரையைக் கடந்து காட்டிற்குச் செல்ல வேண்டும். அவனை வழியனுப்ப நாடே திரண்டிருந்தது.

மன்னன் வந்தான், அவனுடைய சிறப்பான ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முடிசூடி, தங்க வாளேந்தி வைரங்கள் மின்ன மக்கள் முன் நின்றான். மக்கள் வாயைப் பிளந்தனர். ”இன்னும் அரை மணி நேரத்தில் சாகப் போகிறான்; அதற்கு இவ்வளவு அலங்காரமா!”

தான் செல்லவிருந்த படகைப் பார்த்துவிட்டு சினத்துடன் கூறினான், ”மன்னன் செல்லும் படகா இது! பெரிய படகைக் கொண்டு வாருங்கள்! நான் நின்றுகொண்டா செல்வது! சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்!”

கட்டளைகள் பறந்தன; காரியங்கள் நடந்தன! சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அழகான படகு ஆற்று நீரைத் கிழித்துக் கொண்டு மறுகரை நோக்கிப் பயணித்தது.

மக்கள் திகைத்து நிற்க, மன்னன் கையசைக்க பயணம் தொடர்ந்தது.

மிகவும் அதிர்ச்சி அடைந்தவன் படகோட்டியே! காரணம், இதுவரை அவன் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எந்த மன்னனும் மகிழ்ச்சியாக சென்றதில்லை. அழுது புலம்பி, புரண்டு, வெம்பிச் செல்வார்கள். இவனோ, மகிழ்ச்சிக் களிப்பில் பொங்கி வழிகிறான்.

படகோட்டி பொறுத்துக் கொள்ள முடியாமல் கேட்டான் ”மன்னா! எங்கே செல்கிறீர்கள் தெரியுமா?”

”தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்!”

”அங்கே சென்றவர்கள் திரும்ப இந்த நகரத்திற்கு வந்ததில்லை தெரியுமா?”

”தெரியும். நானும் திரும்ப இந்த நகரத்திற்கு வரப் போவதில்லை!”

”பின்னே எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?”

”அதுவா! நான் என்ன செய்தேன் தெரியுமா? ஆட்சிக்கு வந்த ஓராண்டு முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டிற்கு அனுப்பினேன்; அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்று விட்டார்கள்!

இரண்டாமாண்டு முடிவில் ஆயிரம் விவசாயிகள் சென்றார்கள்; காட்டைத் திருத்தி உழுதார்கள்; இன்று ஏராளமான தானியங்கள் காய்கறிகள்.

மூன்றாமாண்டு முடிவில் ஆயிரம் கட்டடக்கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள் சென்றனர். இன்று வீடு, வாசல், அரண்மனை, அந்தப்புரம், சாலைகள் எல்லாம் தயார்!

நான்காம் ஆண்டு முடிவில் ஆயிரம் அரசு அதிகாரிகள் சென்றனர். நிர்வாகம் சீரடைந்தது. இந்த 4000 பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்கின்றனர்.

இப்போது நான் காட்டிற்குப் போகவில்லை; என்னுடைய நாட்டிற்குப் போகின்றேன்! சாகப் போகவில்லை, வாழப் போகின்றேன்! அதுவும் மன்னனாக ஆளப்போகிறேன்! உனக்கு ஒருவேளை அரண்மனைப் படகோட்டி வேலை வேண்டுமென்றால், இந்தப் படகோடு இப்படியே வேலைக்கு சேர்ந்து விடு!” என்றான் மன்னன்.

ஒரே ஒரு கேள்வியை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். மன்னனின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?

பல காரணங்கள் இருந்தாலும் குறிப்பாக இரண்டினைக் கூறலாம்.

ஒன்று : ஐந்து ஆண்டுகளுக்குப் பின் உயிர் வாழவேண்டும்; அதுவும் மன்னனாகவே வாழவேண்டும் என்று முடிவு எடுத்தது.

இரண்டு : அந்த முடிவினை அடைவதற்காக திட்டமிட்டு உழைத்தது!

அந்த மன்னனுடைய வெற்றிக்கு மட்டுமல்ல; நாம் அனைவருமே வெற்றி பெற வேண்டும் என்றால் நமக்குத் தேவை ஒரு இலக்கை நிர்ணயித்தலும் அதற்காக திட்டமிடுதலும், திட்டமிட்ட பின் வெற்றி பெறும்வரை கடுமையாகவும் புத்திசாலித் தனமாக உழைப்பதுமே !

-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



## விடுகதை

| | |
|---|---|
| வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன? | உழுந்து |
| முத்துக் கோட்டையிலே மகாராணி சிறைபட்டிருக்கிறாள். அவள் யார்? | நாக்கு |
| கூரை வீட்டைப் பிரிச்சா ஓட்டுவீடு! ஓட்டு வீட்டுக்குள்ள வெள்ளை மாளிகை !வெள்ளை மாளிகைக்கு நடுவில் குளம் !அது என்ன? | தேங்காய் |
| பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை. அது என்ன? | வானொலி பெட்டி |
| கந்தல் துணிக்காரி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்? | பாம்பு |



## ஜோக்ஸ்

ஏன் அந்த தயாரிப்பாளர் ரொம்ப அதிர்ச்சியா உட்கார்ந்து இருக்கிறார்?

அவர் படத்துல பயன்படுத்துன திருக்குறளுக்கும் புறநானூருக்கும் ராயல்டி கேட்டு திருவள்ளுவர் கணியன் பூங்குன்றனார் பேர்ல் நோட்டீஸ் வந்து இருக்காம்

****************

அப்பா: உனக்காக படிப்புக்கு நான் ஒண்ணாம் வகுப்பில் இருந்து லட்சக்கணக்கில் செலவு பண்ணி இருக்கேன். பன்னிரண்டாம் வகுப்புல கம்மியா மார்க் எடுத்து இருக்கியே?

மகன்: நீங்க ஏன் 12 ஆம் வகுப்புல எடுத்த மார்க்கை மட்டும் பாக்குறீங்க. ஒன்றாம் வகுப்பில் இருந்து எடுத்த மார்க் எல்லாம் கூட்டிப் பாருங்க. நிறைய வரும்.



****************

****************

மங்கள வாத்தியம் கோஷ்டி ஏன் போட்டித்தேர்வு அறைக்கு வெளியே நிக்கிறாங்க?

முகூர்த்த நேரம் முடிய போறதுனால போட்டித் தேர்வு எழுதிக்கிட்டு இருக்குற பொண்ணுக்கு அங்கேயே திருமணம் நடக்க போகுதாம்.

****************

****************

ஏன் அந்த டாக்டர் மொபைல் பார்த்து மருந்து எழுதுறாரு?

அவர் லீக்கான கொஸ்டின் பேப்பர் நீட் தேர்வுல பாஸ் ஆனவராம்.



# சமையல் அறை ஸ்பெஷல்



## பயனுள்ள சமையல் டிப்ஸ் உங்களுக்காக...



* கிழங்குகளை உப்புப்போட்டு வேக வைக்கக் கூடாது. அப்படி செய்தால் சீக்கிரம் வேகாது.

* சாதம் கொதிக்கும் போது இரண்டு துளி எலுமிச்சம்பழச் சாறு பிழிந்தால் சாதம் வெண்மையாக இருக்கும்.

* உருளைக்கிழங்கை சீவியதும் சிறிது பயத்தம் பருப்பு மாவைத் தூவி சிப்ஸ் செய்தால் மொறுமொறுப்பாக இருக்கும்.

* பால் பாயசம் செய்யும் போது பாதாம் பருப்பை அரைத்து சேர்த்தால் பாயசம் சுவையாக இருக்கும்.

* ரவாதோசை செய்யும்போது 2 ஸ்பூன் கடலை மாவு சேர்த்தால் தோசை நன்கு சிவந்தும், மொறுமொறுப்பாகவும் இருக்கும்.

* சேமியாவை வாணலியில் வறுத்து விட்டு உப்புமா செய்தால் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் இருக்கும்.

* கோதுமை அல்வா செய்யும்போது வெந்நீர் தெளித்து நெய் கலந்து கிளறினால் சுவையும் மணமும் கூடும்.

* பச்சை மிளகாயைக் காம்பு எடுக்காமல் பெருங்காய டப்பாவில் போட்டால் பெருங்காயம் கட்டியாகாமல் மிருதுவாக இருக்கும்.

* வத்தல் குழம்பு தயார் செய்யும் போது அவரை, கத்திரி, கொத்தவரங்காய் வத்தல்களை 15 நிமிடம் வெந்நீரில் ஊறவைத்து குழம்பில் சேர்த்தால் சீக்கிரம் வெந்து விடும்.

* எலுமிச்சை, தக்காளி, புளி, தேங்காய் சாத வகைகள் செய்யும் முன்பு சாதத்தை ஒரு பெரிய தாம்பாளத்தில் போட்டு நல்லெண்ணெய் விட்டுக் கிளறி ஆற வைத்து பின்னர் செய்தால் உதிரி உதிரியாகவும், சுவையாகவும் இருக்கும்.

* வடை மாவில் அரை கப் சாதத்தை பிசைந்து வடை தயாரித்தால் மிருதுவாக இருக்கும். எண்ணெய்யும் அதிகம் குடிக்காது.

## கொத்தமல்லி கார உருண்டை



தேவையான பொருட்கள்:
அரிசி ரவை-2 கப்
கொத்தமல்லித்தழை - சின்ன கட்டு
பச்சை மிளகாய் -3
தேங்காய்த் துருவல் - 4 கப்
நெய் - 2 டீஸ்பூன்
புளி - சிறிதளவு
கடுகு - 1½ டீஸ்பூன்
உளுந்தம்பருப்பு, கடலைப்பருப்பு தலா - 2 டீஸ்பூன்
பெருங்காயத்தூள் ½ டீஸ்பூன்
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

செய்முறை:
வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு, கொத்தமல்லித்தழை, பச்சை மிளகாய், தேங்காய்த் துருவல், புளி ஆகியவற்றை வதக்கி, பின்னர் மிக்சியில் விழுதாக அரைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, உளுந்தம்பருப்பு, கடலைப்பருப்பு தாளித்து, 5 கப் நீர் ஊற்றவும். அதில் அரைத்த விழுது, பெருங்காயத்தூள், உப்பு, நெய் சேர்த்துக் கொதிக்கவிடவும்.
நன்கு கொதிக்கும்போது, அடுப்பை 'சிம்'மில் வைத்து, அரிசி ரவையை சேர்த்து கைவிடாமல் கிளறி, மூடிபோட்டு 10 நிமிடம் வேகவிட்டு இறக்கவும். ஆறியதும் சிறு உருண்டைகளாகப் பிடித்து, இட்லித் தட்டில் வைத்து ஆவியில் வேகவிட்டு எடுத்தால் சுவையான கொத்தமல்லி கார உருண்டை தயார்.

## ஜூஸியான கலாகண்ட் செய்வது எப்படி?



சுவையான கலாகண்ட் செய்வது எப்படி என பார்ப்போம். கலாகண்ட் செய்வதற்கு பால், பன்னீர், நெய், சர்க்கரை, ஏலக்காய் உள்ளிட்டவை அவசியம். இதில் பன்னீரை கடையில் வாங்கமல், வீட்டில் இருக்கும் பாலை வைத்து நாமே செய்தால் கலாகண்ட் நன்றாக வரும்.

தேவையான பொருட்கள்...
பால் - 1 லிட்டர்
நெய் - 1/2 கப்
சர்க்கரை - 1 கப்
குங்குமப்பூ - (வேண்டுமென்றால்)
ஏலக்காய்த்தூள் - 1 டீஸ்பூன்
பிஸ்தா - (வேண்டுமென்றால்)
பாதாம் - (வேண்டுமென்றால்)
எலுமிச்சை பழச்சாறு - 1 பழம்
ருசிக்க தயாராக கலாகண்ட் இனிப்பு

செய்முறை
முதலில் பன்னீர் செய்வது எப்படி என பார்ப்போம். பன்னீர் செய்வதற்கு 500மிலி பால் எடுத்துக்கொள்வோம். பாலை நன்கு காய்ச்சவேண்டும். பால் நன்கு கொதித்தபின்பு, அதில் ஒரு எலுமிச்சைப்பழத்தை பிழிந்து விடவேண்டும். பால் முழுவதுமாக திரிந்து வரும்வரையில் அடுப்பை நிறுத்தவேண்டாம். பின்னர் தண்ணீர் தனியாக பிரிந்த உடன், அதனை எடுத்து வடிகட்டி கொள்ளலாம். பின்னர் பன்னீர் மீது தண்ணீர் ஊற்றவேண்டும். அப்போதுதான் பன்னீரில் எலுமிச்சைப் பழத்தின் புளிப்பு தெரியாது.

பின்னர் ஒரு லிட்டர் பால் எடுத்துக்கொண்டு, அதனை நன்கு கொதிக்கவிடவேண்டும். கொதிக்கும்போது கிண்டிவிட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் பாத்திரத்தில் அடிபிடிக்காது. பால் நன்கு வற்றி, க்ரீம் பதத்திற்கு வரும்வரை கிண்டவேண்டும். இந்தப்பதம் வரும்போதே பாலில், செய்துவைத்த பன்னீரை எடுத்துக்கொட்டி கிண்டுங்கள். தொடர்ந்து கிண்டியபிறகு பாலில் உள்ள ஈரம் வற்றியபிறகு, அதில் அரை கப் நெய் ஊற்றவேண்டும். நெய் ஊற்றி 5 நிமிடம் நன்றாக கிண்டியபின், 1 கப் வெள்ளை சர்க்கரையை சேர்க்கவேண்டும். இனிப்பு கூடுதலாக வேண்டுமென்றால், கூடுதல் சர்க்கரை சேர்த்துக்கொள்ளலாம்.

கடைசியில் ஏலக்காய்தூள் போட்டு கிண்டவேண்டும். பின்னர் கலாகண்ட் நன்கு கெட்டி பதத்திற்கு வந்தபின் இறக்கிக்கொள்ளலாம். நன்கு நிறம்வேண்டும் என்பவர்கள் கூடுதல் நேரம்வைத்து கிண்டலாம். பின்னர் ஒரு பாத்திரத்தில் நெய்தடவி, கலாகண்ட் கலவை சூடாக இருக்கும்போதே அதனை கொட்டி அழுத்திவிடவேண்டும். வேண்டுமானால் அதன்மேல் முந்திரி, பாதாம், என உங்களுக்கு பிடித்த பருப்பு வகைகளை சேர்த்துக்கொள்ளலாம். ஒரு இரண்டுமணிநேரம் கழித்து கலாகண்ட் கலவையை எடுத்துப்பார்த்தால் நன்கு ஆறி, கெட்டியாக இருக்கும். அருமையான கலாகண்ட் இனிப்பு தயார்.

## உடல் எடையை குறைக்கணுமா?... கொள்ளு துவையல் இருக்க கவலை எதற்கு?

தேவையான பொருட்கள்:
கொள்ளு - 1 கப்
கடலை பருப்பு - 1 தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் - 3
பெருங்காயத்தூள் - 1 தேக்கரண்டி
உளுந்து - 1 தேக்கரண்டி
தேங்காய்த் துண்டுகள் - 1 கப்
புளி - 10 கிராம்
கடுகு - 2 தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

செய்முறை:
வாணலியில் கொள்ளை சேர்த்து வாசம் வரும் வரை வறுத்துக் கொள்ளவும். அதே வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி கடலைப் பருப்பு, சிறிதளவு உளுந்து, காய்ந்த மிளகாயை போட்டு வறுக்கவும். வறுத்து வைத்திருக்கும் கலவையை மிக்ஸியில் போட்டு அத்துடன் தேங்காய்த் துண்டுகள், புளி, உப்பு, பெருங்காயத்தூள் சேர்த்து அரைக்கவும். கடைசியாக கடுகு, கறிவேப்பிலையை தாளித்துக் கொட்டி சூடான சாதத்தில் நல்லெண்ணெய் சேர்த்து சாப்பிட சுவை அமோகமாக இருக்கும். நீங்கள் உண்ணும் உணவில் அடிக்கடி கொள்ளு சேர்த்துக்கொள்வதால் உடலில் உள்ள கெட்ட கொழுப்புகள் குறையும். உடலில் உள்ள கெட்ட கொழுப்புகள் குறைவதால் எடை இழப்பு ஏற்படும். கொள்ளில் உள்ள நார்ச்சத்து மற்றும் புரதம் நீண்ட நேரம் பசி எடுக்காமல் நிறைவாக உணர வைக்கும். இதனால் நீங்கள் உட்கொள்ளும் உணவின் அளவும் குறையும். கொள்ளு துவையலாக மட்டுமில்லாமல், கொள்ளை வேகவைத்து சுண்டலாகவும், கொள்ளு தோசை, கொள்ளு சூப், கொள்ளு ரசம் முதலானவற்றை செய்து சாப்பிடலாம்.



## இறால் வறுவல்! வீட்டிலேயே செய்யலாம்!



செய்முறை
* முதலில் அடுப்பில் ஒரு வாணலியை வைத்து சூடாக்கவும்.

* வாணலி சூடானதும், வெண்ணெயைச் சேர்த்து உருக விடவும். வெண்ணெய் அதிகம் சேர்த்தால் சுவை இன்னும் சிறப்பாக இருக்கும்.
* வெண்ணெய் உருகியதும், பொடியாக நறுக்கிய பூண்டுத் துண்டுகளைச் சேர்க்கவும். வெண்ணெய் மற்றும் பூண்டின் கலவை சேர்ந்து சமைக்கும்போது, சுவை பல மடங்கு அதிகரிக்கும்.
* பூண்டு பொன்னிறமாக வந்தவுடன், முழு சின்ன வெங்காயம் மற்றும் நறுக்கிய குடைமிளகாயைச் சேர்த்து வதக்க வேண்டும். வெண்ணெயில் சமைக்கும்போது அடுப்பின் தீயைக் குறைத்துக்கொள்வது முக்கியம், இல்லையென்றால் வெண்ணெய் கருகிவிடும்.


* இப்போது சுத்தம் செய்து வைத்திருக்கும் இறால்களைச் சேர்க்கவும். இறால்களைச் சேர்த்த உடனேயே, தேவையான அளவு உப்பையும் சேர்த்து நன்கு கிளறவும். உப்பு சேர்த்த பின்னர்தான் இறால், சுவையை நன்கு உறிஞ்சும்.

* காரத்துக்கு மிளகாய் தூளைச் சேர்க்கவும். இந்த உணவு தயாராக 5 முதல் 10 நிமிடங்களே ஆகும். இறாலை நீண்ட நேரம் சமைத்தால் ரப்பர் போன்று இறுகிவிடும் என்பதால் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

* இப்போது சிறிதளவு தண்ணீர் சேர்த்து, அதனுடன் சோயா சாஸ் மற்றும் கூடுதல் காரத்துக்குத் தேவையான மிளகாய் தூளையும் சேர்க்கவும். வெண்ணெய் மற்றும் பூண்டுடன் சேர்ந்து சோயா சாஸ் ஒரு அற்புதமான குழம்புப் பக்குவத்தைக் கொடுக்கும்.
* இறுதியாக, பொடியாக நறுக்கிய வெங்காயத் தாளைத் தூவி அடுப்பை அணைக்கவும். இது உணவின் சுவையை மேலும் அதிகரிக்கும்.

இந்த உணவில் உள்ள நன்மைகள்
* இறாலில் புரதம் அதிக அளவில் உள்ளது. இது உடலின் திசுக்கள் மற்றும் தசைகளின் வளர்ச்சிக்கு அவசியமானது. மேலும், இதில் உள்ள ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் மூளை மற்றும் கண் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. இது இதய நோய்கள் வராமல் தடுக்கவும் உதவுகிறது.

* பூண்டு ஒரு இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட உணவு. இதில் உள்ள அல்லிசின் என்ற கலவை இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், கொழுப்பின் அளவைக் குறைக்கவும் உதவுகிறது. இது செரிமானத்திற்கும் துணைபுரிகிறது.
* வெங்காயத்தில் பல ஊட்டச்சத்துக்கள் உள்ளன. அதில் உள்ள குவெர்செடின் என்ற ஆன்டிஆக்ஸிடன்ட், உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும் ஆற்றல் கொண்டது. இது எலும்புகளின் ஆரோக்கியத்திற்கும் நல்லது.
இப்படி ஆரோக்கியமான பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் 'பட்டர் கார்லிக் பிரான்', சுவையுடன் சேர்த்து உங்கள் உடலுக்கும் பல நன்மைகளை வழங்குகிறது. அதோடு இன்றைய வேகமான உலகில், வெளியில் கிடைக்கும் ஆரோக்கியமற்ற உணவுகளை தேடிச் செல்வதற்குப் பதிலாக, உணவகங்களில் சாப்பிடும் அதே சுவையை வீட்டிலேயே அனுபவிக்க இந்த ரெசிபி சிறந்த தேர்வாக இருக்கும். இது குடும்பத்தினருக்கும், குறிப்பாக குழந்தைகளுக்கும் பிடித்தமான ஒரு உணவாக நிச்சயம் அமையும். இதை நீங்களும் உங்கள் வீட்டில் முயற்சி செய்து சுவைத்து மகிழுங்கள்.

## ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பிரம்மோற்சவ விழா கொடியேற்றம்




**திருவண்ணாமலை, ஏப்.21:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் சித்திரை மாத பிரம்மோற்சவம் விழாவை முன்னிட்டு காலை கணபதி வேள்வி, பரிவார பூஜையும், காப்பு கட்டுதல் நிகழ்வும், திருக்கொடியேற்றமும் வெகு சிறப்பாக பூஜைகளும், தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பிரம்மோற்சவ விழாவில் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.

தமிழ்நாடுஇ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீ ஸ்வாமி பல்லக்கு புறப்பாடு

ஸ்ரீ உடையவர் திருவவதார உத்ஸவம் நாள் - 8 ஸ்ரீ ஸ்வாமி பல்லக்கு புறப்பாடு



## அட்சய திருதியை நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு வழிபாடு



**சேலம், ஏப்.21:** சேலம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அட்சய திருதியை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், நெல்லிக்கனி மாலைகளால் அலங்கரித்து, நெல்லிக்கனி தோரணங்களால் அலங்காரங்கள், தங்க கவசத்துடன் சிறப்பு அலங்காரமும், கனகாதார ஸ்தோத்திரங்களை படித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பக்தி பாடல்களை பாடி, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## பேரணாம்பட்டு நகரில் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் கொண்டு வரப்படும்: குடியாத்தம் தொகுதி அதிமுக வேட்பாளர் பரிதா பிரச்சாரம்!



**வேலூர், ஏப். 21:** குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளராக களம் இறங்கியுள்ளவர் பரிதா இவர் பேரணாம்பட்டு நகரில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பேரணாம்பட்டு நகரில் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் கொண்டு வரப்படும். வீடில்லாத ஏழை, எளியவர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் பெற்று தரப்படும். இதுபோன்று அடிப்படை வசதிகள் அனைத்தும் நிறைவேற்றித் தரப்படும் என்று பேரணாம்பட்டு நகரில் வீதி வீதியாகச் சென்று அதிமுக வேட்பாளர் பரிதா தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். இந்த தேர்தல் பிரச்சாரம் மற்றும் தீவிர வாக்கு சேகரிப்பில் அதிமுக வேட்பாளர் பரிதாவுடன் பேரணாம்பட்டு நகர அதிமுக செயலாளர் சீனிவாசன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் சென்றனர். சில இடங்களில் பெண்கள் ஆரத்தி எடுத்து வேட்பாளரை வரவேற்றது குறிப்பிடத்தக்கது.

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் ஸர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!



**வேலூர்,ஏப்.21:** வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.


இந்த ஸ்ரீராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீசத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. திங்கட் கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

## அக்ஷயதிருதியை திருவீதி கருடசேவை



நேற்று அக்ஷயதிருதியை திருவீதிகருடசேவை புறப்பாடு தில்லைஸ்தானம் கும்பகோணம் அக்ஷய திருதியை 12 கருடசேவை

## ராமானுஜர் திருஅவதார உற்சவம்




ஸ்ரீபெரும்புதூர் ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் 8ம் திருநாள் காலை திவ்ய சேவை.

## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் பந்தக்கால் நடும் விழா




**திருவண்ணாமலை, ஏப்.21:** திருவண்ணாமலை உண்ணாமலை அம்மன் உடனுறை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் வசந்த உற்சவத்தை முன்னிட்டு சம்பந்த விநாயகர் எதிரில் பந்தக்கால் நடும் விழா நடைபெற்றது. விக்னேஷ்வர பூஜை, பஞ்சகவ்ய பூஜை, கலச பூஜை மகா தீபாரதனையுடன் பந்தக்கால் நடும் விழா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பந்தக்கால் நடும் விழாவில் கலந்துகொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பெருமாளும் ஸ்வாமி தேசிகனும்




அக்ஷய த்ரிதியை அன்று திருப்புல்லாணி ஆண்டவன் ஆச்ரம ஹயவதனப் பெருமாளும் ஸ்வாமி தேசிகனும்.



நேற்று மாலை உதயவர் யானை வாகனம் மெல்கோடை

## திவ்ய சேவை



வனமாமலை ஸ்ரீதெய்வநாயக பெருமாள் சன்னதி சித்திரை பிரம்மோற்சவம் திருவஜரோஹணம் திவ்ய சேவை.




## ராசிபுரத்தில் ரூ.3 கோடி மதிப்பில் மினி ஸ்டேடியம் இளைஞர்களின் விளையாட்டு கனவுக்கு புதிய தளம்

**இராசிபுரம், ஏப். 21:** ராசிபுரம் நகர மையப்பகுதியில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மினி ஸ்டேடியம் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

தமிழக முதலவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசிலும், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலிலும், ராசிபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் அமைச்சருமான டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களின் முயற்சியில் இந்த மினி ஸ்டேடியம் அமைக்கப்படுகிறது.


ராசிபுரம் அண்ணா சாலை அரசினர் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள விளையாட்டு திடலில் அமைக்கப்படும் இந்த மினி ஸ்டேடியம், கால்பந்து மற்றும் கிரிக்கெட் விளையாடுவதற்கான பெரிய அளவிலான டர்ஃப் மைதானம், சிந்தடிக் பேஸ்கெட் பால் கிரவுண்ட், ஷட்டில் கோர்ட், ஹைடெக் ஜிம், மின்விளக்குகள் மற்றும் கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் உருவாக்கப்படுகிறது.

இந்த திட்டம் மூலம் திறமை இருந்தும் சரியான வசதிகள் இல்லாததால் முன்னேற முடியாத சாமானிய மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு புதிய வாய்ப்பு

உருவாகியுள்ளது. இம்மினி ஸ்டேடியம், அவர்களை விளையாட்டுத்துறையில் அடுத்த கட்டத்துக்கு முன்னேறச் செய்யும் முக்கிய தளமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய சிறப்பான திட்டத்தை ராசிபுரம் தொகுதி இளைஞர்களுக்காக செயல்படுத்திய அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களுக்கு இளைஞர்கள் நன்றியும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.











திருமலை ஸ்வாமி ராமானுஜர் திருஅவதார உற்சவம் 8ம் திருநாள் காலை புறப்பாடு.

# சுற்றுலா: மலை சாகசங்கள்: இயற்கையின் மடியில் சிலிர்ப்பான அனுபவங்கள்!







மலைப்பகுதிகளில் மலையேற்றம் (ஹைகிங்), மலை ஜீப் சஃபாரிகள், வனவிலங்கு சஃபாரிகள், கேம்பிங், பைக்கிங் மற்றும் ரிவர் ராஃப்டிங் போன்ற பல சாகச விளையாட்டுகள் உள்ளன. இவை நமக்கு உற்சாகமான அனுபவத்தையும், இயற்கையின் அழகை ரசிக்கும் வாய்ப்பையும் தருகின்றன.

மலைப்பகுதிகளில் செய்யக்கூடிய சாகசங்கள்:

மலையேற்றம் :

இது மலைகளின் அழகிய பாதைகளில் செல்லும் நடைப்பயணம் மேற்கொள்வதாகும். மன அழுத்தத்தை குறைத்து உடலையும், மனதையும் புத்துணர்ச்சியூட்டும். 'ஹைகிங்' என்பது குறைவான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு மலை ஏறி இறங்கிவிடும் வகையாகும். 'ட்ரெக்கிங்' என்பது முறையான பாதை இல்லாத மலையில் சற்று பெரிய பையில், மலையில் தங்குவதற்கான டென்ட், உணவுகள் போன்ற சில அத்தியாவசியமான பொருட்களை எடுத்துச்சென்று இரண்டு முதல் சில நாட்கள் வரை மலையேறுவது.

மலை ஜீப் சஃபாரி :

மலைப்பகுதிகளில் கரடு முரடான சாலைகளில் ஜீப் சஃபாரி செய்வது ஒரு விறுவிறுப்பான த்ரிலிங்கான அனுபவத்தைத் தரும். அடர்ந்த காடுகள், தேயிலைத் தோட்டங்கள், பனி மூடிய சிகரங்கள், ஆழமான பள்ளத்தாக்குகள் மற்றும் வனவிலங்குகளைக் கண்டு ரசிக்கக் கூடிய ஒரு சாகச பயணமாகும். இது இமயமலை, மேற்கு தொடர்ச்சி மலைகள் போன்ற பகுதிகளில் மிகவும் பிரபலமானது. உயரமான மலைப்பாதைகள் வழியாக ஜீப்பில் பயணம் செய்வது ஒரு சிலிர்ப்பான அனுபவமாக இருக்கும்.

வனவிலங்கு சஃபாரி:

காடுகளில் உள்ள வனவிலங்குகளையும், பறவைகளையும் காணும் வாய்ப்பை இந்த வனவிலங்கு சஃபாரி வழங்குகிறது. காட்டு விலங்குகளை அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் காணவேண்டும்என்றஎண்ணத்தில் இருப்பவர்களுக்கு தேசிய பூங்காக்கள் அல்லது வனவிலங்கு சரணாலயங்கள் போன்ற இடங்களில் விலங்குகளைக் காண்பது ஒரு சிலிர்ப்பான அனுபவங்களைத்தரும்.

கேம்பிங்:

மலைப்பகுதியில் கூடாரம் அமைத்து தங்குவது இயற்கையோடு ஒன்றிணைந்து நேரத்தை செலவிட சிறந்த வழியாகும். பாதுகாப்பான மற்றும் இயற்கையை ரசிக்க கூடிய இடத்தை தேர்ந்தெடுப்பது முக்கியம். கேம்பிங் என்பது இயற்கையை ரசிக்கவும், சாகச நடவடிக்கைகளில் ஈடுபடவும் ஒரு சிறந்த வழியாகும். இதற்கு தேவையான உபகரணங்கள், தங்குமிடங்கள், பாதுகாப்பான் இடங்கள் பற்றி திட்டமிடுவது முக்கியம். கேம்பிங்கின் போது சூரிய உதயத்தை காண்பது, இயற்கை ரசிப்பது, மலையேற்றம் செய்வது போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

மலை பைக்கிங்:

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மலை பைக்கர்கள், கரடு முரடான பாதைகளில் பயணிக்க வசதியாக சஸ்பென்ஷன், அகலமான டயர்கள் போன்ற அம்சங்களை கொண்டிருக்கும்.

கரடுமுரடானநிலப்பரப்புகளில் சிறப்பு பைக்கை பயன்படுத்தி சாகசமாக ஓட்டுவது சிறந்த உடற்பயிற்சியாகும். மலைப்பகுதிகளில் பைக்கிங் செய்வது இயற்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், இயற்கையை அனுபவிக்கவும் ஒரு சிறந்த வழியாகும்.

மன அமைதிக்கும், உற்சாகத்திற்கும் வழிவகுக்கும் மலை சாகசங்கள் சிறந்த அனுபவத்தைத் தரும். ஆனால் மலைப்பகுதிகளில் சாகசங்கள் செய்யும்பொழுது பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. தேவையான பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி, அனுபவம்வாய்ந்தவழிகாட்டியுடன் செல்வது நல்லது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## இன்ஜினியரிங் நிறுவனத்தில் பணி

மத்திய அரசின் கீழ் செயல்படும் மெட்டலர்ஜிகல் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்தில் அறிவிப்பு வெளியாகி உள்ளது.

அக்கவுன்டன்ட் 14, அசிஸ்டென்ட் பிரிவில் எச்.ஆர்., 2, அட்மின் 2, செக்ரட்ரியல் சர்வீஸ் 6 என மொத்தம் 24 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: பி.பி.ஏ., / ஐ.சி.ஏ.ஐ., / ஐ.சி.எம்.ஏ.ஐ.,

வயது: 18-28 (6.5.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 875. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 625. கடைசிநாள்: 6.5.2026

விவரங்களுக்கு: careers.meconlimited.co.in

## ரயில்வே சுற்றுலா நிறுவனத்தில் கண்காணிப்பாளர் வாய்ப்பு



ரயில்வே உணவு, சுற்றுலா நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'ஹாஸ்பிடாலிட்டி மானிடர்ஸ் (விருந்தோம்பல் கண்காணிப்பாளர்)' பிரிவில் மொத்தம் 84 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.எஸ்சி., / பி.பி.ஏ., / எம்.பி.ஏ.,

வயது: 18-27 (1.4.2026ன் படி) ஒப்பந்த காலம்: மூன்றாண்டு

ஊதியம்: மாதம் ரூ. 30 ஆயிரம்

பணியிடம்: தமிழகம், கேரளா, கர்நாடகா.

தேர்ச்சி முறை: பூர்த்தி செய்த விண்ணப்பம், அசல் சான்றிதழ்களுடன் 'வாக் இன்' இன்டர்வியூவில் பங்கேற்க வேண்டும். இடம்: 6A, The Rain Tree Place, No.9, Mc Nichols Road, Chetpet, Chennai - 600 031 நாள்: 2026 ஏப். 25, 27, 28

நேரம்: காலை 10:30 - மாலை 5:30 மணி. விவரங்களுக்கு: irctc.com

# தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும்: கேஜ்ரிவால் நம்பிக்கை



சென்னை, ஏப். 21:

கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் தமிழகம் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே, தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும் என்று டெல்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் நம்பிக்கை தெரிவித்தார்.

திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்வதற்காக டெல்லி முன்னாள் முதல்வரும் ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான அர்விந்த் கேஜ்ரிவால் நேற்று இரவு சென்னை வந்தார். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: எனது நண்பர் மு.க.ஸ்டாலின் நடத்திய 5 ஆண்டு கால ஆட்சியில், தமிழகத்துக்கு நல்ல வளர்ச்சி திட்டத்தை ஏற்படுத்தி உள்ளார். அதனால் தமிழகம் முன்னேறிய மாநிலமாக ஆகிக் கொண்டு இருக்கிறது. இந்தத் தேர்தலில் ஸ்டாலின் அதிக மெஜாரிட்டியுடன் வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சி அமைப்பார். மாநிலங்களில் உள்ள ஆட்சியாளர்களை, மோடி அரசு தனது கைக்குள்வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறது. ஆனால், ஸ்டாலின் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால், ஸ்டாலினை பாஜக எதிர்க்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே இரு மார்க்கத்திலும் நீந்தி கடந்த 4 சிறுவர்கள்

ராமேசுவரம், ஏப்.21:



தமிழகத்தையும், இலங்கையையும் பாக் நீரிணை பிரிக்கிறது. ராமேசுவரம் தீவும், அதைத் தொடர்ந்துள்ள 13 மணல் திடைகளும், பாக் நீரிணையை மன்னார் வளைகுடாவில் இருந்து பிரிக்கின்றன. தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதே சமயம் பாறைகளும், ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதியும் இதுவே ஆகும்.

பாக் நீரிணைப் பகுதியை தனியாகவோ, குழுவாக ரிலே மற்றும் மாரத்தான் முறையிலும் பலர் நீந்திக் கடந்துள்ளனர். இந்நிலையில், சென்னையை சேர்ந்த சிறுவர்களான ஸ்ரீ அஷ்வத் (11), லவ் (09), குஷ் 09), தன்வேஷ் (10) ஆகிய நான்கு பேரும் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டோராக இருந்தாலும் யாதவி விளையாட்டு அகாடமி மற்றும் இந்தியன் ஆட்டிசம் சென்டரில் நீச்சல் பயிற்சி பெற்று பல்வேறு நீச்சல் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

ஆட்டிசம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஏப்.18-ம் தேதி தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் பிற்பகல் 3.25 மணியளவில் 4 சிறுவர்களும் ரிலே முறையில் நீந்தத் தொடங்கி 17 கடல் மைல் தொலைவை 9 மணி 5 நிமிடங்கள் நீந்தி, இரவு 12.30 மணிக்கு தலைமன்னார் சென்றனர்.

உடனே, அங்கிருந்து தனுஷ்கோடி நோக்கி நீந்தத் தொடங்கி, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.27 மணிக்கு தனுஷ் கோடி அரிச்சல்முனையை வந்தடைந்தனர். அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தச் சாதனைக்காக சிறுவர்கள் 4 பேரும் மொத்தம் 34 கடல் மைல் தொலைவை நீந்திக் கடக்க 18 மணி 2 நிமிடங்கள் எடுத்துக் கொண்டனர். ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டோரும் கடலில் அதிக தூரமும், அதிக நேரமும் நீந்த முடியும் என்ற சாதனையைப் படைத்துள்ளனர்.

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து: ஐகோர்ட் கிளை தாமாக முன்வந்து விசாரிக்க முறையீடு

மதுரை, ஏப்.21:



விருதுநகர் பட்டாசு ஆலை வெடிவிபத்து தொடர்பாக தாமாக முன்வந்து விசாரிக்க உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் முறையீடு செய்யப்பட்டது.

விருதுநகர் கட்டனார்பட்டி பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், பட்டாசு ஆலை விபத்து தொடர்பான வழக்கை நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க கோரி மதுரை அமர்வில் வழக்கறிஞர் கருணாநிதி முறையீடு செய்தார்.

நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இந்த முறையீடு முன்வைக்கப்பட்டது. தேர்தல் காலம் என்பதால் யாரும் அப்பகுதிக்கு சென்று பார்க்கவில்லை. உரிய இழப்பீடும் வழங்கப்படவில்லை" எனத் வழக்கறிஞர் கூறினார்.

அதற்கு நீதிபதிகள், "ஏற்கனவே இது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் அரசுக்கு பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. சரியான வழிகாட்டுதல்கள் தேவை. ஏன் இழப்பீடு இன்னும் வழங்கப்படவில்லை ?" என கேள்வி எழுப்பினர்.

அப்போது அரசுத் தரப்பில், "தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளது. முதன்மைச் செயலர் உள்ளிட்ட அலுவலர்கள் மாற்றப்பட்டுள்ளனர். விளக்கம் பெற்று தெரிவிக்க கால அவகாசம் வேண்டும்" என தெரிவித்தார்.

அதனை ஏற்ற நீதிபதிகள், இழப்பீடு வழங்குவது தொடர்பாக அரசிடம் உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஏப்ரல் 21-ம் தேதிக்கு (இன்று) ஒத்திவைத்தனர்.

# 3 சிறப்பு ரயில்கள் அறிவிப்பு

சென்னை, ஏப்.21:

கோடைக்காலத்தை முன்னிட்டு, சொந்த ஊருக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக, சென்னை - கரக்பூர் சிறப்பு ரயில் உட்பட 3 சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்விவரம்: சென்னை சென்ட்ரலில் இருந்து இன்று (ஏப்.20) காலை 10 மணிக்கு சிறப்பு ரயில் (06003) புறப்பட்டு, மறுநாள் மாலை 4 மணிக்கு மேற்குவங்கம் மாநிலம் கரக்பூரை சென்றடையும். மறுமார்க்கமாக, கரக்பூரில் இருந்து ஏப்.21-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) இரவு 7 மணிக்கு சிறப்பு ரயில் (06004) புறப்பட்டு, வியாழக்கிழமை அதிகாலை 3 மணிக்கு ஈரோட்டை சென்றடையும்.

சென்னை சென்ட்ரலில் இருந்து ஏப்.22-ம் தேதி காலை 11 மணிக்கு சிறப்பு ரயில் (06005) புறப்பட்டு, மறுநாள் மாலை 6.30 மணிக்கு மேற்குவங்கம் சந்திரகாச்சியை அடையும். மறுமார்க்கமாக, சந்திரகாச்சியில் இருந்து ஏப் .23-ம் தேதி (வியாழக்கிழமை) இரவு 9.30 மணிக்கு சிறப்பு ரயில் (06006) புறப்பட்டு, சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்னை சென்ட்ரலை வந்தடையும்.

சென்னை எழும்பூரில் இருந்து ஏப்.24-ம் தேதி (வெள்ளிக்கிழமை) இரவு 11.45 மணிக்கு சிறப்பு ரயில் (06009) புறப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கரக்பூரை சென்றடையும். மறுமார்க்கமாக, கரக்பூரில் இருந்து ஏப் .26-ம் தேதி நண்பகல் 12 மணிக்கு சிறப்பு ரயில் (06010) புறப்பட்டு, மறுநாள் இரவு 7.30 மணிக்கு சென்னை கடற்கரையை வந்தடையும்.

சென்னை சென்ட்ரல் - கரக்பூர் - ஈரோடு சிறப்பு ரயில்களுக்கான (06003-06004) டிக்கெட் முன்பதிவு தொடங்கிவிட்டது. மற்ற ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு திங்கள்கிழமை (ஏப்.20) தேதி காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நகைக் கடைகளில் குவிந்த மக்கள்

சென்னை, ஏப்.21:

அட்சய திருதியை ஒட்டி, நகைக்கடைகளில் பொதுமக்கள் குவிந்தனர். பெரும்பாலோர் எடை குறைவான தங்க ஆபரணங்கள், நாணயங்களை வாங்க ஆர்வம் காட்டினர்.

அட்சய திருதியை நாளில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் வாங்குவது பொதுமக்களின் வழக்கமாக உள்ளது. இந்த ஆண்டுக்கான அட்சய திருதியை நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் நகைக் கடைகளில் பொதுமக்கள் குவிந்தனர். சென்னையில் தி. நகர், புரசைவாக்கம், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கடைகளில் காலை முதலே மக்கள் ஆர்வமாக நகைகளை வாங்கினர். இது குறித்து, நகை வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: அட்சய திருதியை கொண்டாட்டத்தையொட்டி, தமிழகம் முழுவதும் 35 ஆயிரம் நகைக் கடைகள் காலை 8 மணிக்கே திறக்கப்பட்டன. தியாகராய நகரில் உள்ள நகைக் கடைகளில் வழக்கமான மக்கள் கூட்டம் காணப்பட்டது. அதேநேரத்தில், எடை குறைந்த ஆபரணங்கள், நாணயங்களை அதிக அளவில் வாங்கினர். இருப்பினும், கடந்த ஆண்டை விட மக்கள் வருகை சற்று குறைவாக இருந்தது. இதற்கு காரணம். தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தான். தேர்தல் விதிமுறைகள் காரணமாக, பணத்தை எடுத்து வரமுடியாது என்ற பயம் இருக்கிறது. இரண்டு நாள் அட்சய திருதியை இருப்பதால், திங்கள்கிழமையும் நகைகளை வாங்க வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# நீதிபதிகளின் அர்ப்பணிப்பும் வழக்கறிஞர் திறனும் இணைந்தால் மக்களுக்கு சரியான நீதியை வழங்க முடியும் - உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உறுதி

**மதுரை, ஏப்.21:**

நீதிபதிகளின் அர்ப்பணிப்பும், வழக்கறிஞர்களின் தொழில் திறனும் இணைந்தால் சரியான நீதி வழங்க முடியும் என உச்ச நீதிமன்ற லைமை நீதிபதி சூர்யகாந்த் பேசினார்.

மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ரூ.166 கோடியில் 3 மாடி கூடுதல் நீதிமன்ற கட்டிடம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் விருந்தினர் மாளிகையின் திறப்பு விழா மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது.




சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.எம்.தர்மாதிகாரி தலைமை வகித்தார். நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் வரவேற்றார். கட்டிடங்களை திறந்து வைத்து தலைமை நீதிபதி சூர்யகாந்த் பேசியதாவது:

உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள், வழக்கறிஞர்கள் அனைவரும் தொழில் நெறி முறைகளைக் கடைப்பிடித்துச் சிறப்பாகப் பணிபுரிகின்றனர்.

சமீப காலங்களில் சென்னை உயர் நீதிமன்றம், குறிப்பாக மதுரை அமர்வு குற்றவியல், உரிமையியல் மற்றும் அரசியலமைப்புச் சட்ட வழக்குகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கி முன்னணியில் உள்ளது.

நீதிபதிகளின் அர்ப்பணிப்பும், வழக்கறிஞர்களின் தொழில் திறனும் இணைந்தால் சரியான நீதி வழங்க முடியும். இவ்வாறு அவர் பேசினார். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜெ.கே.மகேஸ்வரி, எம்.எம்.சுந்தரேஷ், ஆர்.மகாதேவன் உள்ளிட்டோர் உரையாற்றினர். உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், தனபாலன், மாவட்ட முதன்மை நீதிபதி சிவகடாட்சம், தலைமை குற்றவியல்நீதித்துறை நடுவர் செல் பாண்டி, வழக்கறிஞர்கள் சங்கத் நிர்வாகிகள் பங்கேற்றனர். நீதிபதி வேல்முருகன் நன்றி கூறினார்.

## விளையாட்டு செய்திகள்

### “மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறார் சிஎஸ்கே கேப்டன்” - ரவிச்சந்திரன் அஸ்வின் கருத்து

**புதுடெல்லி, ஏப்.21:**

புதுடெல்லி: இந்த ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணியின் கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறார் என்று தோன்றுகிறது என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்தார்.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐபிஎல் லீக் ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 10 ரன்கள் வித்தியாசத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணியை வீழ்த்தியது.

இந்தப் போட்டி குறித்து ஜியோஹாட் ஸ்டார் சேனலுக்கு அளித்த பேட்டியில் ரவிச்சந்திரன் அஸ்வின் கூறியதாவது: சிஎஸ்கே வீரர் ஆயுஷ் மாத்ரே பேட்டிங் செய்ய வரும் போதே, முழங்காலில் கட்டு போட்டபடி வந்தார். அது தசைப்பிடிப்பாக இருக்க வாய்ப்பில்லை.

ஆடுகளத்தில் ஆயுஷ் மாத்ரே நொண்டியபடியே விளையாடினார். உடலியக்க நிபுணர்கள் களத்துக்கு வந்து பரிசோதனை செய்து பார்த்தனர். அதன் பின்னரும், அவரை விளையாட வைத்து, ரன் ஓடவைத்தனர். இது பெரிய காயமாக மாறினால், அவராலும் அடுத்த 6 வாரங்களுக்கு விளையாட முடியாது. சிஎஸ்கே கேப்டன் ருதுராஜ் மிகுந்த நெருக்கடியில் இருப்பது போல தோன்றுகிறது. இந்தப் போட்டியின்போது அவர் சிறப்பாக விளையாட வாய்ப்பு கிடைத்தது. ஆனால், அவசர கதியில் புல் ஷாட் விளையாடி அவுட்டாகிவிட்டார். ஒருவேளை, களத்தில் ருதுராஜ் நீண்ட நேரம் நின்று விளையாடி இருந்தால், அது ஆட்டத்தின் போக்கை மாற்றியிருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### சர்ச்சையில் சிக்கிய விம்பிள்டன் சாம்பியன்... 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட வாய்ப்பு?

**பிராக், ஏப்.21:**

டென்னிஸ் உலகின் முன்னணி வீராங்கனையும், 2023-ம் ஆண்டு விம்பிள்டன் பட்டத்தை வென்றவருமான செக்குடியரசு நாட்டைச் சேர்ந்த மார்கெட்டா வோன்ட்ரோசோவா, ஊக்கமருந்து பரிசோதனை விவகாரத்தில் பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

போட்டிகள் இல்லாத சாதாரண காலத்தில், வீரர்-வீராங்கனைகளிடம் திடீர் ஊக்கமருந்து சோதனை நடத்தப்படுவது வழக்கம். அந்த வகையில், வோன்ட்ரோசோவாவின் இல்லத்திற்கு ரத்தம் அல்லது சிறுநீர் மாதிரிகளை சேகரிக்க அதிகாரிகள் சென்றுள்ளனர். ஆனால், அவர்களிடம் தனது மாதிரிகளைக் கொடுக்க வோன்ட்ரோசோவா மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, சர்வதேச டென்னிஸ் சங்கத்தின் (ITF) நேர்மை கமிட்டி, அவர் மீது விதிமுறை மீறல் குற்றச்சாட்டைப் பதிவு செய்து விசாரணையைத் தொடங்கியுள்ளது. ஊக்கமருந்து தடுப்பு விதிகளை மீறியது அல்லது சோதனைக்கு ஒத்துழைக்க மறுத்தது விசாரணையில் உறுதி செய்யப்பட்டால், வோன்ட்ரோசோவாவுக்கு சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் விளையாட 4 ஆண்டுகள் வரை தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. இது அவரது டென்னிஸ் வாழ்க்கையில் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

# சாதி, மதமற்றவர்; இயக்குநர் பார்த்திபனுக்கு சான்றிதழ் வழங்க ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, ஏப்.21:**

நடிகர் பார்த்திபன், சென்னை சோழிங்கநல்லூர் வட்டாட்சியரிடம் கடந்த மார்ச் 20, 2026 அன்று சாதி இல்லை, மதம் இல்லை சான்றிதழ் கோரி விண்ணப்பித்திருந்தார். இந்த நிலையில், தனது விண்ணப்பத்தின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வட்டாட்சியருக்கு உத்தரவிடக்கோரி சென்னை ஐகோர்ட்டில் ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார்.





அந்த மனுவில், தான் 1958-ல் பிறந்ததாகவும், பெற்றோர் பிறப்பைப் பதிவு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். பழைய எஸ்.எஸ்.எல்.சி முறையில் 11-ம்வகுப்புவரை படித்துவிட்டு, பள்ளிச் சான்றிதழ்களைப் பெறாமலேயே படிப்பை நிறுத்தியதால், தன்னிடம் சாதி அல்லது மதத்தைக் குறிக்கும் எந்தவொரு ஆவணமும் தற்போது கைவசம் இல்லை என்றும் கூறியிருந்தார்.


இந்த மனு நீதிபதி எம். தண்டபாணி முன்னிலையில் இன்று விசாரணைக்கு வந்தது. விசாரணை முடிவில், பார்த்திபனுக்கு சாதி, மதம் அற்றவர் என சான்றிதழ் வழங்க ஐகோர்ட் உத்தரவிட்டது. ஒருவாரத்தில் சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் கோர்ட் தனது உத்தரவில் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் “உஸ்தாத் பகத் சிங்” என்ற தெலுங்கு பட விளம்பரத்தின் போது, பார்த்திபன் தன்னை “நாயுடு பையன்” என்று அறிமுகப்படுத்திக் கொண்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது நினைவிருக்கலாம்.

# ஆந்திராவில் உள்ள சுரங்கத்தில் ஆண்டுக்கு 1,000 கிலோ தங்கம் உற்பத்தி செய்ய இலக்கு

**கர்னூல், ஏப்.21:**

ஆந்திராவின் கர்னூல் மாவட்டம் ஜோனாகிரி தங்கச் சுரங்க திட்டம் அடுத்த மாதம் செயல்பாட்டுக்கு வருகிறது. நாட்டின் முதல் மிகப் பெரிய தனியார் தங்கச் சுரங்கம் திட்டத்தில் ஆண்டுக்கு 1,000 கிலோ தங்கம் உற்பத்தி செய்யப்பட உள்ளது.



இந்தியா தற்போது ஆண்டுக்கு 800 டன்னுக்கு மேல் தங்கத்தை இறக்குமதி செய்து வருகிறது.

கர்நாடகாவின் கோலார் தங்கச் சுரங்கம் கடந்த 2000-ம் ஆண்டு மூடப்பட்ட நிலையில், தற்போது கர்நாடகாவின் ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள ஹட்டி தங்கச் சுரங்கத்தில் மட்டும் ஆண்டுக்கு 1.5 டன் தங்கம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில் ஆந்திராவின் கர்னூல் மாவட்டத்தில் ஜோனாகிரி, எர்ராகுடி மற்றும் பகிதிராயி கிராமங்களில் 598 ஹெக்டேர் பரப்பில் புதிய தங்க வயல் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு 13.1 டன் முதல் 42.5 டன் அளவுக்கு தங்கம் எடுக்கலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இங்கு ஜியோமிசோர் சர்வீஸஸ் இந்தியா என்ற தனியார் நிறுவனம் ரூ.400 கோடிக்கு மேல் முதலீடு செய்து தங்கச் சுரங்கம் அமைத்து வருகிறது.

இந்த தங்கச் சுரங்கத்தில் அடுத்த மாதம் உற்பத்தி தொடங்கவுள்ளது. இதை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இங்கு ஆண்டுக்கு 1000 கிலோ தங்கம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் இந்தியாவின் தங்கம் இறக்குமதி குறையும்.

ஜோனாகிரி தங்கச் சுரங்கத் திட்டம் வெற்றி பெற்றால், இன்னும் பல முதலீட்டாளர்கள் தங்கச் சுரங்க திட்டத்தில் முதலீடு செய்வர், அடுத்த 10 ஆண்டுகளில் 50 முதல் 100 டன் தங்கம் உற்பத்தி செய்ய இந்தியா திட்டமிட வேண்டும் என ஜியோமிசோர் நிறுவனத்தின் இயக்குனரும், டெக்கான் கோல்ட் நிர்வாக இயக்குனருமான டாக்டர் ஹனுமன் பிரசாத் கூறியுள்ளார்.

# கோவில்பட்டியில் பறக்கும் படை சோதனை: சாக்கு மூட்டையில் ரூ.35.72 லட்சம் சிக்கியது

**தூத்துக்குடி, ஏப்.21:**

தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் போலீசார் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, இன்று கோவில்பட்டி-கடலையூர் சாலையில் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.



அப்போது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் சாக்கு மூட்டையுடன் வந்த வாலிபர் ஒருவரை போலீசார் மறித்து சோதனை செய்தனர். சோதனையில் அவர் வைத்திருந்த சாக்கு மூட்டைக்குள் கட்டுக்கட்டாகப் பணம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து உடனே தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தேர்தல் பறக்கும் படை அதிகாரி முத்துக்குமார் தலைமையிலான குழுவினர், பணத்தைக் கொண்டு வந்த கோவில்பட்டி அத்தை கொண்டான் இந்திரா நகரை சேர்ந்த கந்தசாமி மகன் உத்தரகுமாரிடம் (வயது 32) விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவரிடம் இருந்த ரூ.35 லட்சத்து 72 ஆயிரம் பணத்திற்கு உரிய ஆவணங்கள் ஏதும் இல்லை என்பது தெரியவந்தது.

இதனையடுத்து அந்த பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள், கூடுதல் விசாரணைக்காக வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

## க்ரைம் கார்னர்


### குஜராத்: வாகனத்தை விடுவிக்க ரூ.55 லட்சம் லஞ்சம் கேட்ட 2 ஜிஎஸ்டி அதிகாரிகள் கைது

**நடியாத், ஏப்.21:**

குஜராத்தில் நடியாத் பகுதியில் ஜிஎஸ்டி அதிகாரிகள் ஒரு சரக்கு வாகனத்தை மறித்து ஜிஎஸ்டி வரி ரசீதை ஆய்வு செய்துள்ளனர். அதில் குறைகள் இருப்பதாக கூறி சரக்கு வாகனத்தை ஜிஎஸ்டி அலுவலகத்துக்கு கொண்டு சென்றனர். அந்த சரக்கு வாகனத்தின் உரிமையாளர் ஜிஎஸ்டி கண்காணிப்பாளர் அமர்நாத் கோவர்தன் ராம் சரோஜ், ஆய்வாளர் சுபோத் சுபாஷ் சவுகான் ஆகியோரை தொடர்பு கொண்டுள்ளார். அவர்கள் வாகனத்தை விடுவிக்க ரூ.55 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளார். லஞ்சம் தர விரும்பாத சரக்கு வாகனத்தின் உரிமையாளர், மத்திய லஞ்ச ஒழிப்புத்துறை (ஏசிபி) அதிகாரிகளை 1064 என்ற கட்டணம் இல்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு ஜிஎஸ்டி அதிகாரிகள் லஞ்சம் கேட்பதாக புகார் அளித்துள்ளார். இதையடுத்து காந்திநகர் ஏசிபி அதிகாரிகள் ஜிஎஸ்டி அதிகாரிகளைக் கையும் களவுமாக பிடிக்க வலை விரித்தனர். வாகன உரிமையாளரிடம், ஜிஎஸ்டி அதிகாரிகள் கேட்டபடி ரூ.10 லட்சத்தை முன்பணமாக வழங்கும்படி கூறியுள்ளனர். அதன்படி ஜிஎஸ்டி அதிகாரிகளை தொடர்பு கொண்ட சரக்கு வாகன உரிமையாளர் ரூ.10 லட்சத்தை எங்கு கொண்டு வந்து தர வேண்டும் என கேட்டுள்ளார். அவர்கள் அலுவலகத்துக்கு கொண்டு வரும்படி கூறியுள்ளனர். இதையடுத்து வாகன உரிமையாளர் ஜிஎஸ்டி பவன் சென்று கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வாளரை சந்தித்து முன் பணம் ரூ.10 லட்சத்தை வழங்கினார். அவர் வெளியே வந்ததும், அங்கு நுழைந்த ஏசிபி அதிகாரிகள் ஜிஎஸ்டி கண்காணிப்பாளர் அமர்நாத் கோவர்தன் ராம் சரோஜ், ஆய்வாளர் சுபோத் சுபாஷ் சவுகான் ஆகியோரை கைது செய்து ரூ.10 லட்சம் பணத்தை பறிமுதல் செய்தனர்.

இச்சம்பவம் குஜராத் நடியாத் நகரில் உள்ள ஜிஎஸ்டி பவன் அலுவலகத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கைது செய்யப்பட்ட ஜிஎஸ்டி அதிகாரிகள் இதற்கு முன் முறைகேடுகளில் ஈடுபட்டனரா என்பது குறித்து ஏசிபி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### குன்றத்தூர் அருகே சிறுமியிடம் பாலியல் அத்துமீறல்: வீட்டு உரிமையாளர் போக்சோவில் கைது



**குன்றத்தூர், ஏப்.21:**

குன்றத்தூர் அடுத்த தரப்பாக்கம் பகுதியில் கணவன், மனைவி தங்களது 5 வயது மகளுடன் வாடகை வீட்டில் வசித்து வந்தனர். இந்நிலையில், கணவன் வேலைக்குச் சென்றிருந்தபோது, வீட்டில் இருந்த குழந்தை காணாமல் போனதால் பதற்றமடைந்த தாய், அக்கம் பக்கத்தில் தேடிப் பார்த்தார். எங்கு தேடியும் குழந்தை கிடைக்காத நிலையில், வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்று பார்த்த போது, அங்கிருந்த கழிவறையில் இருந்து குழந்தை அழுதபடி வெளியே வந்தது. அப்போது வீட்டின் உரிமையாளர் செல்வம் (48) அங்கிருந்த சுவருக்கிடையே மறைந்தபடி நின்றிருந்தார்.

இது குறித்து குழந்தையிடம், ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது என்று தாய் விசாரித்த போது, வீட்டின் உரிமையாளர் செல்வம், சிறுமியை மொட்டை மாடி கழிவறைக்கு அழைத்துச் சென்று பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாய், கத்தி கூச்சலிட்ட சத்தம் கேட்டு வந்த அக்கம் பக்கத்தினர், வீட்டின் உரிமையாளர் செல்வத்துக்கு தர்ம அடி கொடுத்தனர். பின்னர், இதுகுறித்து பல்லாவரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த போலீஸார், தாக்குதலில் இருந்து செல்வத்தை மீட்டு, சிகிச்சைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விசாரணையில், வீட்டின் உரிமையாளர் செல்வம், சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டதால், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, அவரை சிறையில் அடைத்தனர்.

## வணிகச் செய்திகள்

### சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை போக்க எல்பிஜி-யில் 20% டிஎம்இ காஸ் கலக்க திட்டம்

பெட்ரோலில் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலப்பது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதி கணிசமாக குறைந்து, பெட்ரோல் தட்டுப்பாடு பிரச்சினைக்கும் எளிய முறையில் தீர்வு காணப்பட்டு உள்ளது.

இதேபோல எல்பிஜி சமையல் காஸில் 20 சதவீதம் டிஎம்இ காஸை கலக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. இதன் மூலம் எல்பிஜி இறக்குமதியை கணிசமாக குறைக்க முடியும் என்று பெட்ரோலியத் துறை தெரிவித்துள்ளது. டைமெத்தைல் ஈதர் (டிஎம்இ) என்பது ஒரு செயற்கை எரிவாயு. இயற்கை எரிவாயு, நிலக்கரி வாயுவாக்கம் ஆகியவற்றின் மூலம் டிஎம்இ காஸ் உற்பத்தி செய்யப்படுகிறது.

இது தூய்மையான எரிவாயு ஆகும். எல்பிஜி உடன் ஒப்பிடும்போது டிஎம்இ காஸ் எரியும்போது புகை, நைட்ரஜன் ஆக்ஸைடு, கந்தக ஆக்ஸைடு ஆகியவை மிகக் குறைவாக வெளியேறும். மும்பையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நியூ ஏரா கிளீன்டெக் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் நிலக்கரி வாயுவாக்கம் மூலம் டிஎம்இ காஸை உற்பத்தி செய்து வருகிறது.

இதேபோல மகாராஷ்டிராவின் புனேவை சேர்ந்த மத்திய அரசின் சிஎஸ்ஐஆர்- என்சிஎல் நிறுவனம், மெத்தனாலில் இருந்து டிஎம்இ காஸை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து உள்ளது.

# தெருவோர கடையில் காரை நிறுத்தி மசாலா பொரியை ருசித்த பிரதமர் மோடி!

கொல்கத்தா, ஏப்.21:

மேற்கு வங்க பேரவைத் தேர்தலையொட்டி, ஜார்கிராம் உள்பட 4 இடங்களில் பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை பிரசாரம் மேற்கொண்டார்.



ஜார்கிராமில் பரபரப்பான சாலையொன்றில் பிரதமரின் வாகன அணிவகுப்பு சென்று கொண்டிருந்தபோது, திடீரென காரை நிறுத்தச் சொன்ன பிரதமர் மோடி, அந்த மாநிலத்தின் பிரபலமான சிற்றுண்டி உணவான 'ஜால்முரி' விற்கும் சிறிய கடைக்கு நடந்து சென்றார். 'ஜால்முரி' என்பது 'பேல்பூரி' போலவே அரிசிப் பொரியில் பச்சை மிளகாய் மற்றும் பிற மசாலாக்களைக் கலந்து தயாரிக்கப்படும் சிற்றுண்டியாகும். கடைக்காரரிடம் சென்ற பிரதமர் மோடி, தனக்கு சுவையான ஜால்முரி தயாரித்துத் தருமாறு கேட்டுக் கொண்டதுடன், அதன் விலை எவ்வளவு என்றும் கேட்டார். பிரதமரின் வாகன அணிவகுப்பு தனது கடை முன்னே திடீரென நின்றதுடன், அவரே இறங்கிவந்து, ஜால்முரி கேட்டதால் கடைக்காரருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. மற்ற கடைக்காரர்கள் மற்றும் அக்கம் பக்கம் இருந்தவர்களுக்கும் வியப்பில் ஆழ்ந்தனர். கடைக்காரரிடம் பணத்தை பெற்றுக் கொள்ளும்படி, பிரதமர் வற்புறுத்தி வழங்கினார். அப்போது, வழக்கமான அனைத்து மசாலாக்களையும் சேர்க்கலாமா என்று பிரதமரிடம் கடைக்காரர் கேட்டார். உடல் நலக் காரணங்களுக்காக, உப்பு பயன்படுத்துவதில்லை என்று பதிலளித்த பிரதமர், மற்ற அனைத்தையும் சேர்க்கலாம் என்றார்.

## 2027-இல் ஜி20 செயற்கைக்கோள் ஏவப்படும்: இஸ்ரோ தலைவர்!



ஹைதராபாத், ஏப்.21:

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் உள்ள இந்திய அரசுப் பொறியாளர்கள் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), இந்திய ஏரோனாடிகல் சொசைட்டி உள்ளிட்ட அமைப்புகளின் விஞ்ஞானிகள் மத்தியில் வி. நாராயணன் பேசியதாவது:

ஒரே ஏவுகலனில் (ராக்கெட்) எந்தவித மோதலுக்கும் உள்ளாகாமல் 100-க்கும் அதிகமான (104 செயற்கைக்கோள்கள்) செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்திய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. தற்போது, ஜி-20 நாடுகளின் பயன்பாட்டுக்காக (ஐரோப்பிய ஒன்றியம், ஆப்பிரிக்க ஒன்றியம், இந்தியா, அமெரிக்கா, ரஷியா, சீனா உள்பட 21 நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு) 'ஜி20' செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்கான பணியை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது. இத் திட்டத்தில் இந்தியா முன்னணி பங்கை வகிக்கிறது. பருவநிலை, காற்று மாசு மற்றும் தட்பவெப்ப நிலையைக் கண்காணிப்பதற்கான இந்த செயற்கைக்கோள் வரும் 2027-இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

மேலும், 'ஏராளமான வர்த்தக ரீதியிலான செயற்கைக்கோள் திட்டங்களையும் இஸ்ரோ செயல்படுத்தி வருகிறது. 34 நாடுகளின் 433 செயற்கைக்கோள் உள்பட வணிக ரீதியில் விண்ணில் செயற்கைக்கோள்களை ஏவும் நடவடிக்கைகளை இஸ்ரோ மேற்கொ ண்டுள்ளது.

வணிக ரீதியில் மிக அதிக எடைகொண்ட செயற்கைக்கோளையும் இஸ்ரோ விண்ணில் வெற்றிகரமாக ஏவியுள்ளது.

வரும் 2040-இல் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான பணியில் இஸ்ரோ தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

இத் திட்டத்தை இந்தியா வெற்றிகரமாகச் செயல்படுத்தினால், விண்கலம் ஏவுதல் தொழில்நு ட்பம், செயற்கைக்கோள் தொழில்நுட்பம், செயற்கை க்கோள் பயன்பாட்டு திட்டங்கள், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டங்களில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் சேர்ந்துவிடும். மேலும், 'சமுத்ரயான்' என்ற ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டத்துக்காக ஆழ்கடலின் உயர் அழுத்தத்தைத் தாங்கும் வகையிலான 100 மி.மீ. பருமனுடன் 2.2 மீட்டர் சுற்றளவுடன் கூடிய டைட்டேனியம் கலனை உருவாக்கும் பணியில் இஸ்ரோ ஈடுபட்டு வருகிறது' என்றார் அவர்.

## பேரவைத் தேர்தல்கள்! 11,000 சமூக ஊடக பதிவுகள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை!

புதுடெல்லி, ஏப்.21:




தமிழகம் உள்பட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பேரவைத் தோதல்களையொட்டி, சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட 11,000 சட்டவிரோத பதிவுகள் மற்றும் உள்ளடக்கங்கள் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தோதல் ஆணையம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.


கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் கடந்த ஏப்.9-ஆம் தேதி பேரவைத் தோதல்கள் நடைபெற்று முடிந்தன. தமிழகத்தில் ஒரே கட்டமாக ஏப்.23-ஆம் தேதியும், மேற்கு வங்கத்தில் இரு கட்டங்களாக ஏப்.23, 29 ஆகிய தேதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

தோதல் காலகட்டத்தில் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் சட்டவிரோதமான அல்லது செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மூலம் தவறாக சித்திரிக்கப்பட்ட உள்ளடக்கங்கள், தங்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட மூன்று மணி நேரத்தில் நடவடிக்கை உறுதி செய்யப்பட வேண்டும் என்று சமூக ஊடகங்களுக்கு தோதல் ஆணையம் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேபோல், பிரசாரத்துக்கு ஏ.ஐ. மூலம் உருவாக்கப்பட்ட உள்ளடக்கத்தைப் பயன்படுத்தும்போது, அது ஏ.ஐ. உள்ளடக்கம் அல்லது எண்ம முறையில் மேம்படுத்தப்பட்டது அல்லது செயற்கை உள்ளடக்கம் என தெளிவாக குறிப்பிட வேண்டும் என்று அரசியல் கட்சிகள், வேட்பாளாகள், தோதல் பிரசார பிரதிநிதிகளுக்கு தோதல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. வெளிப்படைத்தன்மை மற்றும் வாக்காளாகளின் நம்பிக்கையைப் பேணும் வகையில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## கொல்கத்தா காவல் துறை துணை ஆணையர், தொழிலதிபர் வீடுகளில் அமலாக்கத் துறை சோதனை!

கொல்கத்தா, ஏப்.21:




பண முறைகேடு தடுப்புச் சட்ட வழக்கில், கொல்கத்தா காவல் துறை துணை ஆணையா, தொழிலதிபா வீடுகளில் அமலாக்கத் துறை அதிகாரிகள் திடீா சோதனை நடத்தினா.

கொல்கத்தாவைச் சேர்ந்த பிரபல ரௌடி விஸ்வஜித் போத்தார் என்ற சோனா பப்பு மீது கொலை உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், அவா ரௌடி கும்பல் மூலம் சட்ட விரோதமாக நிதி திரட்டிய விவகாரத்தில் பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிந்து அமலாக்கத் துறை தனியாக விசாரணை நடத்தி வருகிறது.


இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, ரௌடி விஸ்வஜித் போட்டரின் இடங்களில் கடந்த 1-ஆம் தேதி அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினா. பிறகு அவரிடம் இருந்து ரூ.1.47 கோடி மதிப்பிலான தங்க நகை, ரூ.67.64 லட்சம் மதிப்பிலான வெள்ளி, கைத்துப்பாக்கி ஆகியவற்றை பறிமுதல் செய்தனா.

இதையடுத்து, கொல்கத்தா காவல் துறை துணை ஆணையா சாந்தனு சின்ஹா விஸ்வாஸுக்கு சொந்தமான வீடு உள்ளிட்ட 2 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை திடீா சோதனை நடத்தினா. இந்தச் சோதனையின்போது, சாந்தனு சின்ஹா வீட்டில் இல்லை.

தொழிலதிபா கைது: இதேபோல், சன் என்டா்பிரைசஸ் நிறுவனத்தின் நிா்வாக இயக்குநரான தொழிலதிபா ஜய் காம்தாரின் வீட்டிலும் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினா. இந்தச் சோதனையின் முடிவில் விசாரணைக்காக ஜய் காம்தாரை அமலாக்கத்துறை அலுவலகத்துக்கு அதிகாரிகள் அழைத்துச் சென்றனா. பிறகு அவரை சட்டவிரோத பணப்பரிவா்த்தனை சட்டத்தின்கீழ் கைது செய்தனா.

# தேசிய நெடுஞ்சாலைகளில் கனரக வாகனங்களை நிறுத்தக் கூடாது: உச்சநீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஏப்.21:



தேசிய நெடுஞ்சாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர, பிற இடங்களில் கனரக வாகனங்கள், சரக்கு மற்றும் பயணிகள் வாகனங்களை நிறுத்தக் கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் ராஜஸ்தான் மாநிலம் ஃபலோடி மாவட்டம், தெலங்கானா மாநிலம் ரங்காரெட்டி மாவட்டத்தில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் மொத்தம் 34 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவங்களை கவனத்தில் எடுத்துக்கொண்டு, சாலை விபத்துகள் குறித்து உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொண்டது.

இந்த வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, ஏ.எஸ்.சந்துாகா் ஆகியோா் அடங்கிய அமா்வு அண்மையில் பிறப்பித்த உத்தரவின் விவரம்:

தேசிய நெடுஞ்சாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர, பிற இடங்களில் கனரக வாகனங்கள், சரக்கு மற்றும் பயணிகள் வாகனங்களை நிறுத்தக் கூடாது. தேசிய நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் செல்லும் பாதை, சாலையோரம், வடிகால்கள், நடைபாதைகள் உள்ளிட்டவற்றில் புதிதாக தாபா, உணவகம் அல்லது வணிக கட்டுமானங்களுக்கு அனுமதி அளிக்கக் கூடாது.

நெடுஞ்சாலைப் பாதுகாப்பு மண்டலங்களுக்குள் அமைந்துள்ள எந்தவொரு இடத்துக்கும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (என்ஹெச்ஏஐ) அல்லது பொதுப் பணித் துறையின் முன் அனுமதி இல்லாமல் உரிமமோ, வா்த்தக ஒப்புதலோ, தடையில்லாச் சான்றோ வழங்கக் கூடாது. ஏற்கெனவே வழங்கப்பட்ட உரிமங்களை 30 நாள்களில் மறுஆய்வு செய்ய வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலைகள் செல்லும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நெடுஞ்சாலை பாதுகாப்பு பணிக்குழு அமைக்கப்பட வேண்டும். நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளை உரிய நேரத்தில் அகற்றும் பொறுப்பு மாவட்ட ஆட்சியருக்கும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கும் கூட்டாக இருக்க வேண்டும். நெடுஞ்சாலைகளில் நிலத்தின் பயன்பாட்டை மாற்றுவதற்குத் தடை விதிக்கும் அறிவிக்கையை மாநில அரசுகள் வெளியிட வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளில் தொடா்ந்து ரோந்து மேற்கொள்ளும் வகையில், மாநில காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறையினரை உள்ளடக்கி பிரத்யேக ரோந்து குழுக்கள் 30 நாள்களில் அமைக்கப்பட வேண்டும். பயணிகளின் பாதுகாப்பு என்பது அரசமைப்புச் சட்டத்தின் 21-ஆவது பிரிவின் கீழ், கண்ணியத்துடன் வாழும் உரிமையின் ஒருங்கிணைந்த அம்சமாகும் என்று தெரிவித்த நீதிபதிகள், அரசமைப்புச் சட்டத்தின் 142-ஆவது பிரிவு உச்சநீதிமன்றத்துக்கு அளித்துள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த உத்தரவுகளைப் பிறப்பித்தனா.

## நொய்டா போராட்ட வன்முறைக்கு மூளையாகச் செயல்பட்டவர் தமிழ்நாட்டில் கைது

புதுடெல்லி, ஏப்.21:

உத்தர பிரதேச மாநிலம் கவுதம் புத்த நகர் தொழில் மண்டலங்களில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், நியாயமான ஊதியம், சரியான நேரத்தில் சம்பளம் மற்றும் பாதுகாப்பான பணிச்சூழல் கோரி அண்மையில் தொடர் போராட்டம் நடத்தினர். இதில் வன்முறை வெடித்தது.

இந்தப் போராட்டத்துக்கு மூளையாக செயல்பட்டதாக ஆதித்யா ஆனந்த் (எ) ரஸ்தி மீது குற்றம் சாட்டப்பட்டது. தலைமறைவான ரஸ்தியைப் பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கு 1 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது. காவல் துறையிடம் சிக்காமல் இருக்க அவர் அடிக்கடி தனது இருப்பிடத்தை மாற்றிக்கொண்டே இருந்தார். அவருக்கு எதிராக ஜாமீனில் வெளிவர முடியாத வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு, பல மாநிலங்களில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இந்நிலையில், கவுதம் புத்த நகர் காவல் ஆணையரகம் மற்றும் உத்தரப் பிரதேச சிறப்பு அதிரடிப்படை (STF) இணைந்த குழு, ஆதித்ய ஆனந்தைத் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளி ரயில் நிலையத்தில் வைத்து கைது செய்தது. அவரிடம் நடத்திய விசாரணையின் போது, நொய்டாவில் தொழிலாளர் போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறைக்கான சதித்திட்டத்தில் தனக்கு பங்கு இருப்பதை ஆனந்த் ஒப்புக் கொண்டார். இந்தச் சதித்திட்டத்தின் பின்னணியில் உள்ள பெரிய வலையமைப்பைக் கண்டறியவும், பிற அம்சங்களை ஆராயவும் அவரை காவலில் எடுத்து விசாரிக்க உள்ளதாகக் காவல் துறை தெரிவித்துள்ளது.

## மேற்கு வங்கத்தில் 7 லட்சம் வாக்காளர்கள் புதியதாக சேர்ப்பு

புதுடெல்லி, ஏப்.21:

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தல் முதல் கட்ட வாக்குப் பதிவிற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், மாநில வாக்காளர் பட்டியலில் புதிதாக சுமார் 7 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர்களில், சுமார் 3.22 லட்சம் பேர் முதற்கட்டத் தேர்தலிலும், 3.88 லட்சம் பேர் இரண்டாம் கட்டத் தேர்தலிலும் வாக்களிக்க உள்ளனர். எனினும், இவர்களில் முதல்முறை வாக்களிக்கும் 18 வயது இளைஞர்கள் எத்தனை பேர் மற்றும் பாலின வாரியான விவரங்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

## ஒடிஸாவில் இந்தியாவின் முதல் அதிநவீன 3டி கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலை!

புவனேசுவர், ஏப்.21:

ஒடிஸா தலைநகர் புவனேசுவரத்தில் இந்தியாவின் முதல் அதிநவீன முப்பரிமாண (3டி) கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலையின் கட்டுமானப் பணிக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மாநில முதல்வர் மோகன் சரண் மாஜீ ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டினர்.

இதுதொடர்பாக மோகன் சரண் மாஜீ 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'ஒடிஸாவில் தொழில்துறை வேகமாக பரிணாம வளர்ச்சி அடைந்து வருகிறது.

இந்தியாவின் முதல் அதிநவீன 3டி கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது மைல்கல் தருணமாகும். இந்தத் தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டம் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதிநவீன மின்னணு உற்பத்தியில் ஒடிஸாவை பெரும் சக்தியாக நிலைநிறுத்தும். இது வெறும் தொழில் முதலீடு மட்டுமல்ல. வருங்கால தொழில்நுட்பங்கள் எங்கு உருவாக்கப்படும் என்பதற்கான பிரகடனம் என்று தெரிவித்தார். செமிகண்டக்டர் உற்பத்தி பணியில் சிப் பேக்கேஜிங் கடைசி கட்டமாகும். இந்நிலையில் சிப் பேக்கேஜிங் ஆலை குறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஒடிஸாவில் சிப் பேக்கேஜிங் ஆலை கட்டுமானம் மூலம், உலகின் மிக அதிநவீன சிப் பேக்கேஜிங் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு வரவுள்ளது. இந்த ஆலையை சுமார் ரூ.1,943 கோடி செலவில் கட்டமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இந்த ஆலை மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 2,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த ஆலையில் தயாரிக்கப்படும் சிப்கள் விண்வெளித் துறை, பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, 5ஜி தொழில்நுட்பங்கள், தரவு மையங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளுக்குப் பயன்படும்' என்று தெரிவித்தார்.

## ஒய்வூதியத் துறையில் எஃப்டிஐ வரம்பு அதிகரிப்பு?: விரைவில் மசோதா தாக்கலாக வாய்ப்பு!

புதுடெல்லி, ஏப்.21:

ஓய்வூதியத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு (எஃப்டிஐ) வரம்பை 100 சதவீதம் வரை மத்திய அரசு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், இதற்கான மசோதா அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட வாய்ப்புள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. தற்போது ஓய்வூதிய நிதியில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு 49 சதவீதமாக உள்ள நிலையில், அதை 100 சதவீதமாக அதிகரிக்கும் வகையில் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம் 2013-இல் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான மசோதாவை நிகழாண்டு நாடாளுமன்ற மழைக்கால அல்லது குளிர்கால கூட்டத்தொடரில் மத்திய அரசு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. ஏற்கெனவே காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு 100 சதவீதம் வரை அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஓய்வூதியத் துறையிலும் அதேபோன்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த ஆண்டு காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக அதிகரிக்கும் மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

# ஹார்முஸில் ஈரான் கப்பலை கைப்பற்றிய 'யுஎஸ் மரைன்ஸ்' - பதிலடிக்கு தெஹ்ரான் சூளுரை




**தெஹ்ரான் ஏப்.21:**

ஹார்முஸ் ஜலசந்தியை முற்றுகையிட்டுள்ள அமெரிக்காவின் மிக முக்கியப் படைப்பிரிவான யுஎஸ் மரைன்ஸ், அந்த வழியாகச் சென்ற ஈரான் கொடி பறந்த கப்பல் மீது தாக்குதல் நடத்தி அதனை கைப்பற்றியது. இதனால் ஆத்திரம் அடைந்துள்ள ஈரான், இதற்கு தக்க பதிலடி கொடுக்கப் போவதாக சூளுரைத்துள்ளது.

கடந்த பிப்.28-ம் தேதி அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தொடங்கின. இதையடுத்து, ஈரான் பதிலடி கொடுக்கத் தொடங்கியது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியது. இரு தரப்புக்கும் இடையே ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த இந்த மோதல், பாகிஸ்தான் அரசு எடுத்த சமரச முயற்சி காரணமாக இரு வார காலத்துக்கான போர் நிறுத்தம் கடந்த 8ம் தேதி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் தலைமையிலான குழுவினரும், நாடாளுமன்ற சபாநாயகர் முகம்மது பாகர் கலிபா தலைமையிலான ஈரான் குழுவினரும் இந்த மாதத்தின் 2-வது வாரத்தில் இஸ்லாமாபாத்தில் அமைதி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். எனினும், இந்த பேச்சுவார்த்தையில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. இதனிடையே, போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தாலும் ஈரானிய துறைமுகங்கள் மீதான தனது கடற்படை முற்றுகை தொடரும் என்று அமெரிக்கா கூறியது. இதனால், ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதாக அறிவித்த ஈரான், சில மணி நேரங்களில் தனது முடிவைமாற்றிக் கொண்டு அவ்வழியைக் கடக்க முயன்ற கப்பல்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. இந்நிலையில், ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் அமெரிக்க கடற்படையின் முற்றுகையை மீறி ஈரான் கொடி ஏற்றப்பட்ட அந்நாட்டின் சரக்கு கப்பல் ஒன்று சென்றது. அந்த கப்பல் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்க கடற்படை, அந்த சரக்கு கப்பலை கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளது. இரண்டு வார கால போர் நிறுத்தம் முடிவுக்கு வருவதற்கான காலக்கெடு நெருங்கும் நிலையில், அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் மீண்டும் போர் தீவிரமடைவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# உக்ரைன் போரால் ரஷ்யாவுக்கு தினமும் ரூ.926 கோடி இழப்பு



**மாஸ்கோ, ஏப்.21:**

உக்ரைன் ட்ரோன்கள் மூலம் நடத்தும் தாக்குதலால் ரஷ்யாவுக்கு தினமும் ரூ.926 கோடி இழப்பு ஏற்படுகிறது.

ரஷ்யாவுக்கு அதிக வருவாய் ஈட்டித் தரும் தொழில் கச்சா எண்ணெய் விற்பனையும் முக்கியமானது. அதனால், ரஷ்யாவின் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு மையங்கள், சேமிப்பு கிடங்கு கள், துறைமுகங்கள் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்யாவில் உள்ள 10 பெரிய கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் டுவாப்சி சுத்திகரிப்பு நிலையம், ரோஸ்நெஃப்ட் சுத்திகரிப்பு மையம் ஆகியவையும் அடங்கும். இங்கு உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்துவதால் தீ விபத்துகள் ஏற்பட்டு அருகில் உள்ள சேமிப்பு கிடங்குகளுக்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் ஏற்றுமதி நடைபெறும் ரஷ்யாவின் பிரிம்மோர்ஸ்க், உஸ்ட்-லுகா, ஷேஸ்க்ஹரிஸ் மற்றும் டுவாப்சி ஆகிய பகுதிகள் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்துகிறது. இதன் காரணமாக ரஷ்யாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி 8,80,000 பேரல்கள் குறைந்து, நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் டாலர் (ரூ.926 கோடி) இழப்பு ஏற்படுவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

# லெபனானில் இயேசு சிலையை சேதப்படுத்திய இஸ்ரேல் வீரர்; இஸ்ரேல் அமைச்சர் கண்டனம்

**டெல்அவிவ், ஏப்.21:**



அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு எதிரான போரில், ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு லெபனானில் இருந்து செயல்பட்டது. இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்தது. இதனால், பதிலடியாக லெபனானை இஸ்ரேல் தாக்கியது. இதில், லெபனான் நாட்டில் பொதுமக்கள் பலர் பலியானார்கள். உடனடியாக போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுத்த வேண்டும் என்று இஸ்ரேலிடம் லெபனான் கோரி வந்தது.

இந்த நிலையில், லெபனான் ஜனாதிபதி ஜோசப் ஆவன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகிய இருவரும், சிறந்த முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, பெரிய அளவில் தீர்வு ஒன்று ஏற்படுவதற்கான நடவடிக்கையாக, இரு தலைவர்களும் தற்காலிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி கொள்ள முடிவு செய்துள்ளனர்.

இதனை அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் உறுதிப்படுத்தி உள்ளார். இதன்படி, லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே 10 நாட்களுக்கு தற்காலிக போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில், தெற்கு லெபனானில் இஸ்ரேல் பாதுகாப்பு படையை சேர்ந்த வீரர் ஒருவர், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் சிலை ஒன்றை சேதப்படுத்த கூடிய புகைப்படம் ஒன்று சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது. இதுபற்றி இஸ்ரேல் ராணுவம் விசாரணை மேற்கொண்டு வருகிறது. கிறிஸ்தவ மத அடையாளத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில், நடந்து கொண்ட இந்த சம்பவத்திற்கு இஸ்ரேல் வெளிவிவகார துறை மந்திரி கிதியோன் சார் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார்.

எங்களுடைய மதிப்புக்கு உரிய விசயங்களில் இருந்து முற்றிலும் முரணான செயல் இது. அனைத்து மதங்களையும், அவர்களுடைய புனித அடையாளங்களையும் இஸ்ரேல் மதிக்கிறது என்று வலியுறுத்தி கூறிய அவர், இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து, இந்த விவகாரம் பற்றி இஸ்ரேல் பாதுகாப்பு படை விசாரணை நடத்தி வருவதற்காக பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்.

# ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை; புல்லட் ரெயில் சேவை பாதிப்பு

**டோக்கியோ, ஏப்.21:**



ஜப்பானின் வடகிழக்கே இவாதே மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில் பசிபிக் பெருங்கடலில் இன்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக பதிவாகி உள்ளது. இந்நிலநடுக்கம் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இதனை ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இதனை தொடர்ந்து, சுனாமி எச்சரிக்கையும், கடலில் 10 அடி உயரத்திற்கு (3 மீட்டர் உயரம்) அலைகள் எழும் என்றும் எச்சரிக்கப்பட்டு உள்ளது. இவாதே மாகாணத்தின் ஹொக்கைடோ நகரின் பல பகுதிகளில் சுனாமி தாக்கம் இருக்கும் என தகவல் தெரிவிக்கின்றது. எனினும், ஹொக்கைடோ அணுமின் நிலையத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் நிகழவில்லை என மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று, நிலநடுக்கம் தொடர்ச்சியாக, தலைநகர் டோக்கியோவில் இருந்து ஆமோரி நகருக்கான புல்லட் ரெயில் சேவை பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால், வடக்கு கடலோர பகுதிக்கு உடனடியாக சுனாமி அலைகள் வந்தடையும் என்றும் ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது. அதனால், கடலோர பகுதிகள் மற்றும் ஆற்றங்கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி எச்சரிக்கப்பட்டு உள்ளது. சுனாமி அலையின் பாதிப்புகள் தொடர்ச்சியாக இருக்ககூடும் என்றும், எச்சரிக்கை வாபஸ் பெறப்படும் வரை பாதுகாப்பான பகுதிகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

# இஸ்ரேல் உடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஸ்பெயின் வலியுறுத்தல்

**ஜிப்ராலியோன், ஏப்.21:**



இஸ்ரேல் உடனான கூட்டமைப்பு ஒப்பந்தத்தை ஐரோப்பிய ஒன்றியம் 48 மணி நேரத்துக்குள் முறித்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப் போவதாக ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் தெரிவித்துள்ளார்.

சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் பேரணியில் உரையாற்றிய பெட்ரோ சான்செஸ், "இஸ்ரேல் உடனான தனது கூட்டமைப்பை இந்த செவ்வாய்க் கிழமைக்குள் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்ற முன்மொழிவை ஸ்பெயின் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கும்.

ஸ்பெயின், இஸ்ரேலின் நண்பன்தான். ஆனால், அந்த நாடு தனது நடவடிக்கைகளைப் பகிர்ந்து கொள்வதில்லை. எனவே, ஸ்பெயின் முன்னெடுக்கும் இந்த கோரிக்கையில் மற்ற ஐரோப்பிய நாடுகளும் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் மிகவும் கொடூரமானது. நாடுகளுக்கு இடையேயான உறவில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளுக்கான மரியாதை மிகவும் முக்கியம்.

இவ்விஷயத்தில் இஸ்ரேல் இதை கருத்தில் கொள்ளவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்துடனான இஸ்ரேலின் உறவுக்கு அடிப்படையாக இருக்கும் ஒப்பந்தத்தின் பல விதிகளை அந்த நாடு காலில் போட்டு மிதிக்கிறது. எனவேதான், இஸ்ரேலுக்கு எதிராக ஒரு ராஜதந்திர போரை ஸ்பெயின் நடத்துகிறது" என தெரிவித்துள்ளார்.


ஸ்பெயினின் தற்போதைய நிலைப்பாட்டை இதற்கு முன் பெல்ஜியம், சுலோவீனியா, ஃபின்லாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, லக்சம்பர்க், போர்ச்சுக்கல், ஸ்வீடன் ஆகிய நாடுகள் ஆதரித்தன. அதேநேரத்தில், பல்கேரியா, குரோஷியா, சைப்ரஸ், ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, இத்தாலி, லுத்வேனியா ஆகிய நாடுகள் எதிர்த்தன.

இஸ்ரேல் - ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான வர்த்தக மதிப்பு 45 பில்லியன் யூரோவுக்கும் அதிகம். எனவே, இரு தரப்புக்கும் இடையேயான ஒப்பந்தத்தை நிறுத்துவதோ அல்லது முறிப்பதோ பெரும் பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

# அமைதியை முன்னெடுப்பதில் உறுதியாக உள்ளோம்: ஈரானிடம் கூறிய பாகிஸ்தான் பிரதமர்

**இஸ்லாமாபாத், ஏப்.21:**

ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியனுடன் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் நேற்று தொலைபேசி வாயிலாக பேசினார். சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்ற இந்த உரையாடலில், ஷெரீப் பல முக்கிய தகவல்களை பகிர்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுகுறித்து பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், தற்போதைய பிராந்திய நிலைமை குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆலோசனை நடத்தினர். கடந்த 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்காக, சபாநாயகர் முகம்மது பகர் காலிபாப் மற்றும் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தலைமையிலான உயர்மட்ட பிரதிநிதி குழுவை அனுப்பியதற்கு ஈரான் அதிபரிடம் ஷெபாஸ் ஷெரீப் நன்றி தெரிவித்தார்" இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா-ஈரான் இடையே நடைபெறும் மோதலை முடிவுக்கு கொண்டு வர பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்து வருகிறது. இருநாடுகளுக்கிடையேயான முதல் கட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது.

இந்நிலையில், இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை இன்று நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், இதில் ஈரான் பங்கேற்குமா என்பது இன்னும் உறுதியாக தெரியவில்லை. மேலும், இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாவிட்டால் ஈரான் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்படும் என்று டிரம்ப் எச்சரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈரானின் எரிசக்தி நிலையங்கள் தகர்க்கப்படும்: ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஏப்.21:**

அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்றிரவு வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: ஈரானுக்கு நல்ல வாய்ப்பை வழங்கியிருக்கிறோம். நேர்மையான, ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தத்தை முன்வைத்திருக்கிறோம். இதைப் பயன்படுத்தி அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வது ஈரானுக்கு நல்லது. இல்லையெனில் ஈரானின் அனைத்து எரிசக்தி நிலையங்கள், அனைத்து பாலங்களையும் தகர்ப்போம்.

இனிமேலும் பொறுமை காக்க முடியாது இது இறுதி எச்சரிக்கை. இவ்வாறு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் நேற்று கூறும்போது, "நாங்கள் எந்த நாட்டின் மீதும் தாக்குதல் தொடுக்கவில்லை. எங்கள் நாட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. எங்களை தற்காத்துக் கொள்ளவே பதில் தாக்குதல்களை நடத்தினோம். ஈரானுக்கு அணு சக்தி உரிமை இருக்கக்கூடாது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியிருக்கிறார். இது எங்களின் உரிமை" என்று தெரிவித்து உள்ளார்.

# ஈரானில் இஸ்ரேலுக்கு உளவு பார்த்த இருவருக்கு மரண தண்டனை!

**தெஹ்ரான், ஏப்.21:**

இஸ்ரேல் உளவுத் துறையுடன் தொடர்பில் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இருவருக்கு ஈரான் அரசு இன்று மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் உடனான போர் தொடங்கியதிலிருந்து ஈரானில் இதுபோன்ற மரண தண்டனைகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இஸ்ரேலுக்கு உளவு பார்த்த குற்றவாளிகள் முகமது மசூம் ஷாகி மற்றும் ஹமீத் வலீதி ஆகிய இருவருக்கு இன்று அதிகாலை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஈரான் நீதித் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதில், இஸ்ரேலின் உளவுத் துறையான மொஸ்ஸாட் அமைப்புடன் இருவரும் தொடர்பில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் எப்போது கைது செய்யப்பட்டனர் போன்ற விவரங்கள் குறிப்பிடப்படவில்லை.

மனித உரிமைக் அமைப்புகள் வெளியிட்டுள்ள தகவல்களின்படி, சீனாவிற்கு அடுத்ததாக உலகில் அதிக எண்ணிக்கையில் மரண தண்டனைகளை நிறைவேற்றும் நாடாக ஈரான் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இதுவரை போரில் 3,375 பேர் உயிரிழப்பு: ஈரான் தடயவியல் துறைத் தலைவர் தகவல்

**தெஹ்ரான், ஏப்.21:**




ஈரானுக்கும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கும் இடையிலான போரில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த புதிய எண்ணிக்கையை ஈரான் வெளியிட்டுள்ளது. இப்போரில் இதுவரை 3,375 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஈரானின் தடயவியல் துறைத் தலைவர் அப்பாஸ் மஸ்ஜெதி தெரிவித்தார்.

ஈரான் நீதித்துறையின் 'மிசான்' செய்தி நிறுவனம் மற்றும் பிற ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், ஈரான் தடயவியல் அமைப்பின் தலைவரான அப்பாஸ் மஸ்ஜெதி இந்த தகவலை தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, உயிரிழந்தவர்களில் நால்வர் மட்டுமே இன்னும் அடையாளம் காணப்படாமல் உள்ளனர் என மஸ்ஜெதி கூறினார்.

அவர் அளித்த தகவல்களில், உயிரிழந்தவர்களில் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை குறித்த தனித்தனி விவரங்கள் இடம்பெறவில்லை. அதே நேரத்தில், உயிரிழந்தவர்களில் 2,875 பேர் ஆண்கள் என்றும், 496 பேர் பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், உயிரிழந்தவர்களில் 383 பேர், 18 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் என்றும் மஸ்ஜெதி தெரிவித்தார்.

இந்த சூழலில், ஹார்முஸ் ஜலசந்திக்கு அருகே ஈரானின் சரக்குக் கப்பல் ஒன்றை அமெரிக்கா கைப்பற்றியுள்ளதால் மீண்டும் பதற்றம் உருவாகியுள்ளது.

கடந்த வாரம் ஈரான் துறைமுகங்கள் மீது கடற்படை முற்றுகையை அறிவித்த பிறகு, அமெரிக்கா மேற்கொண்ட முதல் கைப்பற்றும் நடவடிக்கை இதுவாகும்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைகடற்கொள்ளைச் செயல் என்றும், போர்நிறுத்த ஒப்பந்த மீறல் என்றும் ஈரான் குறிப்பிட்டுள்ளதுடன், இதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

மேலும், அமெரிக்க நடவடிக்கையானது,தற்போதைய போர் நிறுத்தத்தின் நிலைத்தன்மை குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது. மேலும், உலகளாவிய எரிபொருள் விநியோகத்தில் நீண்டகாலத் தடை ஏற்படக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக, கச்சா எண்ணெய் விலையும் உயர்ந்துள்ளன.

# ஜம்மு காஷ்மீரில் பேருந்து கவிழ்ந்து விபத்து: 22 பேர் உயிரிழப்பு





# ‘பயணிகளின் வசதி, கண்ணியத்தை கருத்தில் கொண்டு முடிவுகளை எடுங்கள்’

# விஜய் வேட்புமனுவில் சொத்து மதிப்பை குறைத்துக் காட்டியது முறைகேடானது

# ஆந்திராவில் உள்ள சுரங்கத்தில் ஆண்டுக்கு 1,000 கிலோ தங்கம் உற்பத்தி செய்ய இலக்கு

## ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை; புல்லட் ரெயில் சேவை பாதிப்பு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 21.04.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ-பேப்பர்